மாதம் இருமுறை

PUBLIC LIBRARY JAFFNA

# எங்கள் தேசம்

එංගල් දේසම

QD/28/NEWS/2013

Engal Thesam


மலர்: 12 இதழ்: 22 257 நவம்பர் 15-30, 2013 விலை: ரூபா. 30.00

## CHOGM விழா

CHOGM 2013 Sri Lanka

## சோகத்தில் முடியக் கூடாது

### ஊரானூட்டுக் கோழியறுத்து கலியாணத் தோரணம்





## என்னை விசாரிக்க நீ யார்?

## மனோ கணேசனின் புலம்பல்

## இனம்சார் அரசியலை நோக்கி - இலங்கை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனிதம் வாழுமிடமெல்லாம் எங்கள் தேசமே!

# போதைப்பொருள் விற்பனை குறித்து பெற்றோர் அவதானத்துடன் இருக்கவேண்டும்

-சுகாதார அமைச்சர்-



பாடசாலை மாணவர்களை இலக்குவைத்து முன்னெடுக்கப்படும் போதைப்பொருள் விற்பனை குறித்து மிகவும் அவதானத்துடன் இருக்கவேண்டும் என சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேன பெற்றோர்களிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

வரக்காபொல ஆதார வைத்திய சாலை அபிவிருத்திப் பணியில் பங்குபற்றி அதில் உரையாற்றும் போதே அமைச்சர் இவ்வாறு கூறியுள்ளார். அவர் அங்கு மேலும் தெரிவித்துள்ளதாவது; பாடசாலைகளுக்கு அருகிலுள்ள சில கடைகளில் மாணவர்களை இலக்குவைத்து பாபுல், பீடா, பான்பராக், மாவா போன்ற போதைப்பொருள்கள் விற்பனை செய்யப்படுகின்றன. இவைகளை பயன்படுத்துவதன் மூலம் புற்றுநோய் ஏற்படுகிறது.

இந்த போதைப்பொருட்களுக்கு பல மாணவர்கள் அடிமையாகியுள்ளதாக தெரியவந்துள்ளது.

போதைப்பொருள் பாவனைக்கு எதிராக பொலிஸார், அரச ஊழியர்கள் மற்றும் அரசியல்வாதிகள் ஒன்றிணைந்து நாடு முழுவதும் தீவிர பிரச்சாரம் மேற்கொள்ள வேண்டும் என அமைச்சர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

# மீள்குடியேறும் மக்களுடைய விடயத்தில் இரக்க மனப்பான்மையோடு நடந்துகொள்ளுங்கள்

## வடமாகாண சபை உறுப்பினர் றிப்கான் பதியுத்தீன் வேண்டுகோள்

இன்ஹாம் இமாம்



நானாட்டன் பிரதேச சபைக்குட்பட்ட பொன்தீவு கண்டல் மற்றும் பூவரசங்குளம் பகுதியில் மீள்குடியேறச் சென்ற வடபகுதி முஸ்லிம்களுடைய மீள்குடியேற்ற விடயத்தில் கருணையோடு நடந்து கொள்ளுமாறு வடமாகாண சபை உறுப்பினர் றிப்கான் பதியுத்தீன் வேண்டுகோள் விடுத்தார்.

முஸ்லிம்களின் மீள்குடியேற்றம் தொடர்பாக நானாட்டான் பிரதேச சபையில் நடைபெற்ற சமாதான கூட்டமொன்றில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

கடந்த 23 வருடங்களுக்கு முன் புலிகளால் விரட்டியடிக்கப்பட்ட பொன்தீவுக் கண்டல் மற்றும் பூவரசங்குளப்பகுதி மக்கள் சட்டரீதியாக காணிகளைப் பெற்று தமது வீடுகளை அமைக்க முற்பட்டபோது, இனங்காணப்படாத சில சக்திகள் இம்மக்களுடைய மீள்குடியேற்றத்தில் பலவிதமான முட்டுக்கட்டைகளைப் போட்டு, இவர்களுடைய துயரமான வாழ்வுடன் விளையாட முற்படுவதாக அவர் தெரிவித்தார்.

துன்பங்களுடன் வாழும் எமது மக்களின் மீள்குடியேற்ற விடயத்தில் மனிதாபிமானத்துடன் நடந்து கொள்ளுமாறு சம்பந்தப்பட்ட தரப்பினரை அவர் வேண்டிக் கொண்டார்.

இடப்பெயர்வுக்கு முன் ஒரு தாய் பிள்ளைகள்போல் வாழ்ந்த இவர்களின் வாழ்வில் மீண்டும் ஒற்றுமையும் நிம்மதியும் மலர சம்பந்தப்பட்டவர்கள் தூய எண்ணத்தோடு நடக்கவேண்டும் எனவும் அவர் கேட்டுக்கொண்டார்.

இக்கூட்டத்தில் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன், மாகாணசபை உறுப்பினர்கள் றிப்கான் பதியுத்தீன் அஸ்மின் அய்யூப் சிராய்வா மற்றும் குணசீலன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

# பொலிஸ் அதிகாரிகள் பொதுமக்களுக்கு நல்ல நண்பர்களாக திகழவேண்டும்

பழுலுல்லாஹ் பர்ஹான்



பொலிஸ் அதிகாரிகள் பொது மக்களுக்கு நல்ல நண்பர்களாக திகழவேண்டும் என சட்டம் மற்றும் ஒழுங்கு அமைச்சின் செயலாளர் நந்த மல்லவாராச்சி தெரிவித்தார்.

குறித்த அமைச்சின் செயலாளராக பதவியேற்று முதற்தடவையாக மட்டக்களப்புக்கு விஜயம் செய்து, கிழக்கு மாகாணத்திலுள்ள சகல பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிகளுடன் நடைபெற்ற சந்திப்பின்போதே அவர் இதனைத் தெரிவித்தார். குறித்த இந்நிகழ்வானது மட்டக்களப்பு மாநகர சபை மண்டபத்தில் இடம்பெற்றது.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் தெரிவித்ததாவது; நாட்டையும் நாட்டு மக்களையும் பாதுகாக்க வேண்டிய முழுப் பொறுப்பும் பொலிஸாருக்குள்ளது. கடந்த 30 வருட காலத்தில் கடுமையாக பாதிக்கப்பட்டவர்களாக வடக்கு, கிழக்கு மாகாண மக்களுள்ளனர்.

பொலிஸ் உத்தியோகத்தர்களாக கடமையாற்றும் நீங்கள் மக்களுக்காக சேவையாற்ற வேண்டும். பொதுமக்கள் பொலிஸ் நிலையங்களுக்கு முறைப்பாடுகள் செய்ய வரும்போது அவர்களுடன் சிலர் கடுகடுப்பாக நடந்துகொள்கின்றனர். அவ்வாறு ஒருபோதும் நடந்து கொள்ளக்கூடாது. அவர்களுடைய தேவைகளை முடிந்தவரையில் நிறைவேற்றி வைக்க வேண்டிய பொறுப்பு உங்களிடமே உள்ளது.

பொலிஸாருக்கென தனியான எகடமியொன்றை கல்விரீதியாக மிக விரைவில் ஆரம்பிக்க உள்ளோம். இது தவிர நாட்டிலுள்ள சகல பொலிஸ் நிலையங்களுக்கும் கணினிகளை வழங்கி அனைத்து செயற்பாடுகளையும் கணினி ஊடாக செய்வதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருகின்றோம்.

பொலிஸ் அதிகாரிகள் அனைவரும் மக்களின் நண்பர்களாகவும் நியாயமானவர்களாகவும் செயற்படும் பட்சத்தில், பொலிஸ் நிலையங்களை நாட்டில் சிறந்த சேவை செய்யக்கூடியவையாக கட்டியெழுப்ப முடியும்.

# இலவசமாக தொழில்வாய்ப்பை பெற்றுக்கொடுக்கும் இன்சைட் தொழில் வங்கி

இலங்கையின் இளைஞர் யுவதிகள் முற்றிலும் இலவசமாக தொழில் வாய்ப்பை பெற்றுக் கொள்ள இன்சைட் தொழில் வங்கி வலயமைப்பு வழிகாட்டுகிறது.

2013 ஜூலையில் ஆரம்பிக்கப்பட்ட இன்சைட் தொழில் வங்கியானது தொழில்வாய்ப்பைத் தேடுவோருக்கு பொருத்தமான இடங்களைத் தெரிவுசெய்து வழங்குவதையும் தொழில் வழங்குவோருக்குத் தேவையான பொருத்தமான தொழிலாளர்களை பெற்றுக் கொடுப்பதையும் நோக்கமாகக் கொண்டு செயற்படுகிறது.

இன்சைட் கல்வி நம்பிக்கை நிதியத்தின் கீழ் இலாப நோக்கற்ற நிறுவனமாக ஆரம்பிக்கப்பட்டுள்ள இத்தொழில் வங்கி மூலமாக கல்வி மற்றும் பயிற்றுவிப்பு, தொழில் வழிகாட்டல், வியாபார அபிவிருத்தி, பாடசாலை அபிவிருத்தி, மனித வளத்தை கட்டியெழுப்புதல் ஆகிய சேவைகள் வழங்கப்படுகின்றன.

INSIGHT

தொழிலின்றி உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் பொருத்தமான தொழில்வாய்ப்பைத் தேடுவோர் இளைஞர், யுவதிகள் முற்றிலும் இலவசமாக இன்சைட் தொழில் வங்கியில் தம்மைப் பதிவுசெய்து கொள்ளமுடியும்.

இன்சைட் தொழில் வங்கியில் தம்மைப் பதிவு செய்வதற்கும் இதுபற்றிய மேலதிக விபரங்களை பெற்றுக் கொள்வதற்கும் 077-1448877 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ள முடியும். அல்லது www.insightjobs.org என்ற வலயத்தளத்தைப் பார்வையிட முடியும்.

# களனி கங்கைக்கு மேலாக ஆறு வழிகள் கொண்ட புதிய பாலம்

ஐ.ஏ.காதிர்கான்

கொழும்பு - களனி பாலத்தில் வாகனங்களின் நெரிசல்களைக் குறைக்கும் ஆறு பாதைகள் கொண்ட புதிய பாலம் ஒன்றை அமைக்க, பெருந்தெருக்கள் அபிவிருத்தி அதிகார சபை நடவடிக்கை எடுத்துள்ளது.

கொழும்பு- கட்டுநாயக்க அதிவேகப் பாதை திறக்கப்பட்டுள்ளதால் களனி பாலத்தில் வாகன நெரிசல் அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இதன் காரணமாக ஜப்பான் அரசின் உதவியில் தற்போதுள்ள பாலத்துக்கு அருகில், கொழும்பு - கட்டுநாயக்க அதிவேகப் பாதைக்கு இணைந்ததாக, ஆறு பாதைகள் கொண்ட புதிய பாலமொன்று அமைக்கப்படும்.

இந்தப் பாலம் அமைக்கப்படுவதனால், சுற்றுப்புற சூழலுக்கு ஏற்படக்கூடிய பாதிப்புகள் தொடர்பில் ஆய்வுகள் நடத்தப்பட்டு அந்த அறிக்கை பெருந்தெருக்கள் அபிவிருத்தி அதிகார சபையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில், பொதுமக்களின் கருத்துக்களை அறியவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.



இறக்காமம் றோயல் கனிஷ்ட கல்லூரியில் கல்வி கற்கும் மாணவர்களின் தாய்மார்களுக்கான பெற்றோர் பிள்ளைகள் உளவியல் விழிப்புணர்வு நிகழ்ச்சியொன்று இறக்காமம் அபிவிருத்திச் சங்க கட்டார் நிறுவனத்தினால் அண்மையில் நடத்தப்பட்டது. கல்லூரியின் அதிபர் ஐனுல் ரிபாயா முஹமட் நஸீர் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் சம்மாந்துறை வலயக் கல்விப் பணிப்பாளர் எம்.கே.எம். மன்சூர், இறக் காமம் கோட்டக் கல்வி அதிகாரி ஏ.எல்.எம். சித்தீக் ஆகியோர் சிறுவர் பாதுகாப்பு மற்றும் சமூக உத்தியோகத்தர் எம்.எச். வஹாப் ஆகியோர் உரையாற்றினர்.

படமும் தகவலும்: எம்.ஐ.எம். ஹாபி


# மீனவர்கள் பாதுகாப்பு அங்கி அணிவது கட்டாயமாக்கப்பட்டுள்ளது

ஐ.ஏ. காதிர் கான்

அடுத்த வருடம் முதல், கடலில் மீன்பிடி தொழில் ஈடுபடும் மீனவர்கள் பாதுகாப்பு அங்கிகளை பயன்படுத்துவது கட்டாயப்பட்டுள்ளது. இதனை அணியாது கடலுக்குச் செல்லும் மீனவர்கள் தொடர்பில் சட்ட நடவடிக்கை எடுக்கவுள்ளதாக மீன்படி திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் நிமல் ஹெட்டியாராச்சி தெரிவித்துள்ளார்.

இலங்கையில் ஒரு லட்சத்து 85 ஆயிரத்திற்கும் அதிகமானோர் மீன்பிடி தொழிலில் ஈடுபட்டுள்ளனர். கடந்த காலங்களில் இடம்பெற்ற அனர்த்தங்களை கருத்திற்கொண்டே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஊரானூட்டு கோழியறுத்து கலியாணத் தோரணம்

-பஷீர் அலி-



ஏழ்மை நிலையிலுள்ள குடும்பமொன்றில் பிறந்த மூத்த பெண்பிள்ளைக்கு மாப்பிள்ளை தேடி தந்தைக்கு வெறுத்தேவிட்டது. தனது குடும்பத்துக்கு ஊர்முழுக்க ஏகப்பட்ட அவப்பெயர். இந்த அவப்பெயரை துடைத்தெறிய சந்தர்ப்பம் பார்த்திருந்த தந்தைக்கு நல்ல வரனொன்று கிடைத்தது.

எனவே, இத்திருமணத்தை ஜாம் ஜாம் என்று நடத்தி நல்லபெயர் வாங்க வேண்டுமென்று நினைத்து பிள்ளைகளின் காதிலும் கழுத்திலும் மின்னியவைகளை பிடிங்கி அடகுவைத்தார். ஊரெல்லாம் வழித்துத்துடைத்து வட்டிக்குக் கடன் வாங்கி தனது வீட்டுக்கு தோரணம் கட்டினார்.

இவர் போகிற போக்கைப் பார்த்தால் வீட்டைப் பிரித்து பந்தல் போட்டுடுவாரோ என்று ஊரார் பேசுமளவு அவரது பந்தா இருந்தது. கல்யாணத்துக்கு வர முடியாது என்று வேறு கூறிவிட்டார். மனமுடைந்துபோன தந்தை சுதாகரித்துக் கொண்டு தனது வீட்டுத் தோரணத்தை அலங்கரித்துக் கொண்டே இருந்தார்.

எப்படியோ கல்யாணமும் நடந்து முடிந்து விட்டது. அதன் மூலம் தனது குடும்பத்துக் கேற்பட்ட இழுக்கிலிருந்து மீள முடியுமா என்ற கேள்வி ஒரு பக்கம், தோரணம் கட்டி பந்திவைத்து சாப்பாடு போட்ட கடனுக்கு யார் கழுத்து அடைமானம் வைக்கப்படப்போகிறதோ என்ற ஏக்கம் இன்னொரு பக்கமாக அந்தக் குடும்பம் தத்தளித்துக் கொண்டிருக்கிறது.




நமது நாட்டின் தற்போதைய நிலையும் இப்படித்தான் இருக்கிறது.

இறுதிக்கட்ட யுத்தத்தில் இடம்பெற்றதாகக் கூறப்படும் மனித உரிமை மீறல்கள் குறித்து சர்வதேச சமூகம் கடும் அதிருப்தியை வெளியிட்டு வந்தது. டயஸ்போராவின் அடுப்பங்கரை தொட்டு ஐ.நா. வரை இந்த விவகாரமே சூடுபிடித்திருக்கின்றது.

எனவே, இக்குற்றச்சாட்டுகளிலிருந்து மீள என்னென்ன வழிகள் இருக்கின்றனவோ அவற்றையெல்லாம் அரசாங்கம் செய்து பார்த்துவிட்டது. எல்லாம் செவிடன் காதில் ஊதிய சங்குதான்.



இச்சந்தர்ப்பத்திலேயே பொதுநலவாய நாடுகளின் தலைவர்கள் மாநாட்டை நடத்துவதற்கான ஒரு சந்தர்ப்பம் கிடைத்தது. தம்மீது அதிருப்தி கொண்டுள்ள அல்லது குற்றச்சாட்டுகளை முன்வைக்கின்ற எல்லா நாடுகளின் காலடிக்கும் சென்று தமது பக்க நியாயத்தை தெரியப்படுத்தி முடிப்பது சாத்தியமில்லை என்றிருந்த நிலையில், எல்லோரையும் தனது காலடிக்கு அழைத்து கண்முன்னே காட்டுவது இலகுவாகப்பட்டது. எனவே, கொமன்வெல்த் பழம் நழுவி பாலில் விழுந்தது போலத்தான் இலங்கைக்கு.



எனவே, கொமன்வெல்த் மாநாடு எனும் கல்யாணத்துக்கு வரும் விருந்தினர்களை மனம் கோணாமல் கவனித்து, நல்லபெயர் வாங்க என்னவெல்லாம் செய்யமுடியுமோ அதையெல்லாம் பட்டியலிட்டது அரசாங்கம்.

அதில் முக்கியமானதுதான் கல்யாணவீட்டுத் தோரணம்போல கொழும்பு நகரை மணப்பெண்ணாக சோடிக்கும் நிகழ்வு.

வீட்டுக்கு வரும் விருந்தினர்கள் நமது வீட்டைப் பார்த்து காறி உமிழ்ந்துவிட்டுப் போவது யாருக்கும் விருப்பமில்லாத ஒன்றுதான். அதுபோல, மாநாட்டுக்கு வரும் உலகத் தலைவர்கள் நமது நாட்டைப் பார்த்து 'நல்ல பசுந்து' என சொல்வது நமக்கும் பெருமைதான். ஆனால், மாநாட்டுக்காக மேற்கொள்ளப்படும் செலவுகள் மாநாடு முடிந்த கையோடு நமது கழுத்தில் நெருப்பு வளையமாக விழப்போகிறதோ என்ற அச்சம்தான் இப்போதெல்லாம் கதிகலங்க வைக்கிறது.

கொமன்வெல்த் மாநாட்டை அடுத்து நீண்ட காலத்தில் நாட்டின் பொருளாதாரத்தில் சில சாதக நிலைமைகள் உருவாகும் என்று சொல்லிக்கொண்டாலும் கிட்டிய காலத்தில் பொது மக்கள் பாரிய பொருளாதார சுமையொன்றை சுமக்க வேண்டியுள்ளதாக எதிர்க்கட்சிகள் கட்டியம் கூறுகின்றன.

விவாசி என்ற தோரணையில் இந்த சுமை இறங்கப்போகிறது.

கடந்த மாதம் நாம் கண்ட கொழும்பு இல்லை இப்போது. திரும்பும் பக்கமெல்லாம் திகைக்க வைக்கும் சோடினைகள். வீதிகளிளெல்லாம் விழாக்கோலம். பழைய வீதிகளெல்லாம் அகழ்ந்து புதிய வீதிகள் உருவாக்கப்படுகின்றன.

யுத்தம் முடிந்த ஒரு நாட்டின் தலைநகராவது அழகுணர்ச்சியுடன் இருக்கவேண்டும் என்பதில் மாற்றுக்கருத்துக்கு இடமில்லை. ஆனால், அது திட்டமிடலுடன் படிப்படியாக செய்யப்பட வேண்டும். அதைவிடுத்து ஒரு மாநாட்டின் பெயரில் வெளிநாடுகளில் கடனுக்கு பணம் வாங்கி, சுடுகிறது மடியைப்பிடி என்று செய்யப்படும் இந்நடவடிக்கைகள் அபிவிருத்தியின் அறிகுறிகளன்றி ஆடம்பரச் செலவாகவே பார்க்கப்பட வேண்டியுள்ளது.

மாநாட்டுக்கு வருகைதரும் வெளிநாட்டுப் பிரமுகர்களை அழைத்துவரவும் மாநாட்டுடன் தொடர்பான ஏனைய தேவைகளுக்காகவும் நூற்றுக்கணக்கான உயர் ரக பென்ஸ் கார்கள் இறக்குமதி செய்யப்பட்டுள்ளன. தற்போது கொழும்பு வீதிகளில் வண்டுகள்போல் இவை உருண்டும் பறந்தும் திரிகின்றன.

இந்த கார்களெல்லாம் நம் நாட்டு மகா ஜனங்கள் செலுத்தும் வரிப்பணத்தில் கொள்வனவு செய்யப்பட்டவைதான். மாநாடு முடிந்த கையோடு இந்த உயர் ரக வாகனங்களை எல்லாம் என்ன செய்யப்போகிறார்கள்? வீதிக்கொரு மினிஸ்ட்டர் இருக்கும் நமது நாட்டில் வாகனங்களுக்கா வேலையில்லை. ஏற்கனவே நூற்றுக்கணக்கான அமைச்சர்களை ஏற்படுத்திக்கொண்டு மக்கள் பணத்தை சுரண்டி வாழும் நாட்டில், தற்போதைய ஆடம்பரச் செலவுகளெல்லாம் இன்னும் சுமையாகவே அமையப்போகிறது.

மாநாட்டை முன்னிட்டே கொழும்பு-கட்டுநாயக்க அதிவேகப்பாதை அவசர அவசரமாக நிர்மாணிக்கப்பட்டது. இதற்கு செலவிடப்பட்ட கோடிக்கணக்கான ரூபாய்கள் மக்கள் தலையிலேயே சுமத்தப்படப் போவதாக அப்போதே எதிர்க்கட்சிகள் குற்றம் சுமத்தியிருந்தன. பொதுநலவாய மாநாடு முடிந்த கையுடன் எரிபொருள் உட்பட அத்தியவசயப் பொருட்கள் பலவற்றுக்கு விலைகள் ஆச்சரியத்தக்க வகையில் அதிகரிக்கும் என எதிர்க்கட்சிகள் எச்சரிக்கை விடுத்த வண்ணமுள்ளன.

ஆசியாவின் ஆச்சரியமான நமது நாட்டில் மாநாட்டு செலவை ஈடு செய்வதொன்றும் சீனவித்தையல்ல, கெத்தாராமையில் இரவு-பகல் கிரிக்கட் போட்டி ஒன்றை நடத்தி விட்டு நாமெல்லாம் TVயை பார்த்துக் கொண்டிருக்க, நள்ளிரவு பன்னிரெண்டு மணியுடன் அத்தியவசியப் பொருட்களுக்கு விலையைக் கூட்டிவிட்டால் சரி!

இனி மூன்று நாள் கூத்துக்கு நாம் வாழ்நாள் முழுவதும் வரிகட்டி மடிய வேண்டியதுதான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்கள் தேசம்

மலர் : 12 இதழ் : 22 நவம்பர் 15 - 30. 2013

77, ஸ்ரீ வஜிரஞான மாவத்தை. கொழும்பு- 09, இலங்கை
தொலைபேசி: 0112 698771 / 0777 412561, பெக்ஸ்: 0112 686030,
மின்னஞ்சல்: engalthesamnews@gmail.com


## பொதுநலவாயமாநாடு: இந்தியாவின் நிலைப்பாடு நியாயமானதா?

தெற்காசிய வலயத்தின் வல்லரசாக தன்னை உருவாக்கிக்கொள்ளும் முனைப்புடன் செயற்படும் இந்தியா, சீனாவின் செல்வாக்கு வளர்வது குறித்து எச்சரிக்கையுடனேயே உள்ளது. சீனாவுடன் இணைந்து கூட்டு இராணுவப் பயிற்சியை மேற்கொண்டாலும் இரு நாடுகளுக்கிடையிலான கெடுபிடி யுத்தம் முடிவுறவில்லை. இந்நிலையில், அண்மைக்காலமாக இலங்கையில் அதிகரித்து வரும் சீனாவின் செல்வாக்கை ஈடுசெய்யும் அளவுக்கு இலங்கையையும் ஆரோக்கியமாக வைத்திருக்கும் தேவை இந்தியாவுக்குண்டு.

இலங்கையின் பாதுகாப்பு முன்னேற்றம் உட்பட, அனைத்து விவகாரங்களிலும் இந்தியாவின் ஈடுபாடு, கொள்கை, உறவுகள் மிக முக்கியமானவையாகக் கருதப்படுகின்றன. இலங்கையின் ஆகாய எல்லைக்குள் அத்துமீறி உணவுப் பொட்டலங்களைப் போட்டபோதும் கூட அதனை எதிர்த்து நிற்க முடியாத நிலை இலங்கைக்கு ஏற்பட்டது. ஹம்பாந்தோட்டை துறைமுகம், விமான நிலையம் மற்றும் விரைவு நெடுஞ்சாலை செயற்திட்டங்களை சீனாவுக்கு வழங்கியமையை சமாளிக்க சம்பூர் அனல் மின் நிலையம் அமைக்கும் பணியை இந்தியாவுக்கு வழங்க வேண்டியேற்பட்டது. மனித உரிமை ஆணைக்குழுவில் அமெரிக்காவின் பிரேரணையை ஆதரித்து இந்தியா வாக்களித்தபோதும் இலங்கை இந்தியாவுடனான உறவை கட்டிக்காப்பதிலேயே கண்ணும் கருத்துமாக இருக்க வேண்டியேற்பட்டதெல்லாம் இலங்கையின் இருப்புக்கும் பாதுகாப்புக்கும் இந்தியாவின் உறவு தேவை என்பதனாலாகும். இப்போதும்கூட, பிரதமர் மன்மோகன் சிங் பொதுநலவாய உச்சி மாநாட்டில் பங்குபற்றாமை குறித்து கவலை தெரிவிப்பதுடன் நிறுத்திக்கொள்ள வேண்டியிருந்தது.


இந்தியாவின் இந்த நிலைப்பாடு பற்றி தமிழ்நாடு தவிர்ந்த ஏனைய மாநிலங்களில் தேசியமட்ட, அரசியல் மற்றும் புத்திஜீவிகள் மத்தியிலும் விமர்சனங்கள் எழுந்துள்ளன. சீனா இலங்கையில் காலூன்றும்போது இந்தியா இப்படி நடந்துகொள்ளக் கூடாது என்றும் இந்தியா என்பது தமிழ்நாடல்ல என்றும் மத்திய அரசை இயக்க தமிழ்நாட்டை அனுமதிக்கக் கூடாதென்றும் பல்வேறு கண்டனங்கள் எழுந்துள்ளன.

இலங்கையில் யுத்தம் நடைபெறும் போது பார்த்து ரசித்துக் கொண்டிருந்தவர்கள் இப்போது தேர்தலை எதிர்நோக்கியிருந்த நிலையில் தமிழ்நாட்டுப் பாமர மக்களின் வாக்குகளில் கண்வைத்து போலியாக இலங்கைத் தமிழர்களுக்காக ஆர்ப்பரிக்கின்றனர் என்றும் குற்றஞ்சாட்டப்படுகிறது. தமிழ்நாட்டின் இரு பெரும் கட்சிகளான தி.மு.க. மற்றும் அ.தி.மு.க. மட்டுமன்றி, உதிரிக் கட்சிகள் கூட இலங்கைத் தமிழர் கோஷத்தை முற்படுத்தியுள்ள நிலையில் அது தீவிரமடைந்திருப்பதில் ஆச்சரியமொன்றுமில்லை.

பொதுநலவாய உச்சி மாநாடு இம்முறை நடைபெறும் இடம்தான் இலங்கை. இலங்கையுடன் முரண்பட்டு மாநாட்டைப் புறக்கணிக்க முடியாது. இலங்கையுடன் உறவு வேண்டிப் பகிஷ்கரிக்கவும் முடியாமல், பால் என்பதால் வீசவும் முடியாத, சூடென்பதால் குடிக்கவும் முடியாத நிலைக்கு இந்தியா தள்ளப்பட்டுள்ளது.

எல்லா மாநாடுகளிலும் நாட்டின் தலைவர்கள் கட்டாயம் கலந்துகொள்ள வேண்டும் என்றில்லை. ஆனால், இம்முறை இலங்கையில் நடைபெறும் மாநாட்டில் இந்தியப் பிரதமர் பங்குபற்றுவது இலங்கையுடனான உறவு தொடர்பில் முக்கியத்துவம் பெறுகின்றது. ஏனைய விடயங்கள் எப்படிப் போனாலும் மன்மோகன் சிங் கொழும்பு மாநாட்டில் பங்குபற்றாமையால் இலங்கைத் தமிழர்களுக்கு கிடைக்கும் நன்மை என்னவென்று யோசித்தாலும் இந்தியாவின் நிலைப்பாடு பொருத்தமற்றது என்ற முடிவுக்கு வரவேண்டியிருக்கும்.

யுத்தம் முடிந்து சமாதானம் நிலவும் இக்காலகட்டத்தில் டயஸ்போராவின் கற்பனைகளில் சேர்ந்து கொள்ளாமல் இலங்கைத் தமிழர்களின் எதிர்காலம் குறித்த அக்கறை இருக்குமானால் இந்தியப் பிரதமர் இலங்கை மாநாட்டில் பங்குபற்றி காத்திரமான கருத்துக்களை முன்வைப்பதே சிறப்பாக அமைந்திருக்கும். இத்தகைய இழுபறிகள் எந்தத் தரப்புக்கும் நன்மையளிக்கப் போவதில்லை என்பது மட்டும் உறுதி.







■ இலங்கையின் பொருளாதாரம் மிக வலுவான நிலையிலுள்ளது. நான் முதலீடு செய்வது உறுதி.

-கசினோவின் தந்தை ஜேம்ஸ் பெக்கர்-

*சரிதான், நீங்க விசிட் பண்ணின அளரிமாளிகையிலும் கொழும்பிலுள்ள நட்சத்திர ஹோட்டல்களிலும் பொருளாதாரம் வலுவான நிலையில்தான் இருக்கிறது.*

■ பொதுநலவாய அமைப்பின் தலைவர் பதவியைப் பெற்று பெருமைப்படவே அரசு கோடிக்கணக்கான பணத்தை மாநாட்டிற்கு செலவிடுகிறது.

-மங்கள சமரவீர எம்.பி-

*நாய் வாழ்ந்தாலென்ன; பூனை கண்பொண்டாட்டியானால்தான் என்ன...?*

■ பொதுநலவாய மாநாட்டுக்கு வருகின்ற வெளிநாட்டவர் எண்ணிக்கை திருப்தி தருகிறது.

-அமைச்சர் பீரிஸ்-

*ஹும்... ஒங்களுக்குத் திருப்திதான். செய்ற செலவ பாத்தா எங்களுக்குத்தான் வயிற்ற கலக்குது.*

■ மேலும் பல ஆவணப்படங்களை தயாரிக்கப் போவதாகக் கூறும் சனல் 4 இயக்குநர், என்ன நடமாடும் நீதிமன்றமா?

-பொதுபல சேனா-

*இதக் கேக்குறதுக்கு 'உத்தியோகப் பற்றற்ற பொலிஸ்மாருக்கு' என்ன அருகதை இருக்கிறதோ?*

■ அராஜக ஆட்சியை ஒழித்து மக்களாட்சியை உருவாக்குவதற்கே நாம் போராடுகிறோம்.

-ரணில் விக்ரமசிங்க-

*அடிசக்க! முதல்ல தலைமைப் பதவிய யாருக்குமே கொடுக்கமாட்டேனு நீங்க பண்ணுற அராஜகத்த விடுங்க சார்!*


## எதிர்பாருங்கள்

உங்கள் அபிமான எங்கள் தேசம்
அடுத்த இதழிலிருந்து
பல மாற்றங்களுடன்...
புதுப் பொலிவுடன்...
www.facebook.com/engalthesamJmf



**எங்கள் தேசம் சந்தா விபரம்**

| | | | |
|---|---|---|---|
| உள்நாடு | தனிப்பிரதி: 30.00<br>வருட சந்தா: 1200.00<br>ஆறு மாதங்கள்: 600.00 | வெளிநாடு | இந்தியா, பாகிஸ்தான், மாலைதீவு, மலேஷியா, சிங்கப்பூர்:3600.00<br>மத்திய கிழக்கு நாடுகள்: 3750.00 |
| | | | அவுஸ்திரேலியா, தென்கொரியா: 4700.00<br>இங்கிலாந்து: 5750.00, அமெரிக்கா, கனடா: 6900.00, ஜப்பான்: 4800.00 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# CHOGM விழா சோகத்தில் முடியக்கூடாது



எம்.எச்.எம். ஹஸன்

30 வருட யுத்த காலத்தில் இலங்கை உல்லாசப் பிரயாணிகளுக்கு ஒவ்வாத நாடாக சர்வதேசத்தில் பிரகடனப்படுத்தப் பட்டிருந்தது. அப்போதெல்லாம் வெளி நாட்டு ஊடகங்களைப் பார்க்கும் ஒருவரால் இலங்கையில் மக்கள் வாழ்க்கை துப்பாக்கி, குண்டுகளுடனும் உருண்டு போவதாகவே உணரப்பட்டது. யுத்தம் முடிந்த நான்கு வருடங்களில் இலங்கையை அமைதிப் பூங்காவாக மாற்றி அபிவிருத்திப் பாதையில் இட்டுச் செல்கின்றமையை உலகிற்குப் பறைசாற்றக் கிடைத்த அரிய சந்தர்ப்பமாக பொதுநலவாய உச்சி மாநாட்டை இலங்கை பார்க்கிறது.




இளைஞர் மாநாடு, வர்த்தகப் பிரதிநிதிகள் மாநாடு, சிவில் குடிமக்கள் மாநாடு, வெளி நாட்டமைச்சர் மாநாடு என்றும் அதனுடன் தொடர்புபட்ட கண்காட்சிகள், கலை நிகழ்ச்சிகள் என்றும் 53 நாடுகளைச் சேர்ந்த நூற்றுக்கணக்கானவர்கள் பங்குபற்றும் ஒரு சர்வதேச நிகழ்வு இலங்கையில் இடப்பெறுவது இயல்பாகவே மகிழ்ச்சியை ஏற்படுத்தகூடிய ஒன்றுதான். உல்லாசப் பிரயாணத்துறையை வளர்த்தெடுத்து அதன் மூலம் வெளிநாட்டுச் செலாவணியை பெறவும் அதை விருத்தி செய்யவும் வெளிநாட்டு முதலீட்டை ஊக்குவிப்பதன் மூலம் வேலைவாய்ப்புகளையும் இலங்கையின் இழந்த புகழை மீட்டெடுக்கவும் முடியுமென இதன் மூலம் எதிர்பார்க்கப்படுகின்றன.

உலக வங்கியின் ஏற்பாட்டில் வர்த்தக முயற்சிகளை மேற்கொள்ளப் பொருத்தமான நாடுகள் வரிசையில் இலங்கை 85 ஆவது இடத்திலே உள்ளது. இரண்டு வருடங்களுக்கு முன்னர் 79 வது இடத்திலிருந்து வீழ்ச்சியடைந்தமை ஒரு தற்செயல் நிகழ்வல்ல என்றே அறியப்பட்டுள்ளது. முப்பது வருடகால யுத்தம் பொருளாதாரத்தை எழும்பவிடாமல் தடுத்தது. அதனை வெற்றி கொண்டவுடன் வருடாந்த பொருளாதார விருத்தி எட்டு வீதத்தையும் தாண்டியிருந்தது. எனினும், 2012 இல் அது 6.4% ஆகக் குறைந்ததுடன் சர்வதேச நாணய நிதியத்தின் கூற்றுப்படி 2013 இல் இது 6.2% ஆகக் குறையும் நிலையுள்ளது. நாட்டில் புதிய பணக்காரர்கள் உருவாகியுள்ளனர். கட்டுநாயக்க புதிய அதிவேகப் பாதை திறந்த அன்றே முதல் வரிசையில் நுழைவதற்காக தரித்து நின்ற நூற்றுக்கணக்கான காரர்கள் 2013 இல் உற்பத்தி செய்யப்பட்ட ஒன்றறைக் கோடிக்கு மேல் விலையுயர்ந்த அதி நவீன வசதிகள் கொண்டவைகளாகும். இவர்களின் வருமானத்தையும் சேர்த்து இலங்கையின் தலாவருமானம் கணிக்கப் படுவதால் இலங்கை இப்போது இடை நிலை தலாவருமானம் கொண்ட நாடாகக் கணிக்கப்படுகிறது.

மக்கள் வரிச்சுமையாலும் விலைவாசியுயர்வாலும் சிரமப்படுகின்றனர். அரசாங்கத்தில் வரி வருமானத்தில் மறைமுக வரிகளே, அதாவது பொருட்களின் விலைகளில் விதிக்கப்படும் வரியே, குறைந்த வருமானம் பெறுபவரை பெரிதும் பாதிக்கிறது. மின்சாரம், குடிநீர், எரிவாயு என்பன நாளாந்தம் விலை உயரும் நிலையில் உள்ளன. இத்தகைய ஒரு சந்தர்ப்பத்தில்தான் பொது நலவாய அரச தலைவர்கள் மாநாடு இலங்கையில் நடத்தப்படுகின்றது.

“ அரசின் கடன்பளு உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் அதிகரிக்கும்போது பணத்தின் பெறுமதி குறைகிறது. மக்கள் மீது அதிக வரி விதிக்கப்படுகிறது. CHOGM விழாவுக்காக செலவு செய்யட்டும் தொகை என்ன என்று இது வரை யாருக்கும் தெரியாது. அதனை எப்படிப் பெறுகிறார்கள் என்பதும் புதிர். ”

பதவிக்கு வரும் அரசாங்கங்கள் மக்களின் அபிலாசைகளை நிறைவேற்றாமை குறித்து எழுகின்ற எதிர்ப்புகளை தணிப்பதற்குக் கையாளுகின்ற உத்தியாக கண்காட்சி விழாக்கள் நடத்தப்படுகின்றன. அவற்றின் போதெல்லாம் தேசப்பற்று, தேசியம் இனப்பற்று வெகுவாக மெருகூட்டப்படுகின்றன. எமது நாட்டை 150 வருட காலம் அடிமைப்படுத்தி, பொருளாதாரத்தை சுரண்டி, கலாசாரத்தை அழித்த பிரித்தானிய அரசியை அழைத்து அடிபணிவுடன் மண்டியிடுவது எமது சுதந்திர தாகத்துக்கு இழுக்கு என்பதை உணரும் சக்தியும்கூட, ஆடம்பரங்களாலும் படாடோபங்களாலும் மழுங்கடிக்கப்பட்டுள்ளதை காணலாம். மக்கள் எழுச்சி வரும்போது, ஏதாவது ஒரு திருவிழாவை நடத்தி மக்களின் கவனத்தைக் கலைப்பதில் அரசு கில்லாடிதான்.

இந்தியாவிலும் கூட நடத்த முடியாத எதிர்ப்புகளுக்கு மத்தியில் 'அய்பா' எனப்படும் ஹிந்தி நடிகர், நடிகைகளுக்கு விருது வழங்கும் விழா இலங்கையில் நடத்தப்பட்டது. மிகப் பெரும் உல்லாசப் பிரயாண ஈர்ப்பு இருக்கும் என்று நியாயம் கூறப்பட்டது. அதன் செலவுகளை ஈடு செய்யவும் முடியாத நிலையில் எதிர்பார்த்த எந்தப் பொருளாதார இலாபமுமின்றியே அது முடிவடைந்தது. துறைமுகத் திறப்பு விழா, அதிவேகப் பாதை திறப்பு விழா, விமான நிலைய திறப்பு விழா என்று அனைத்துமே விழாக் கோலம் பூணுகின்றன. அரசின் கடன்பளு உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் அதிகரிக்கும்போது பணத்தின் பெறுமதி குறைகிறது. மக்கள் மீது அதிக வரி விதிக்கப்படுகிறது. CHOGM விழாவுக்காக செலவு செய்யட்டும் தொகை என்ன என்று இது வரை யாருக்கும் தெரியாது. அதனை எப்படிப் பெறுகிறார்கள் என்பதும் புதிர். விழா முடிந்து தலைவர்கள் போய்விடுவார்கள்; செலவை ஈட்ட அரசாங்கம் பொருட்களுக்கு வரி விதிக்கும். விழாவின்போது பூரித்துப் போய் நாட்டுப்பற்றால் கோஷமிட்டவர்களின் நிலை என்னவாகும்?

உல்லாசப்பிரயாண கைத்தொழில் 2009 இன் பின்னர் விருத்தியடைகின்றமை பற்றி பேசப்படுகிறது. ஆசியாவின் ஆச்சரியமாக இலங்கையை மாற்றும் முக்கிய காரணி உல்லாசப்பயண கைத்தொழில் என்று கூறப்படுன்றது. அந்த உல்லாசப்பயணத்தை விருத்திசெய்ய அதிக வட்டியில் கடன் பெற்று கடுகதி வீதிகள் நிர்மாணிக்கப்படுகிறன. சமயத் தலைவர்களின் எதிர்ப்புக்கு மத்தியில் கசினோ ஸ்தாபிக்கப்படுகின்றது. வெளிநாட்டு பயணிகள் மலர்மாலை சூழ வரவேற்கப்பட்டு ஊர்வலமாகவும் அழைத்து வரப்படுகின்றனர். 2020 ஆகும்போது ஏழு மில்லியன் உல்லாசப் பிரயாணிகளைக் கொண்டுவரும் இலக்கை வைத்து விடயங்கள் விருத்தி செய்யப்படுவதாகவும் கூறப்படுகின்றன.

எண்ணிக்கை ரீதியிலும் வருமாண ரீதியிலும் உல்லாசப்பிரயாண கைத்தொழில் விருத்தியடைந்து வருவதை புள்ளிவிபரங்கள் காட்டுகின்றன. ஆனால், அதன் பின்னணியிலுள்ள சில உண்மையான வளர்ச்சியின் யதார்த்தம் வேறு விதமாக உள்ளதைக் காட்டுகின்றது. ஐரோப்பிய உல்லாசப் பிரயாணிகளின் வருகை குறைந்துவிட்டதாகவும் இப்போது பெரும்பாலும் ரஷ்ய, சீன, இந்திய, அரபு நாடுகளின் உல்லாசப் பிரயாணிகள் அதிகம் வருவதாகவும் கூறப்படுகிறது. ஐரோப்பிய உல்லாசப் பிரயாணிகளின் கொள்வனவுச் சக்தி, செலவழிக்கும் சக்தி உயர் மட்டத்திலானது. அவர்கள் ஐந்து நட்சத்திர ஹோட்டல்களில் தங்கியிருப்பதுடன் நாட்டின் நாலாபக்கங்களுக்கும் சென்று பல்வேறு பரிசுப்பொருட்கள், ஆபரணங்கள், கலைப்பொருட்களை கொள்வனவு செய்கின்றனர் என்றும் கண்டறியப் பட்டுள்ளன.

ரஷ்ய, சீன உல்லாசப் பிரயாணிகள் குறைந்த செலவில் தங்கி, கிடைத்ததை சார்பிட்டுவிட்டு மதுவிலும் மாதுவிலும் நேரத்தைச் செலவிடுகிறார்கள். எனினும், கலைப்பொருட்கள், பரிசுப்பொருட்கள், உள்நாட்டு உற்பத்திகளை வாங்கும் நிலை அவர்களிடத்தில் இல்லை என்றும் ஆய்வுகள் கூறுகின்றன. இதேநேரத்தில் உல்லாசப் பயண தொழிலையே நம்பியுள்ள சில வியாபாரிகள், கலைப்பொருள் உற்பத்தியாளர்கள், பரிசுப் பொருட்களை விற்போர் என ஆயிரக்கணக்கானோர் பிழைப்புமட்ட வருமானத்தையேனும் பெற்றுக்கொள்வதற்கு சிரமப்படுகின்றனர். பிரித்தானியப் பிரஜையான குர்ரம் ஷேக் படுகொலை செய்யப்பட்டு அதற்கான விசாரணை நீண்டகாலம் கிடப்பில் போடப்பட்டது போன்ற காரணங்களும் போர்க்குற்றம், மனித உரிமை மீறல் போன்ற குற்றச்சாட்டுகளும் ஐரோப்பிய உல்லாசப் பிரயாண வருகை வீழ்ச்சியில் செல்வாக்குச் செலுத்தக் காரணமாக அமைந்திருக்கலாம் என்றும் ஆய்வாளர்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

### பொதுநலவாயத்தின் தலைமைத்துவம்

மாநாட்டின் எதிர்கால விளைவு எதுவாயிருந்தாலும் அடுத்த இரண்டாண்டுகளுக்கான பொது நலவாய மாநாடு அமைப்பின் தலைமைத்துவம் இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அவர்களுக்குக் கிடைப்பது உறுதி.

(18ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முஸ்லிம் காங்கிரஸ் தலைமை அக்குறணை மக்களிடம் செய்த ஒப்பந்தத்தை மறந்து செயல்படுகிறது

## பீ.எம்.ஜே.டி

முஸ்லிம் காங்கிரஸ் தலைமை அக்குறணை மக்களிடம் செய்த ஒப்பந்தத்தை முற்றாக மறந்து செயல்படுகிறது. கண்டி மாவட்ட மக்களை ஒவ்வொரு தேர்தலிலும் ஏமாற்றி வாக்குகளைப் பெற்று விட்டு, மக்களது தேவைகளை மறந்துவிடுகிறது என பீ.எம்.ஜே.டி. தெரிவித்துள்ளது.

பீ.எம்.ஜே.டி. வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது; 2011ஆம் ஆண்டு அக்குறணைப் பிரதேச சபைத் தேர்தலில் சுயேட்சைக் குழுவாக களமிறங்கவிருந்த எமது அமைப்பை அழைத்து ஒப்பந்தம் ஒன்றைச் செய்து கொண்டார்கள். ஆரம்பத்தில் மறுத்த நாங்கள், உலமாக்களது வேண்டுகோளை மதித்து அதனை ஏற்றோம். அந்த ஒப்பந்தத்தின் அடிப்படையில் 80 கோடி ரூபா செலவில் பல வேலைத்திட்டங்களை செய்வதாகவும் இரண்டு மாதங்களுக்கு ஒருமுறை அக்குறணை மக்களது பிரச்சினைகள் குறித்துக் கலந்துரையாடுவதாகவும் இதனுடன் இன்னும் பல விடயங்களும் பேசப்பட்டு கைச்சாத்திடப்பட்டன.

இதுவரை எதனையும் முறையாகச் செய்யவில்லை. அண்மையில் ஜனநாயக முறையில் எமது அங்கத்தவர் இர்பான் காதருக்குக் கிடைக்க வேண்டிய அங்கத்துவத்தை, எமது அனுமதியின்றி, அநீதியானமுறையில் தனதாக்கிக் கொள்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர். எல்லையற்ற இந்த அநியாயங்களை நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

அக்குறணைப் பிரதேச சபையில் தமக்குப் பிரதிநிதித்துவம் இல்லையென்பதால், பீ.எம்.ஜே.டி யின் பிரதிநிதித்துவத்தை விட்டுத்தருமாறு கேட்டுக் கொண்டிருந்தார்கள். ஒப்பந்தப்படி மக்களுக்கு ஏதாலும் செய்திருந்தால் மக்கள் வழங்கிய எமது பிரதிநித்துவத்தை உடனடியாக விட்டுக் கொடுத்திருப்போம்.

இருந்தாலும் பறவாயில்லை நாம் விட்டுத்தருகின்றோம். ஆனால், அதற்குக் கைமாறாக அக்குறணை பாலிகா வித்தியாலயம் எதிர்கொண்டு வருகின்ற இடப்பற்றாக்குறைக்கு ஒரு கட்டடத்தை வழங்க ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும் என்றோம். எமது கோரிக்கைகளையோ, அக்குறணை மக்களது தேவைகளையோ முஸ்லிம் காங்கிரஸ் தலைமை மதிப்பதாகத் தெரியவில்லை.

# பீ.எம்.ஜே.டி. உடனான உடன்படிக்கைக்கு எதிராக முஸ்லிம் காங்கிரஸ் நடந்து கொள்ளவில்லை

## மு.கா. உயர்பீட உறுப்பினர் எம். நயீமுல்லா

அக்குறணை பிரதேச சபைக்கு ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் புதிய உறுப்பினர் நியமன விடயத்தில் பீ.எம்.ஜே.டி. குழுவினர் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸுடன் செய்துகொண்ட உடன்படிக்கைக்கு எந்தவிதத்திலும் முரணாக நடந்துகொள்ள இல்லை என ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் அதியுயர்பீட உறுப்பினரும் முன்னாள் மத்திய மாகாண சபை உறுப்பினருமான எம். நயீமுல்லா தெரிவித்தார்.

மேற்படி விடயமாக அக்குறணை பீ.எம்.ஜே.டி குழுவினர் பத்திரிகைகளிலும் இணையத் தளங்களிலும் வெளியிடும் விமரிசனங்கள் குறித்து விளக்கமளிக்கும் விதத்தில் அவர் விடுத்துள்ள ஊடக அறிக்கையிலேயே இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது; 2011 ஆம் ஆண்டு அக்குறணை பிரதேச சபைத் தேர்தலில் சுயேட்சைக் குழுவாக போட்டியிட தயாராக இருந்த பீ.எம்.ஜே.டி உறுப்பினர்களது நடவடிக்கை முஸ்லிம்களின் வாக்குகளில் சிறிதளவு தொகையை சிதறடித்து விடலாம் என்ற காரணத்தினால் உலமாக்களும் அப்பகுதி முக்கியஸ்தர்களும் கட்சித் தலைமையிடம் வேண்டிக்கொண்டதற்கு இணங்க அவர்களை உள்வாங்க இணக்கம் தெரிவிக்கப்பட்டது.

அதன் பிரகாரம் பீ.எம்.ஜே.டி குழுவினர் சார்பாக வேட்பாளர்கள் நால்வரை முஸ்லிம் காங்கிரஸின் வேட்பு மனுவில் இடம்பெறச் செய்ய இணக்கம் தெரிவிக்கப்பட்டது.

இதன் பயனாகவே அவர்களால் உறுப்பினர்கள் இருவரை வென்றெடுக்க முடிந்தன. அவ்வாறன்றி சுயேட்சையாக போட்டியிட்டிருந்தால் அவர்களால் உறுப்பினர் ஒருவரையாவது பெற்றிருக்க முடிந்திருக்குமா என்பதை அவர்கள் சிந்தித்துப்பார்க்க வேண்டும்.

கடந்த மத்திய மாகாண சபைத் தேர்தலில் முஸ்லிம் காங்கிரஸுக்கு ஆதரவளிப்பதற்கு முசீன் ரியாஸின் பிரதாப பிரதேச சபை உறுப்பினர் வெற்றிடத்தை முன்வைத்து பீ.எம்.ஜே.டி பேரம் பேசிய போது மாகாண சபைத் தேர்தலில் முஸ்லிம் காங்கிரஸின் வெற்றிக்காக ஒத்துழைக்க முடியுமானால் அக்குறணை பிரதேச சபையில் எஞ்சியுள்ள இரண்டாண்டு பதவிக் காலத்தில் முதல் வருடத்தை சுழற்சி அடிப்படையில் அவ்வமைப்பின் உறுப்பினருக்கு வழங்குவதாக கட்சியின் தலைமைத்துவம் வாக்குறுதி அளித்தது.

ஆனால், அவர்கள் வேறு கட்சிகளுக்கு ஆதரவளிப்பதற்கு பேச்சுவார்த்தையில் ஈடுபட்டுக்கொண்டிருந்த அதேவேளையில், முஸ்லிம் காங்கிரஸிற்கு ஆதரவளிப்பதாயின் வெற்றிடமாக உள்ள உறுப்பினர் பதவியை தமக்கு தருமாறு வற்புறுத்தினர்.

அக்குறணை மக்களுக்கு பணியாற்றும் ஒரே நோக்கத்திலேயே இந்த உறுப்பினர் பதவியை கோருவதாக கூறிய பீ.எம்.ஜே.டி குழுவினர், திடீரென ஐக்கிய தேசியக் கட்சி வேட்பாளர் அசாத் சாலியின் அரசியல் மேடையில் தோன்றி அவருக்கு ஆதரவு வழங்குமாறு அக்குறணை மக்களிடம் வேண்டிக் கொண்டார்கள்.

முஸ்லிம் காங்கிஸிற்கு எதிராக இவ்வாறு இவர்கள் களமிறங்கியதன் காரணமாக நாம் சுழற்சி முறையில் அவர்களின் வேட்பாளருக்கு பிரதிநிதித்துவம் வழங்கவிருந்த தலைவரின் தீர்மானத்தை மாற்றிக் கொள்ள நேர்ந்தது. எனவேதான் அக்குறணை புளுகொதென்னையைச் சேர்ந்த மிஹ்ரார் என்பவரை நியமிப்பதற்கு கட்சி நடவடிக்கை மேற்கொண்டது.

# நாட்டில் மீண்டும் மலேரியா நோய் பரவும் அபாயம்

ஐ.ஏ. காதிர்கான்

உலக சுகாதார ஸ்தாபனத்தினால் வழங்கப்பட்ட மலேரியா இல்லாத நாடு என்ற அந்தஸ்தை, இலங்கை இழக்கவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாக அண்மையில் களனிப் பல்கலைக்கழகத்தினால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வொன்றின் மூலம் தெரிய வந்துள்ளது.

மலேரியாவிலிருந்து முற்றாக விடுவிக்கப்பட்டுள்ளதாக கூறப்படும் இலங்கையில் மீண்டும் அந்நோய் தலைதூக்கக்கூடிய சாத்தியம் இருப்பதாக புதிய தகவல்கள் கூறுகின்றன. தொடர்ச்சியாக உள்நாட்டில் 3 வருடங்கள் மலேரியா காய்ச்சல் நோயாளிகள் அடையாளம் காணப்படாத நிலையில், கடந்த 2012 ஆம் ஆண்டு மலேரியாவிலிருந்து விடுவிக்கப்பட்ட நாடாக இலங்கை தன்னை அறிவித்துக் கொண்டது.

இந்நிலையில், களனி பல்கலைக்கழகத்தினால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வொன்றில், கிழக்கு மாகாணத்திலுள்ள கரையோர பிரதேசங்களில் காணப்படும் நீர் நிலைகளில், மலேரியா நோய்க் காவியான அனோபிலஸ் நுளம்பு காணப்படுவது கண்டறியப்பட்டுள்ளது. மட்டக்களப்பு வாவியை அண்மித்த பகுதியில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளின்படி அனோபிலஸ் நுளம்பு உவர் நீரில் காணப்பட்டமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

# கரும்புச் செய்கையை பாதுகாக்குமாறு மக்கள் கோரிக்கை

ஏ.கே.ஏ. ரவூப்

இறக்காமம் பிரதேசத்தில் செய்கை பண்ணப்பட்டுள்ள கரும்புகளை காட்டுப் பன்றிகள் சேதப்படுத்தி வருவதாக விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

இரவு வேளையில் கூட்டம் கூட்டமாக வரும் காட்டுப் பன்றிகள் கரும்புகளை கடித்துக் குதறி பெரும் நஷ்டத்தை ஏற்படுத்தி வருகின்றன. கரும்பைத் தேடி காட்டு யானைகளின் நடமாட்டமும் இருப்பதால் விவசாயிகள் இரவு வேளையில் காவலில் ஈடுபட அச்சப்படுகின்றனர்.

பல்வேறு சிரமங்களுக்கு மத்தியில் கரும்புச் செய்கையில் ஈடுபட்டு வரும் விவசாயிகளுக்கு காட்டுப் பன்றிகளின் தொல்லையிலிருந்தும் கரும்புகளைப் பாதுகாக்க உதவுவதற்கு ஹிங்குராணை சீனிக்கூட்டுத்தாபன அதிகாரிகள் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என இம்மக்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர்.

# இனவாத மோதல்கள் ஏற்பட இடமளிக்கப் போவதில்லை

## அமைச்சர் குணரட்ன வீரகோன்



சிங்கள, தமிழ், முஸ்லிம் மோதல் ஒன்றை ஏற்படுத்தும் தேவை சிலருக்கு உள்ளது. சில பிக்குமார் சமூகத்தில் பகையுணர்வை பரப்பி வருகின்றனர். நாங்கள் இனவாத மோதல்கள் ஏற்பட இடமளிக்கப் போவதில்லை என மீள்குடியேற்ற அமைச்சர் குணரட்ன வீரகோன் தெரிவித்தார். கரந்தெனிய பிரதேச செயலகத்தில் நடைபெற்ற வைபவம் ஒன்றில் உரையாற்றும் போதே அவர் இதனைக் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்; மேற்குலக நாடுகளின் டொலர்களை நம்பி வாழும் பௌத்த பிக்குமாரே இப்படியான நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றனர்.

சமூகத்தில் நல்லொழுக்கம் சிறந்த முறையில் இருக்கவேண்டும். அதிகாரிகள் கடமையை செய்யும் போது சில அழுத்தங்களை எதிர் கொள்ள நேரிடும். பலவேறு அமைப்புகளை உருவாக்கிக் கொண்டு மீண்டும் இனவாதத்தை தூண்டுவோர் பற்றியும் மத அடிப்படைவாதிகள் குறித்தும் மக்கள் கவனமாக இருக்கவேண்டும்.

# ரியுஷன் வகுப்புகளுக்கு செல்லும் சிறுவர்கள் கண்பார்வை குறைந்தவர்களாக உள்ளனர்

பமுளுல்லாஹ் பர்ஹான்



ரியுஷன் வகுப்புகளுக்குச் செல்லும் சில சிறுவர்கள் கண்பார்வை குறைந்தவர்களாக உள்ளதாக காத்தான்குடி ஆதார வைத்தியசாலை வைத்திய அத்தியட்சகர் டாக்டர் எம்.எஸ்.எம். ஜாபிர் தெரிவித்தார்.

உம்மதுர் ரிஸாலா அமைப்பினால் நடத்தப்பட்ட 2013 தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களை கௌரவிக்கும் நிகழ்வு அண்மையில் காத்தான்குடி ஸாவியா வித்தியாலயத்தில் இடம்பெற்றது. அதில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது: ரியுஷன் வகுப்புகள் ஒளியில்லாத இடங்களிலும் மூடிய இடங்களிலும் நடத்தப்படுவதனால் மாணவர்களின் கண்பார்வை குறைந்து காணப்படுகின்றது. மட்டக்களப்பு மாவட்டத்தில் நடத்தப்படும் சகல ரியுஷன் வகுப்புகளும் படிப்பிப்பதற்கு உகந்ததாக இருக்கின்றதா? என்பது தொடர்பில் மாவட்ட அரசாங்க அதிபரினால் பரிசீலணை செய்யப்பட்டு வருகின்றது.

பாடசாலைகளில் முறையாக கல்வி கற்கப்படுமாயின் எவ்வித பிரத்தியேக வகுப்புகளுக்கும் செல்ல வேண்டியதில்லை. இன்று சில மனிதர்களின் தேவைக்காக நடத்தப்படுகின்ற ரியுஷன் வகுப்புகளினால் எமது சிறார்களை சீரழிக்க முடியாது.

இன்று தரம் ஐந்து புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களை கௌரவிப்பது பிழையல்ல. ஆனால், ஏனைய மாணவர்களையும் சிந்திக்க வேண்டும். இன்று இப்பரீட்சைக்கு பெற்றோரும் மாணவர்களும் கொடுக்கின்ற முக்கியத்துவம் மிக முக்கிய பரீட்சைகளான க.பொ.த சாதாரண தரம் மற்றும் உயர்தரப் பரீட்சைகளுக்கு வழங்கப்படுவதில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

PUBLIC LIBRARY JAFFNA

# இனம்சாரா அரசியலை நோக்கி இலங்கை

குறுகிய பார்வை கொண்ட, அழிவு கரமான, சமூகம் சார்ந்த மற்றும் இனவாத அரசியலைக் கைவிட்டு நாட்டைப் பாது காக்க அரசியல்வாதிகள் முன்வர வேண்டும் என மூத்த சிங்களப் பத்திரிகையாளர் ஸ்ரீ ரனசிங்க கோரிக்கை விடுத்திருக்கின்றார்.

வித்தியாசமான இனங்கள், மதங்கள், மொழிகள், கலாசாரம் என்பன ஒருபுறமிருந் தாலும் இந்தியாவில் சிறுபான்மை இனத் தவர் ஒருவரினால் ஜனாதிபதியாகவோ, பிரதமராகவோ வருவதற்கு இயலுமாக இருக்கிறது. சமூகம் சார்ந்த மற்றும் இன வாத அரசியல் காரணமாக, இலங்கையில் தொலைதூரக் கனவாகக்கூட இது இல்லை என அவர் கவலை வெளியிட்டார்.

முன்னாள் தேசியப் பேரவை சபாநாயகர் தேசமாண்ய முஹம்மத் பாகிர் மரிக்கார் அவர்களது வாழ்க்கை சரிதை நூலான 'வெத கெதர விப்லவய' என்ற நூல் வெளியீட்டு வைபவம் அண்மையில் ஸ்ரீலங்கன் பவுண் டேஷனில் இடம்பெற்றது. இதன்போதே சிரேஷ்ட ஊடகவியலாளர் இக்கருத்தைக் குறிப்பிட்டார்.

அரசாங்கம் மற்றும் எதிர்க்கட்சி என்ற இருதரப்பு அரசியல்வாதிகளும் இதன்போது சமுகமளித்திருந்ததோடு அவையில் முன் ஆசனங்களில் அமரவைக்கப்பட்டிருந் தனர். சிரேஷ்ட அமைச்சர் நிமால் ஸ்ரீ பால டி சில்வா, சிஆம் நிகாயவின் பதிவாளர் கொடபிடிய ராஹுல தேரர், முன்னாள் கல்வி யமைச்சர் கருணாசேன கொடிதுவக்கு முதலானோர் இந்நிகழ்வில் கலந்துகொண் டோரில் அடங்குவர்.



கலந்துகொண்டவர்கள் அனைவரும் இனம் சார்ந்த அரசியலை ஒரே குரலில் நிரா கரித்தனர். நாட்டைக் கூறுபோட்டு, கிட் டத்தட்ட அழித்துவிட்ட இனவாத அரசி யலை இவர்கள் அனைவரும் நிராகரித்தமை சபையில் அமர்ந்திருந்த அனைவருக்கும் சங்க நாதமாகவே இருந்தது.

இலங்கை சுதந்திரம் அடைந்தபோது சமகாலத்தில் ஆசிய, ஆபிரிக்க, லத்தீன் அமெரிக்கப் பிராந்தியங்களில் சுதந்திரம் பெற்றிருந்த ஏனைய வளர்ந்துவரும் நாடு களுக்கு இலங்கை ஒரு முன்மாதிரியாக இருந்தது. அரசியல் ஸ்திரத்தன்மை, இனங் கள் மத்தியிலான சகவாழ்வு, பொருளாதார உறுதிப்பாடு, உயர்ந்த கல்வியறிவு வீதம் எனப் பல்வேறு துறைகளில் இலங்கை முன்னணியிலிருந்தது. இலங்கை பல் கலைக்கழகங்களின் பட்டங்களுக்கு பொது நலவாய அமைப்பின் அங்கத்துவ நாடுகளில் மிகுந்த மரியாதை இருந்தது. சுகாதாரத் துறையும் மிக உயர்ந்த படித்தரத்திலி ருந்தது. இந்தியர்கள்கூட பலபோது சிகிச் சைக்காக இலங்கைக்கு வந்து சென்றனர்.

இந்த வகையில் முன்னேற்றப் பாதையில் நடைபோடுவதற்குரிய அரசியல், பொரு ளாதார மற்றும் சமூகரீதியான சகல உள்ள டக்கங்களையும் நாடு கொண்டிருந்தது. ஆனால், தூரநோக்கோடு நாட்டை வழி நடத்தக்கூடிய தலைமைத்துவமொன்று நாட்டுக்கு கிடைக்கவில்லை. சுதந்திரத்தைத் தொடர்ந்து இனவாத அரசியலின் அசிங்க மான முகம் மெதுமெதுவாகத் தென்பட ஆரம்பித்தது. சிறுபான்மையினர் அந்நிய மாக்கப்பட்டார்கள். இது நாட்டுக்கு பல் வேறு பாதிப்புகளை ஏற்படுத்தியது.

பெரும்பான்மை சமூகத்தின் உணர்வுக் காக மாத்திரம் இத்தலைவர்கள் வேலை செய்யவில்லை. சிறுபான்மையினரின் உரிமைகள் மற்றும் சலுகைகளை அடக்கி ஒடுக்குமளவுக்கு இவர்கள் சென்றார்கள்.

தூரநோக்கற்ற நமது அரசியல் தலைமை கள் இனம் சார்ந்த சுலோகங்களோடு அரசியல் நடத்தின. இது விடயத்தில் இரண்டு பிர தான கட்சிகளும் ஒன்றோடொன்று போட்டி யிட்டன. விளைவாக, தமிழ் தரப்பினரின் பிரிவினைவாதக் கோரிக்கைக்கு இது வித்திடுகிறது. அந்த நிலையில்கூட வளர்ந்து வருகின்ற அபாயத்தின் உக்கிரத்தைப் புரிந்துகொள்கின்ற சாணக்கியமற்ற நிலை யில்தான் தென்னிலங்கைத் தலைமைகள் இருந்தன.

ஆறு தசாப்தங்கள் கடந்த நிலையில், உலகில் மிக அதிகளவில் முறைய்பற்ற நிர் வாகம் இடம்பெறும் நாடுகள் பட்டியலில் இலங்கையும் இன்று இடம்பெற்றுள்ளது.

இலங்கையைத் தோல்வி அடைந்ததொரு அரசு என சிங்கப்பூரின் முன்னாள் பிரதமர் லீ குவான் லீகூட 2007 இல் குறிப்பிட்டி ருந்தார். இவர்தான் அறுபதுகளில் வளர்ந்து வரும் நாடுகளுக்கு, இலங்கை ஒரு சிறந்த முன்மாதிரியாகும் எனக் கூறியிருந்தவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

அவர் மேலும் குறிப்பிடுகிறார்: இலங்கை யினதும் புதிதாக சுதந்திரம் அடைந்து தோல்வியடைந்த அரசுகளினதும் தவறுகள், சிங்கப்பூரை ஒரு வித்தியாசமான திசையில் நடைபோட வைத்தது. 1965 இல் தோல்வி அடைந்த நாடுகளில் இருபது ஆண்டு கால அனுபவம் எம்மிடமிருந்தது. எதனைத் தவிர்க்க வேண்டும் என நாம் அறிந்திருந் தோம். இலங்கையில் இன, மத ரீதியான முரண்பாடுகளையும் மொழிரீதியான சகஜ மின்மையையும் நாம் கண்டோம். மர்மம் நிறைந்த கடந்த காலத்தை முன்னிறுத்தி, கலாசாரம் மேன்மையை மீள்கட்டமைப் பது போன்ற சிந்தனைகள் எம்மைப் படு குழியில் தள்ளிவிடுமென்பதை நாம் அறிந்தி ருந்தோம். எனவே, ஆங்கிலத்தை உத்தி யோக மொழியாக்கினோம். அதன் மூலம் சகல சமூகங்களையும் ஒன்றாக வைத்திருந் தோம். அதன் மூலம் சிங்கப்பூர் இன்றிருக் கும் நிலையை அடைந்திருக்கிறது.

> “தூரநோக்கற்ற நமது அரசியல் தலைமைகள் இனம் சார்ந்த சுலோகங்களோடு அரசியல் நடத்தின. இது விடயத்தில் இரண்டு பிரதான கட்சிகளும் ஒன்றோடொன்று போட்டியிட்டன. விளைவாக, தமிழ் தரப்பினரின் பிரிவினைவாதக் கோரிக்கைக்கு இது வித்திடுகிறது. அந்த நிலையில்கூட வளர்ந்துவருகின்ற அபாயத்தின் உக்கிரத்தைப் புரிந்துகொள்கின்ற சாணக்கியமற்ற நிலையில்தான் தென்னிலங்கைத் தலைமைகள் இருந்தன”

## எவ்வளவு தெளிவான செய்தி!

இலங்கையின் அரசியல் முறைமை மொத்தமாக ஊழல் மயப்பட்டு, குற்றவாளி களின் புகழிடமாகி, வணிகமயமாகி யுள்ளது. எனவே, சீரியஸான அபிவிருத் திக்கான வாயில்கள் பெரும்பாலும் மூடப் பட்டுள்ளன. நாட்டை ஆளும் உயர்வர்க் கம், நாட்டின் அரசியலில் மிக மூர்க்கமான கட்டுப்பாட்டைக் கொண்டிருக்கின்ற மைதான் ஆறு தசாப்தங்களுக்கும் அதிகமான முறையற்ற முகாமைத்துவத்திற்கான காரண மாகும்.

அரசியலுக்குள் நுழையும் அறுபது வீதமானவர்கள், தமது வியாபார நடவடிக்கை களுக்காகவே அவ்விதம் செய்கிறார்கள் என முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண் டாரநாயக்க குமாரதுங்க ஒருமுறை குறிப் பிட்டார்.

இவ்விதம் அரசியல்ரீதியான ஸ்திரத் தன்மையின்மை, பிரிந்திருக்கின்ற இனங்கள் என ஆரம்பித்து இனரீதியான யுத்தத்திற்குள் நாடு இறுதியில் தள்ளப்பட்டது. உலகமயப் பட்ட பொருளாதார அபிவிருத்தி காரணமாக உருவாகியிருக்கின்ற வாய்ப்புகளைப் பயன் படுத்தி, பிராந்தியத்தின் எல்லா நாடுகளும் தமது மக்களுக்கு சிறந்த வாழ்க்கைத் தரத்தை பெற்றுக் கொடுப்பதற்காக விரைந்து கொண்டிருக்கின்றன. வியட்நாம் கூட தனது கடந்த காலத்தை ஒருபுறம் வைத்து விட்டு பொருளாதார அபிவிருத்தியை நோக்கி விரைந்து கொண்டிருக்கிறது.

எழுபதுகளில் இந்திய ரூபாயொன்று, இலங்கை நாணயத்தில் 40 சதத்திற்கு சம மானதாக இருந்தது. இன்று இந்திய ரூபா யொன்றுக்கு எதிரான இலங்கை ரூபாயின் வெளிநாட்டு நாணயமாற்றுப் பெறுமதி, சுமார் இரண்டு ரூபாய் ஐம்பது சதமாகும்.

வறிய, முக்கியத்துவமற்ற நாடாகவும் கல்வியிலிருந்து மருத்துவம் வரை சகல தேவைகளுக்கும் இலங்கைக்கு வரவேண்டிய தேவையிலும் இருந்த மாலைத்தீவு, இன்று பொருளாதாரரீதியாக பெருமளவிலான அடைவுகளை அடைந்திருக்கின்றது. அதன் தலா வீத வருமானம் இலங்கையை விட மூன்று மடங்கு அதிகமாகும். ஆசியாவி லேயே மிகவும் செல்வந்த நாடுகளில் ஒன் றாகக்கூட மாலைத்தீவைச் சிலர் வர்ணிக் கிறார்கள்.

நாம் சுதந்திரம் அடைகின்ற காலத்தில் டுபாய் என்பது அறியப்படாததொரு பெயர். பாரம்பரிய மண் வீடுகள் தவிர, ஒழுங்குமுறையான கட்டிடங்களோ, பாதைகளோ, பாடசாலைகளோ வைத்திய சாலைகள் உள்ளிட்ட அடிப்படை வசதிகள் அங்கிருக்கவில்லை. மின்சாரம் என்பதே கேள்விப்படாத நாடாக அன்றிருந்தது. முழு சனத்தொகையுமே கல்வியறிவற்றதாக இருந் தது. பெரும்பாலானவர்கள் கடினமான காலநிலையிலும் கூட மீன்பிடி மற்றும் கருவாட்டு கைத்தொழிலில்தான் ஈடுபட் டார்கள். இனம், மதம், மொழி, கலாசாரம் கடந்து நாட்டின் பொருளாதாரத்திற்கு பங் களிப்பு செய்யக்கூடிய நபர்களை நாட்டுக் குள் அனுமதித்து, அவர்களுக்கு சம வாய்ப்பு களை வழங்கியதன் மூலம் இன்று பிரம்மிக் கத்தக்க வளர்ச்சியை அது அடைந்திருக் கிறது. 2008 ஏப்ரல் வரை டுபாய் நிறுவன மொன்றுதான் எமது எயார் லங்காவை நிருவகித்தது. சிறியதொரு நகர அரசாக இருந்தபோதிலும் டுபாயின் அனுபவத்தி லிருந்து இலங்கை கற்றுக்கொள்ள வேண்டிய பாடங்கள் எவ்வளவோ இருக்கின்றன.

ஆனால், இவற்றிலிருந்து பாடம் படிப் பதும் எமது சொந்த வரலாற்றிலிருந்து பாடம் படிப்பதும் ஒரு புறமிருக்க, அரசாங் கத்திலும் வெளியிலும் இருக்கின்ற தேசிய வாதிகள், ஒரே ஒரு இனம் மட்டுமே இங்கு இருக்கிறது, அது சிங்கள இனம் மட்டுமே என்றும் ஏனையவர்கள் பெரும்பான்மை யினரைப் பின்தொடரக் கற்றுக்கொள்ள வேண்டும் என்றும் எதிர்பார்க்கிறார்கள்.

முப்பது ஆண்டுகால யுத்தத்தின் பாடங் களைப் புறந்தள்ளிவிட்டு, மே 2009 இல் யுத்தம் நிறைவடைந்ததில் இருந்து சிறு பான்மையினரை ஓரங்கட்டும் முழு அளவி லான சிங்களமயமாக்கல் நிகழ்ச்சி நிரலொன்று வேகம் பிடித்துள்ளது. சகவாழ்வு, சமூக நல் லிணக்கம், புனர்வாழ்வு என்பதெல்லாம் வெறும் சுலோகங்களாக நின்றுவிடுமோ? என்ற அச்சம் உருவாகியுள்ளது.

**லதீப் பாரூக்**

எதிர்காலத் தலைமுறையாவது அமைதி யாக வாழ வேண்டுமானால், அதற்குரிய முன்னெடுப்புகள் இப்போது ஆரம்பிக்கப் பட வேண்டும். இது இமாலய இலக்காக இருந்தாலும் சாத்தியமில்லாததல்ல.

இந்த வகையில், முக்கியமாகக் கவனம் செலுத்த வேண்டிய ஒரு பகுதிதான் நிறை வேற்று அதிகாரமுள்ள ஜனாதிபதி முறை யாகும். தோல்வியடைந்துள்ள இம்முறை மையை மாற்றுவதற்கு, கடந்த மூன்று தசாப்தங்களாக எல்லா சமூகங்களும் விருப்பம் கொண்டிருக்கின்றன. இதே வாக்குறுதி யோடுதான் 1993 தேர்தலில் சந்திரிகா குமாரதுங்க வெற்றிபெற்றார். ஆனால், துரதிஷ்டவசமாக அதிகாரத்தின் சுவை தெரிந்த பிறகு, அதனை மாற்றியமைக்க அவர் விரும்பவில்லை. இரண்டுமுறை அவர் பதவிக் கட்டிலில் அமர்ந்திருந்த போதும் கூட, இம்முறைமையை மாற்றி யமைக்க அவர் எதுவும் செய்யவில்லை.

இவ்விதம் தனிநபர் ஒருசிலரின் தலை யில் பாராளுமன்றத்திற்கோ, நாட்டிற்கோ பொறுப்புக் கூறவேண்டிய கடமைப்பாடும் அற்றநிலையில் அதிகாரம் குவிந்து கிடக்கின் றமை இந்நாட்டிற்கு கிடைத்திருக்கின்ற சாபக்கேட்டுக்கான முக்கியமான காரணங் களுள் ஒன்றாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெள்ளிவிழா காணும் அஷ்ரஃப் ஞாபகார்த்த வைத்தியசாலை


யூ.எம். இஸ்ஹாக்

கல்முனைக்குடி பிரசவ விடுதியாக ஆரம்பிக்கப்பட்ட அஷ்ரஃப் ஞாபகார்த்த வைத்தியசாலை கடந்த நவம்பர் 05 ஆம் திகதியுடன் 25 வருடங்களைப் பூர்த்தி செய்துள்ளது. கடந்த 25 வருடங்களில் இதன் துரித வளர்ச்சியையும் மக்கள் சேவையையும் நினைவுகூரும் முகமாக வெள்ளி விழா வைபவம் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

1980 இல் கல்முனைக் குடியில் ஒரு பிரசவ விடுதி அமைக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கை மக்களால் முன்வைக்கப்பட்ட போது பிரசவ விடுதி அமைக்க பொருத்தமான இடமாக தற்போதைய அஷ்ரஃப் ஞாப கார்த்த வைத்தியசாலை அமைந்துள்ள இடம் இனங்காணப்பட்டது. இந்த இடம் அப்போது ஒரு பிரபல சந்தையாகவிளங்கியது. 1952 இல் கல்முனை பட்டண சபை இந்த இடத்தின் பின் பகுதியை மாடறுக்கும் இடமாகப் பயன்படுத்தியது. 1957 இல் இவ்விடத்தில் ஆயுர்வேத மருந்தகம் ஒன்றையும் கட்டி நடத்தியது. அவ்வாறே, 1976 இல் ஒரு பிரசவ விடுதியும் கட்டப்பட்டு பூரணப்படுத்தப் படாமல் இருந்தது.

1988 இல் கல்முனைக் குடி மத்திய மருந்தகப் பொறுப்பதிகாரியாக கடமையாற்றிய டாக்டர் எம்.ஐ.எம். ஜெமீல் அவர்கள் இவ்விடத்தில் பிரசவ விடுதியொன்று நிறுவப்படுவது எதிர்காலத்தில் முழு தென்கிழக்கு பிராந்தியத்துக்குமான, ஒரு பூரணத்துவமான வைத்தியசாலை உருவாக உதவும் எனத் தெரிவித்த ஆலோசனையின் பேரில், முன்னாள் அமைச்சர் ஏ.ஆர். மன்சூர் அவர்கள் இங்கு பிரசவ விடுதியொன்றைக் கட்டுவது எனத் தீர்மானித்து நடவடிக்கையில் இறங்கினார்.

பிரசவ விடுதி கட்டுமான வேலைகள் பூர்த்தியாக்கப்பட்டு, 1988.11.05 ஆம் திகதி அப்போது பிரதம மந்திரியாக இருந்த அமரர் ஆர். பிரேமதாச அவர்கள், அமைச்சர் ஏ. ஆர். மன்சூர் அவர்களின் அழைப்பின் பேரில் இப்பிரசவ விடுதியை கோலாகலமாகத் திறந்துவைத்தார்.

இவ்வைத்தியசாலையில் முதலாவது வைத்தியராகக் கடைமையாற்றிய டாக்டர் எம்.ஐ.எம். ஜெமீல் அவர்கள் 1989 நடுப்பகுதியில ஓய்வுபெற, டாக்டர் எம்.எம். லியாகத் அலி அவர்கள் சிறு காலம் கடமையாற்றினார்.

பயங்கரவாதம் உச்சளவிலிருந்த 1990 களில் இரவில் வேலை செய்வதிலுள்ள அச்சம் காரணமாக இங்கு பகல் வேளைகளில் மட்டுமே சிகிச்சைகள் நடைபெற்றன. இந்நிலை 1994 ஆம் ஆண்டின் பிற்பகுதி வரையும் நீடித்ததினால் மட்டுப்படுத்தப்பட்ட சேவைகளே வழங்கப்பட்டு வந்தன.




1994 ஆம் ஆண்டின் பிற்பகுதியில் டாக் டர் ஏ.எல்.எப். றஹ்மான் அவர்கள் இவ் வைத்தியசாலையை பொறுப்பெடுத்ததை தொடர்ந்து, இது மிக வேகமாக அபிவிருத்தியடையத் தொடங்கியது. 1995 இல் சுற்றயற் கூறாகவும் 1996 இல் மாவட்ட வைத்திய சாலையாகவும் 1999 இல் ஆதார வைத்திய சாலையாகவும் தரம் உயர்த்தப்பட்டது.

1995-2000 ஆண்டு வரையான துரித அபிவிருத்திக்கு மர்ஹூம் எம்.எச்.எம். அஷ்ரஃப் அவர்களினது பங்களிப்பு, செயற்பாடுகள் மிக உன்னதமானவை.

2000 ஆம் ஆண்டின் பின் அமைச்சர் அஷ்ரஃப் அவர்களின் அகால மரணத்தைத் தொடர்ந்து பாராளுமன்ற உறுப்பினர் பேரியல் அஷ்ரஃப் அவர்களினதும் கல்முனை பாராளுமன்ற உறுப்பினர் எச்.எம்.எம். ஹரிஸ், பல அரசியல் பிரமுகர்கள் மற்றும் வைத்தியசாலை அபிவிருத்தி சபையின் ஒத்துழைப்புடனும் இவ்வைத்தியசாலை மேலும் அபிவிருத்தியடைந்தது. 2002 இல் மேலும் தரமுயர்த்தப்பட்டு கல்முனை அஷ்ரஃப் ஞாபகார்த்த வைத்தியசாலை எனப் பெயர்மாற்றம் செய்யப்பட்டது.

பல குறைபாடுகளுக்கு மத்தியிலும் இவ் வைத்தியசாலையில் அர்ப்பணிப்புடன் சேவையாற்றிய மற்றும் சேவையாற்றும் வைத்தியர்கள், தாதிமார்கள், உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் ஆகியோரின் உன்னத சேவைகள் இவ்வைத்தியசாலை தென்கிழக்குப் பிராந்தியத்தில் முதல்தரமாக மிளிர்வதற்கு முக்கிய பங்கு வழங்கியுள்ளன. இவர்களும் இப்பிரதேச மக்களின் நன்றிக்கும் பாராட்டுக்கும் உரியவர்கள்.


எதிர்காலத்தில் இவ்வைத்தியசாலை பாரம்பரிய சிகிச்சை முறைகளுக்கு மேலதிகமாக இப்பிரதேச மக்களின் தேவைகளையும் கண்டறிந்து, புதிய பொறிமுறைகளுடன் கூடிய நவீன சிகிச்சை வசதிகளை வழங்க முன்வரவேண்டும் என மக்கள் எதிர்பார்க்கின்றனர்.

1988 ஆம் ஆண்டு நவம்பர் 05 ஆம் திகதி மகப்பேற்று நிலையமாக ஆரம்பிக்கப்பட்ட இந்த வைத்தியசாலை, இன்று அரசாங்கம் சுகாதார துறைக்கு வழங்கிவருகின்ற முக்கியத்துவத்தின் அடிப்படையில் சகல வசதிகளையும் கொண்ட வைத்தியசாலையாக மூவின மக்களுக்கும் சிறந்த சேவைகளை வழங்கி வருகின்றது.

வைத்தியசாலையின் வெள்ளிவிழா டிசம்பர் மாதம் 14 ஆம் திகதி கோலாகலமாக நடைபெறவுள்ளது. இந்நிகழ்வில் சுகாதார அமைச்சர் உட்பட பல முக்கிய பிரமுகர்கள் கலந்து கொள்ளவுள்ளனர்.

வெள்ளிவிழர்வை ஒட்டி வைத்திய அத்தியட்சகர் டாக்டர் ஏ.எல்.எம். நசீர் தலைமையில், அண்மையில் இடம்பெற்ற நிகழ்வில் வைத்தியசாலை உள்ளக வீதி அமைப்பு நிர்மாணப்பணி ஆரம்பித்து வைக்கப்பட்டதுடன் தாய்ப்பாலூட்டல் நிலையம், கண் சிகிச்சை நிலையம் என்பனவும் திறந்துவைக்கப்பட்டன. அத்துடன் வெள்ளிவிழா நடைபவனியும் வைத்திய சாலையிலிருந்து கல்முனை நகரம் வரை மேற்கொள்ளப்பட்டது. வைத்தியசாலையில் கடமையாற்றும் வைத்தியர்கள், உத்தியோகத்தர்கள், அபிவிருத்திக்குழு உறுப்பினர்கள் உட்பட் நலன் விரும்பிகளும் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.

# ஆசிரியர் தினத்தில் பெற்றோர் கௌரவிப்பு




சர்வதேச ஆசிரியர் தினத்தை முன்னிட்டு, பேருவளை சீனங் கோட்டை நளீம் ஹாஜியார் மகளிர் கல்லூரியின் ஆசிரியர் தின நிகழ்வு மற்றும் அங்கு கற்பிக்கின்ற ஆசிரியர்களின் தாய்மார்களை கௌரவிக்கும் நிகழ்வு என்பன அண்மையில் கல்லூரி அதிபர் நூர் ஹலீமா நஜீப்தீன் தலைமையில் பாடசாலையில் வெகு சிறப்பாக நடைபெற்றது.

மாணவர்களால் ஆசிரியர்கள் கௌரவிக்கப்படும் வழமையான நிகழ்விற்கு மாற்றமாக அதிபரினால் அறிமுகப்படுத்தப்பட்ட 'அன்னையாரின் நேரம்' நிகழ்வு இடம்பெற்றது. இந்நிகழ்வில் ஆசிரியர்கள் தமது தாய்மார்களுக்கு பரிசுகளைக் கொடுத்து கௌரவித்து மகிழ்ச்சிப்படுத்தியமை பாடசாலை வரலாற்றில் ஒரு திருப்பு முனையாகும்.

இந்நிகழ்வில் சிறப்புப் பேச்சாளராக கலந்துகொண்ட ஜாமிஆ நளீமிய்யா கலாபீடத்தின் சிரேஷ்ட விரிவுரையாளர் எஸ்.எச்.எம். பளீல் அவர்கள் தனது உரையில்: இன்றைய நிகழ்வு இப்பாடசாலையைப் பொறுத்தவரை ஒரு சிறப்புமிக்க அம்சமாகும் அல்லாஹுத்தஆலாவிற்கு அடுத்தபடியாக எமக்கு பங்களிப்புச் செய்வோராக தாய் தந்தையரே உள்ளனர். நன்றியுள்ளவராக இருப்பது ஒரு முஸ்லிமின் அடிப்படைப் பண்பாகும். இவ்வகையில் எம்மைப் பெற்றெடுத்து, கல்வி புகட்டி, உன்னத நிலைக்கு ஆளாக்கி, பல வழிகளாலும் உதவிகளை வழங்குகின்ற எமது தாய், தகப்பனை கௌரவிப்பதானது மிகவும் மகிழ்ச்சிக்குரிய விடயமாகும் எனத் தெரிவித்தார்.



மேலும் அவர் உரையாற்றும் போது: ஆசிரியர்கள் தமது தாய்மார்களை கட்டித்தழுவி அன்பையும் மகிழ்ச்சியையும் பகிர்ந்து கொள்ளும் காட்சியானது எமது கண்களையும் கலங்கவைக்கிறது. இம்மாதிரி நிகழ்வுகள் இனியும் தொடர வேண்டும் எனத் தெரிவித்தார்.

இந்நிகழ்வின் இறுதியில் கல்லூரி அதிபர் நூர்ஹலீமா நஜீப்தீன் உரையாற்றுகையில்: இவ்வைபவமானது நன்றி தெரிவிக்கும் ஒரு நிகழ்வு மட்டுமே. பரிசுகளும் நினைவுச் சின்னங்களும் எவ்வகையிலும் பெற்றோரது சேவைகளுக்கு நிகராக முடியாது. இம்மேடையில் வீட்டிருக்கும் தாய்மார்கள் இல்லத்தரசிகள் மட்டுமல்ல; இவர்கள் சாதனையாளர்கள். இவர்கள் செய்த தியாகங்கள், அனுபவித்த துன்பங்கள் ஏராளம். இந்த வகையில் கண்ணியமிக்க தந்தைமார்களும் பாராட்டப்பட வேண்டியவர்கள் எனக் கூறினார்.

இவ்விழாவில் ஆசிரியர்களின் தாய்மார்களுடன் கலந்துரையாடல் நிகழ்ச்சியும் நடைபெற்றது. இதன் போது வாழ்க்கையில் எந்த தடங்குகள், பிரச்சினைகள் வந்தாலும் தன் பிள்ளைகளின் கல்வி நடவடிக்கைக்கு இடையூறு ஏற்படாதவாறு நடக்க வேண்டுமென ஆசிரியர்களின் பெற்றோர்களால் இன்றைய இளந்தாய்மார்களுக்கு அறிவுறையும் வழங்கப்பட்டது.

ஏ.எச்.எம். சியான்
ஆசிரியர்,
நளீம் ஹாஜியார் மகளிர் கல்லூரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




-மலைஞானி

(மேல் மாகாணசபைத் தேர்தலில் தமிழ்த் தேசிய கூட்டமைப்பும் இ.தொ.கா. வும் போட்டியிட்டால் தனது ஜனநாயக மக்கள் முன்னணி பாதிப்படையும் என மனோ கணேசன் தெரிவித்திருப்பதை ஒட்டிய கட்டுரை இது)

# மனோ கணேசனின் புலம்பல்

> “பிரபா கணேசன் மனோவின் பெயரை வைத்தே கொழும்பு மாவட்டத்திலிருந்து பாராளுமன்றத்திற்கு தெரிவானார். பின்னர் மனோவின் முதுகில் குத்துவிட்டு ஆளுங்கட்சிக்குத் தாவினார். மனோ கட்டியெழுப்பிய கோட்டையில் பெரிய சரிவு ஏற்பட்டது.”



***பார்த்தீர்களா,*** சோர்ந்துவிட்டாரே மனோ கணேசன்!

வீர வசனங்களுக்கும் அனல் தெறிக்கும் அறிக்கைகளுக்கும் பெயர் பெற்றவர். அவ்வாறே மக்களுக்கும் அரசியல் அரங்குக்கும் தன்னை அறிமுகம் செய்து கொண்டிருப்பவரே மனோ. இதைத் தவிர வேறெதுவும் கிடையாது அவரது அரசியல் பைக்குள். அவர் செய்தது குடும்ப அரசியல். தொண்டமான் குடும்ப அரசியல், ராஜபக்ஷ குடும்ப அரசியல் பற்றியெல்லாம் பேசுவதற்கு அவருக்கு அருகதை கிடையாது. கட்சியை உருவாக்கியதே குடும்பத்தை நம்பித்தான்.

அவரது அப்பா வி.பி. கணேசன் எட்டியாந்தோட்டையில் ரேடியோ பழுதுபார்க்கும் கடை வைத்திருந்தவர். ஜனநாயக தொழிலாளர் காங்கிரஸ் தொழிற்சங்கத்தில் சறுசுறுப்பாக செயல்பட்டவர்.

இ.தொ.கா. விலிருந்து, தொண்டமானுடன் ஏற்பட்ட கருத்துவேறுபாடு காரணமாக, வெளியேறி ஜனநாயக தொழிலாளர் காங்கிரஸ் என்ற போட்டி தொழிற்சங்கம் ஒன்றை ஆரம்பித்தார், அப்துல் அஸீஸ்.

இன்றய இளைய தலைமுறைக்கு, ஒரு முஸ்லிம் பெரியவர் தோட்டத் தொழிலாளர்களுக்கு தலைமையேற்று அவர்களின் உரிமைகளுக்காக குரல் கொடுத்தார் என்பது புதுச் செய்தியாக இருக்கலாம். ஏனெனில், தோட்டத் தொழிலாளர்களில் இஸ்லாமியர்களின் எண்ணிக்கை ஒரு சதவீத்துக்கும் குறைவு. இருந்தும்கூட, இ.தொ.கா. வின் உயர்மட்டத்தில் ஒரு முஸ்லிம் தலைவர் இருக்கிறார் என்பதோடு, தொண்டமானோடு முரண்பட்டு வெளியேறி ஒரு தனி சங்கத்தை வெற்றிகரமாக அமைத்து அதை இ.தொ.கா. வுக்கு மாற்றாகவும் கொண்டு நடத்த ஓர் இஸ்லாமியரால் முடிந்திருக்கிறது என்பதும் குறிப்பிடத்தக்க விஷயங்கள். அதுமட்டுமல்ல இ.தொ.கா. வில் இருந்து வெளியேறி பெ. சந்திரசேகரன் மலையக மக்கள் முன்னணி என்ற தொழிற்சங்கத்தை தொடங்கியபோது, அவருடன் இணையாக செயற்பட்டவரும் ஓர் இஸ்லாமியரே. அவர் பெயர் காதர். இவருக்கு பின்னர் தொழிற்சங்கங்களில் இஸ்லாமியரின் பங்களிப்பு முடிவுக்கு வந்துவிட்டதாகவே கருத வேண்டியிருக்கிறது.

தொண்டமான் என்றைக்கும் ஐ.தே.க. அனுதாபியாக இருந்ததால் அஸீஸ் சுதந்திரக் கட்சி அனுதாபியாக இருக்க வேண்டியதாயிற்று.

அவருடைய ‘டிபுட்டி’யாக செயல்பட்ட வி.பி. கணேசன் தனிப்பட்ட ரீதியாகவும் தன்னை வளர்த்துக்கொண்டார். அவருக்கு திரைப்படங்களில் நடிக்க வேண்டுமென்ற ஆசையும் கிளம்பியது. திரைப்பட கதாநாயகனாகத் திரையில் தோன்றுவதற்கான தோற்றமோ, முகவெட்டோ இல்லாத அவர், தான் கதாநாயகனாகத் தோன்றுவதற்காகத் தானே முதல்போட்டு படங்களையும் தயாரித்தார். புதிய காற்று, நாடு போற்ற வாழ்க என படங்களைத் தயாரித்து நடித்தார். அவர் கனவு நனவாகியது என்பதை விட அத்திரைப்படங்கள் வசூலிலும் வெற்றி பெற்றன என்பதுதான் இங்கே முக்கியமாகக் கவனிக்கப்பட வேண்டிய விஷயம்.

அஸீஸ் மறைவின் பின்னர் வி.பி. கணேசன் கட்சியைக் கைப்பற்றினார். மகன் மனோ கணேசன் அவருக்கு பின் புதுப் பெயரில் கொழும்பு தமிழர்களை மையமாகவைத்து கட்சி ஆரம்பித்ததும் அதைக் குடும்பக் கட்சியாக நடத்தியதும் உங்களுக்கு தெரிந்த விஷயங்கள். மேலக மக்கள் முன்னணி என்று பெயர் மாற்றி, தன் கட்சியை முற்று முழுதாக மேல்மாகாண கட்சியாக நடத்துவதற்கு முனைந்தார். அது யுத்த காலம். கொழும்பில் வடக்கை சேர்ந்த தமிழர்கள் பல இன்னல்களை சந்தித்த நேரம். அப்போது அவர்களுக்கு ஆதரவாகவும் வடக்கில் நடக்கும் ஆயுதப் போராட்டத்துக்கு சாதகமாக குரல் எழுப்புவதும் மனோ கணேசனின் அரசியல் பாணியாக இருந்தது.

இதன் மூலம் மேல் மாகாணத்தில் ‘ஆபத் பாந்தவன்’ என்ற பெயரை கொழும்புத் தமிழர்கள் மத்தியில் அவரால் ஈட்ட முடிந்தது. யுத்த சூழல் கொழும்பிலும் அதன் சுற்றுப்புறங்களிலும் ஏற்படுத்திய விளைவுகளிலிருந்து மனோ கணேசன் அரசியல் அறுவடை செய்துகொண்டார்.

ஏனெனில், வடக்கு கிழக்கில் இருந்து வந்து கொழும்பில் வாழும் தமிழர்களுக்கான உரத்த குரல் எழுப்பும் மனிதராக மனோ கணேசன் தன்னை காட்டிக் கொண்டதால், கொழும்பு வாழ் தமிழர்கள் மனோவை விட்டால் எங்களுக்காக பேசுவதற்கு வேறு யார் இருக்கிறார்கள்? என்று எண்ணினார்கள். அவர் எதிர்கொண்ட தேர்தல்களில் எல்லாம் வெற்றிபெறச் செய்தார்கள். மேலும் அவர் ஐ.தே.க. வுடன் சேர்ந்தே தேர்தலில் இறங்கினார். இவரை மாத்திரமல்ல, இவரது இரண்டு சகோதரர்களையும் மக்கள் வெற்றி பெறச் செய்தார்கள். அவரது கட்சியால் மத்திய மாகாணத்திலும் வெற்றிபெற முடிகிறது என்றால் அது அவர் மக்களுக்காக சாதித்திருப்பதற்காக அளிக்கப்படும் வாக்குகளல்ல. அவர் ஒடுக்கப்பட்டவர்களுக்காக குரல் எழுப்புகிறவர், தமிழ் உணர்வாளர், தமிழ் மக்களுக்கு செய்யப்படும் அநீதிகளை பகிரங்கப்படுத்துபவர் என்பதற்காக அவருக்கு அளிக்கப்படும் அங்கீகாரமே இந்த வாக்குகள் என்பதையும் மனோவும் அறிவார்.

மனோவுக்கு வாக்களிப்பவர்களிடம், ஏன் அவருக்கு வாக்களித்தீர்கள்? என்று கேட்டால் இதே காரணங்களையே அவர்கள் சொல்வார்களே தவிர, தொழிற்சங்க போராட்டங்களில் ஈடுபட்டு உரிமைகளையும் கோரிக்கைகளையும் பெற்றுத்தந்தார், சம்பள பிரச்சினையில் வெற்றிபெற்றுத் தந்தார் என்றெல்லாம் அவர்கள் சொல்லப் போவதில்லை. 2009 இல் யுத்தம் முடிவுக்கு வந்த பின்னர், யுத்தம் தான் முடிந்துவிட்டதே இனி மனோ கணேசனிடம் விற்று அரசியல் நடத்துவதற்கு என்ன இருக்கிறது என்று சிலர் அரசியல் வட்டாரங்களில் கேட்டு நகைத்ததுமுண்டு. ஆனால் யுத்தத்தை மட்டும் முடித்து விட்டு பிரச்சினையை அப்படியே இந்த அரசாங்கம் விட்டுவைத்திருப்பதால் அரசியல் நடத்துவதற்கு மனோ கணேசனிடம் நிறைய சரக்குகள் இருக்கவே செய்கின்றன.

வடக்கு கிழக்குக்கு வெளியே அவர் ஒரு சக்தியாக உருவெடுத்துவிடலாம் என்ற அச்சமும் பெரிய கட்சிகளிடம் இருந்தது. இந்த நிலையிலேயே சகோதரர்களிடம் பிளவு தோன்றியது அல்லது தோற்றுவிக்கப்பட்டது. தன் கொழும்பு பாராளுமன்ற ஆசனத்தை பிரபா கணேசனுக்கு விட்டுக் கொடுத்துவிட்டு கண்டிக்குச் சென்றார் மனோ கணேசன். அங்கே சிறிய வாக்கு வித்தியாசத்தில் தன் பாராளுமன்ற வாய்ப்பை இழந்தார். பிரபா கணேசன் மனோவின் பெயரை வைத்தே கொழும்பு மாவட்டத்திலிருந்து பாராளுமன்றத்திற்கு தெரிவானார். பின்னர் மனோவின் முதுகில் குத்துவிட்டு ஆளுங்கட்சிக்குத் தாவினார். மனோ கட்டியெழுப்பிய கோட்டையில் பெரிய சரிவு ஏற்பட்டது.

மூன்று சகோதரர்களும் திட்டமிட்ட ரீதியாக செயற்பட்டிருந்தால் இ.தொ.கா. வுக்கு சரியான ஒரு போட்டியாகவும் சகல தமிழ் இளைஞர் நெஞ்சங்களையும் கைப்பற்றியவர்களாகவும் தம்மை வளர்த்துக் கொண்டிருப்பார்கள். ஆனால், யார் கண் பட்டதோ, குடும்பப் பிரச்சினைகள்தானோ அல்லது பின் நின்று இயங்கிய சதியா தெரியவில்லை மனோவின் கோட்டை தகர்ந்துபோனது.

கடந்த இருபது வருடங்களை எடுத்துக் கொண்டால், மனோ எதை சாதித்தார் என்ற கேள்விக்கு பெருமைப்படுகின்ற பதில் கிடையாது. எல்லா மாகாண, பாராளுமன்ற உறுப்பினர்களும் செய்கின்ற வேலைகளைத் தான் மனோவும் செய்திருக்கிறார். ஆனாலும், நிறைய சாதித்தவர், வழிகாட்டக் கூடியவர் என்ற ஓர் அபிப்பிராயத்தை மக்களிடையே ஏற்படுத்த முடிந்திருக்கின்றது. கொழும்பிலுள்ள வடக்கு, கிழக்கு தமிழ் மக்கள் தத்தமது மாகாணங்களில் இருந்திருந்தால் எந்தெந்த கட்சிகளுக்கு வாக்களித்திருப்பார்களோ அந்த திருப்தியை கொழும்பில் மனோ கணேசனுக்கு வாக்களிப்பதன் மூலம் பெற்றுக்கொள்ள முடிகிறது என்பதும் மனோ கணேசன் கொழும்பில் வெற்றி பெறுவதற்குக் காரணமாக இருந்திருக்கிறது என்பதையும் சுட்டிக்காட்ட வேண்டும். மேலும், கொழும்பு மாவட்டத்தில் மட்டுமன்றி, மேல் மாகாணத்திலும் அவர் பேசப்படும் நபராகவும் ஏணிச் சின்னம் நன்கறிந்த சின்னமாகவும் விளங்குவதற்கும் காரணமுண்டு. ஏக்கம், இயலாமை, ஆத்திரம் என்பவற்றுக்கு அவர் இன்றைக்கும் வடிகாலாக இருந்துவருகிறார் என்பது சமூக உளவியல் காரணமாக சுட்டிக்காட்டப்பட முடியும்.

கண்டியிலோ, நுவரெலிய மாவட்டத்திலோ மனோ கணேசனின் ஜனநாயக மக்கள் முன்னணி வேட்பாளர்களினால் வெற்றிபெற முடிகிறது என்றால் அதற்குக் காரணமும் இதே உளவியல் பார்வைதான். தமது ஆத்திரத்தை மனோ கணேசனுக்கு வாக்காளர்கள் வாக்குகளாக சமர்பிக்கிறார்கள்.

ஆனால், தற்போது நிலைமைகள் மாறி வருகின்றன. வடக்கிலே தமிழ்த் தேசிய கூட்டமைப்பினர் தலைமையிலான மாகாண சபை அதிக பெரும்பான்மையுடன் ஆட்சி அமைத்துள்ளது. மலையகத்தில் மத்திய மாகாண சபைத் தேர்தலில் ஐ.தே.க. எட்டு ஆசனங்களைக் கைப்பற்றியுள்ளது. அங்கும் 14 தமிழ் உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

(18ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கவிஞர் பொத்துவில் அஸ்மின் எழுதிய பாம்புகள் குளிக்கும் நதி கவிதை நூல் வெளியீட்டு விழா அண்மையில் இலங்கை தபால் திணைக்களத்தின் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதம அதிதியாக கலந்துகொண்ட நீதிய மைச்சர் ரவூப் ஹக்கீமிடமிருந்து இலக்கியப் புரவலர் ஹாஸிம் உமர் முதற்பிரதி பெறுவதையும் நிகழ்விற்கு வருகை தந்தவர்களையும் படங்களில் காணலாம்.

படமும் தகவலும்: ஏ.எஸ்.எம். ஜாவித்



தேசிய டெங்கு நுளம்பு ஒழிப்பு வாரத்தையொட்டி பொதுமக்களுக்கு டெங்கு ஒழிப்பு விழிப்பூட்டும் பேரணி அண்மையில் ஓட்டமாவடி கல்விக் கோட்டத்திற்குற்பட்ட மட்/ மீராவோடை அமீர் அலி வித்தியாலய அதிபர் எம். மஹ்ரூப் தலைமையில் இடம்பெற்றது. மாணவர்கள் பதாகைகள் ஏந்தி ஊர்வலமாகச் செவதை இங்கு காணலாம் .

படமும் தகவலும்: எம்.ரீ.எம். பாரிஸ்



மகாத்மா காந்தி ஞாபகார்த்த விருது வழங்கும் நிகழ்வு அண்மையில் இரத்தின தீபம் விருது வழங்கும் அமைப்பினால் கல்முனை இஸ்லாமபாத் முஸ்லிம் வித்தியாலய கேட்போர் மண்டபத்தில் நடைபெற்றது. இதில் கல்முனை பிரதேச செயலாளர் எம்.எம். நௌபல் அருட் திரு எஸ்.எல்.ஜெ. மத்தியுவுக்கு அரிவரசு பட்டம் வழங்கி கௌரவிப்பதை இங்கு காணலாம்.

படமும் தகவலும்: ராசீக் நபாயிஸ்



நீண்டகாலமாக புனர்நிர்மாணம் செய்யப்படாமலிருந்த உயன்வத்தை அலுத்நுவர கடுகஹவத்தை வீதி, பிரதேச சபை உருப்பினர் எம்.ஆர்.எம். நவ்சாத் அவர்களின் வேண்டுகோளுக்கிணங்க துரிதமாக அபிவிருத்தி செய்யப்பட்டு வருகின்றது. இதன் ஓர் அங்கமாக கடுகஹவத்தை பழைய பாலம் அகற்றப்பட்டு புதிய பாலம் அமைக்கப்படுவதை படங்களில் காணலாம்.

படமும் தகவலும்: நிஸாமுதீன்



கல்வியமைச்சினால் வருடாந்தம் சிறந்த சேவையை ஆற்றிவரும் ஆசிரியர்களை தேர்வு செய்து வழங்கும் பிரதீபா பிரபா 2013 ஆம் ஆண்டுக்கான ஜனாதிபதி விருதை காத்தான்குடி மத்திய மஹா வித்தியாலய தேசிய பாடசாலை உடற்பயிற்சி ஆசிரியர் எம்.எம். ஜஹ்பர், கல்வியமைச்சர் பந்துல குணவர்த்தனவிடமிருந்து பெற்றுக்கொள்வதை படத்தில் காணலாம்.

படமும் தகவலும்: பழுளுல்லாஹ் பர்ஹான்

# புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தி



மாவனல்லை கே/ ஸாஹிரா கல்லூரியைச் சேர்ந்த எம்.என்.எப். நிஸ்மா ஐந்தாம் தர புலமைப்பரிசில் பரீட்சையில் 179 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்துள்ளார். இவர் மாவனல்லை நஜீப்கான் - ஹுமைரா தம்பதியினரின் புதல்வியாவார்.



மன்னார் மன்/அல்-அஸ்ஹர் மகா வித்தியாலய மாணவர்களான முஹமட் எம்.ஆர்.எம். றிஹான் (177) மற்றும் எம்.என். அஸ்பா பானு (157) ஆகியோர் ஐந்தாம் தர புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்துள்ளனர். எம்.ஆர்.எம். றிஹான் என்பவர் மன்னார் உப்புக் குளத்தைச் சேர்ந்த என். எம். முஹம்மட் றிஸ்னி - எம்.ஆர். ஹலீமா ஆகியோரின் புதல்வரும் எம்.என். அஸ்பா பானு என்பவர் மன்னார் தாரா புரத்தைச் சேர்ந்த எம்.ஆர். முஹமட் நாஸர்- எம்.எம். அலிமா ஆகியோரின் புதல்வியாவார்.



இறக்காமம் கமு/சது/ அமீர் அலிபுர வித்தியாலயத்தைச் சேர்ந்த என்.எம். சஹி ஐந்தாம் தர புலமைப்பரிசில் பரீட்சையில் 156 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்துள்ளார். இவர் இறக்காமம் முஹம்மது ஹனீபா நியாஸ் - அச்சி முஹம்மது சல்மா பீவி தம்பதியினரின் புதல்வராவார்.

## 5 ஆம் தர புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்தோர்
## புத்தளம் உழுக்காப்பள்ளம் முஸ்லிம் மஹா வித்தியாலயம்



எப்.எப். ஹம்னா (170)



எம்.இஸட். அப்றா (166)



எம்.எஸ். உமைர் அஹமட் (165)



எம்.ஆர்.எப். ஆதிலா (164)



ஏ. நிஹ்லா பானு (163)



ஏ.டப்ளியு. அஹமட் அப்ரி (158)



எம். முப்லா (155)



ஏ.என். சன்ஹா (155)



எம்.என்.எப். நஹ்தியா (152)

படமும் தகவலும்: இன்ஹாம் இமாம்



ஐந்தாம் தர புலமைப்பரிசில் பரீட்சையில் 184 புள்ளிகளைப் பெற்று அநுராதபுர மாவட்டத்தில் முதலிடம் பெற்ற அல்பத்தாவ முஸ்லிம் வித்தியாலய மாணவி ஆர்.எப். நிஸ்தானி மற்றும் வகுப்பாசிரியர் மௌலவி ஐ. இஸ்ஸதீன், கோட்டக் கல்விப் பணிப்பாளர் எம்.ஏ. ஜயரத்ன, வலய கல்விப் பிரதிப் பணிப்பாளர் எஸ்.எச். அப்துல்லாஹ், வித்தியாலய அதிபர் ஏ.எம்.எம். கியாஸ்தீன் ஆகியோரை படத்தில் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆலிப் அலி (இஸ்லாஹி)
aalifali@gmail.com /www.aliaalif.tk

# பூமியும் இயற்கையின் சமநிலைத் தன்மையும்

நாம் வாழும் பூமி சமநிலைத் தன்மையுடனேயே படைக்கப்பட்டுள்ளது. பூமியைத் தவிர மற்றைய கோள்களில் உயிர்வாழ முடியாமைக்கு இந்த சமநிலைத்தன்மை இன்மையும் ஒரு காரணமாகும். ஆனால், பூமி மற்றைய கிரகங்களிலிருந்து வேறுபட்ட அமைப்பில் சிறந்த சமநிலைத் தன்மையைப் பெற்றிருக்கின்றது. தாவரங்கள், விலங்குகள் மற்றும் மனிதன் உட்பட அனைத்து ஜீவராசிகளும் ஒரு குழுவாக இயங்குகின்றன. இதனை இயற்கையின் சமநிலை (Naturel Balance) என்று கூறுவர்.


உண்மையில் இதை இயற்கையின் சமநிலை என்று கூறியபோதிலும் இயற்கை எப்படி இப்படியானதொரு சமநிலையைக் கடைபிடிக்கிறது? எப்படி இந்த சமநிலையைத் தீர்மானிக்கிறது? குறையில்லாத ஏற்பாடுகள் எப்படி ஏற்பட்டன? போன்ற கேள்விகள்தான் இறைவன் என்ற ஒற்றை நிலையை (வஹ்தானிய்யத் கோட்பாட்டை) எடுத்துவைக்கின்றது.

இந்த சமநிலையைத் தீர்மானிப்பதில் குறிப்பிட்ட உயிரினங்கள் மட்டுமல்லாமல், அதற்குக் காரணமாக உயிரற்ற பொருள்கள், சூழ்நிலைகள், காலநிலை மாற்றங்கள், இயற்கை அழிவுகள் கூட முக்கியமான காரணிகளாக அமைந்துவிடுகின்றன.

இப்பூமியில் உயிர் வாழ்வதற்கு ஏற்ற இடமாகவும் உயிரினங்களின் தொடர்புகளை சீர்படுத்துவதற்கும் முக்கியமான அம்சமாக விளங்குவது உணவுச் சங்கிலியேயாகும் (Food Chain). இந்த உணவுச் சங்கிலி அமைப்பை பார்க்கும்போது அது ஓர் அதிசயமிக்க, மனித அறிவை மிஞ்சிய செயலாகவே காணப்படுகிறது. கண்ணுக்குத் தெரியாத உயிரினங்கள் முதல் பெரிய உயிரினம் வரை ஓர் ஏற்பாட்டுடன் செயற்படுகின்றது. சிறு பூச்சிகளை தவளை இனம் உண்கிறது, தவளைகளை உண்ணும் பாம்பை கழுகு உட்கொள்கின்றது இவ்வாறு அதிக பட்சம் ஐந்து அல்லது ஆறு சுழற்சிகளை உணவுச்சங்கிலி மேற்கொள்கின்றது. இது குறிப்பிட்ட வகையான விலங்குகளின் உணவுச்சங்கிலி முறை. இதேபோன்று பல உணவுச்சங்கிலி அமைப்புமுறைகள் எந்த வித சலனமும் இல்லாமல் அழகாக நடந்து கொண்டிருக்கின்றன.

இதேபோன்று கடலில் ஆயிரத்திற்கும் மேற்பட்ட நுண்ணுயிரிகளை உட்கொண்டு சிறு உயிரிகள் வாழ்கின்றன அந்த சிறு உயிரிகளை உட்கொண்டு பெரிய மீன்கள் வாழ, அவைகளை உட்கொண்டு திமிங்கிலம் போன்ற மிகப் பெரிய உயிரினங்கள் வாழ்க்கையை நடத்துகின்றன. இந்த உணவுச் சங்கிலிகள் மூலம் இயற்கை அதன் தன்மையைத் தக்கவைத்து கொள்வதுடன் ஒவ்வோர் உயிரினமும் மற்றொரு உயிரினத்தை சார்ந்தே வாழ்க்கை நடத்த முடியும் என்பதை எடுத்துரைக்கிறது.

ஒரு தடவை வனவிலங்கு ஆராய்ச்சியாளர்கள் ஒரு காட்டில் மாமிச உண்ணிகள் தாவர உண்ணிகளை அநியாயமாகவே வேட்டையாடிக் கொல்கின்றன என பரிதாபப்பட்டு இரண்டு இனங்களையும் பிரித்து நடுவே ஒரு மதிலைக் கட்டினர். தாவர உண்ணிகள் இனப்பெருக்கம் செய்து பல்கிப் பெருகி இனி உண்பதற்குத் தாவரங்கள் இல்லை எனும் அளவுக்கு அவை தாவரங்களை உண்டு பெருகிவந்தன. சரியான முறையில் மாமிசம் கிடைக்காத மாமிச உண்ணிகள் செத்துமடிய ஆரம்பித்தன. மாமிச உண்ணி தாவர உண்ணியைத் தின்பதும் அவற்றின் இனப்பெருக்கம் கட்டுப்படுத்தப்படுவதும் இயற்கையின் சமநிலை என்பதை அறிந்த ஆராய்ச்சியாளர்கள் மீண்டும் அம்மதிலை உடைத்துவிட்டனர். இவ்வாறு பூமியின் சமநிலை அழகான முறையில் திட்டமிடப்பட்டு மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.



அதேபோன்று, சில உயிரினங்கள் அவற்றின் சூழலுக்கு இயைந்துபோகும் வண்ணம் காணப்படுகின்றன. அத்தோடு பச்சோந்தி போன்ற இன்னும் பல உயிரினங்களால் இடத்திற்கு ஏற்றவிதத்தில் தம் நிறத்தை மாற்றிக்கொள்ளவும் முடியும். இவ் உயிரினங்களை பிற எதிரி விலங்குகளுக்கு எளிதில் கண்டுகொள்ள முடியாதளவு அவை சுற்றாடலுடன் இணைந்து காணப்படுகின்றன. இது அவற்றுக்கும் அவற்றின் இனத்திற்கும் பாதுகாப்பை வழங்குகின்றது. அத்தோடு, தமக்கான இரையை இலகுவாகப் பற்றும் வாய்ப்பையும் வழங்குகின்றது.

அதுபோன்று சில உயிரினங்கள் குறுகியகால ஆயுளைக் கொண்டிருக்கும். ஆனால் அவற்றின் இனப்பெருக்கத் தொகை கூடிய அளவிலிருக்கும். சில உயிரினங்களின் ஆயுட்காலம் மிக் நீண்டதாக இருக்கும். ஆனால் அவற்றின் இனப் பெருக்கத் தொகை மிக குறுகிய எண்ணிக்கையில் இருக்கும். இது இயற்கையின் மற்றுமொரு சமநிலைத்தன்மை பேணலாகும்.

உதாரணமாக, ஒரு பெண் நுளம்பு ஓர் இனப்பெருக்க காலத்தில் முன்னூறு முட்டைகளைப் போடும். அதன் வாழ்நாளில், அதாவது இரண்டே வாரத்தில் முன்னூறு முட்டைகளை இட, அதன் மூலம் 360000 நுளம்புகள் உருவாகும். இதேபோன்று பிறக்கக்கூடிய அனைத்து நுளம்புகளும் இன உற்பத்தி செய்து கொண்டிருந்தால் ஆறே மாதத்தில் அந்த நுளம்புகளால் பூமியே மூடப்பட்டுவிடும்.

(தொடரும்...)

# Youtube; வீடியோ உலகம்

அசையும் புகைப் படங்கள் அறிமுகமானபோது உலகம் ஆச்சரியத்திலும் ஆனந்தத்திலும் மூழ்கிப்போனது. புகைப் படங்களைப் பார்த்து ஆச்சரியப்பட்டதில் புதுமை ஏதுமில்லை. நாளுக்கு நாள் அசையும் புகைப்படங்களின் வளர்ச்சி அதிகரித்தது. இன்று இவை முப்பரிமாணப் படங்களாக முன்னேற்றமடைந்துள்ளதுடன் இன்னும் முன்னேற்றகரமாக நகர்ந்து கொண்டிருக்கின்றன.

நேரடி ஒளிபரப்பு அறிமுகமான போது ஓரிடத்தில் நடப்பதை நேரடியாக பார்த்து உலகம் மகிழ்ந்தது. பின்னர் இருவேறு இடங்களில் இருப்பவர்கள் நேரடியாக ஒருவருடன் ஒருவர் முகம் பார்த்துப் பேசியபோது புதுவகையான ஆனந்தத்தை உலகம் உணர்ந்தது.

காலம் வேகமாக நகர, நேரம் ஒதுக்கி அவற்றைப் பார்ப்பது சிரமமானது. எனவே, அவற்றைப் பதிவுசெய்து சந்தர்ப்பம் கிடைக்கும்போது பார்க்கக்கூடியதாக இருந்தால் எவ்வளவு நன்றாக இருக்கும். சரி, எப்போதும் நான் மற்றவர்களின் வீடியோக்களை மட்டும் பார்த்துக் கொண்டிருப்பதா? எனது வீடியோக்களையும் மற்றவர்கள் பார்த்தால் நன்றாக இருக்குமே. ஆனால், அதற்கு என்னிடம் வசதி இல்லையே... என்ற அங்கலாய்ப்புகளையெல்லாம் அள்ளி எறிந்துவிட்டு வந்தது யூடியூப்.

யூடியூப் இற்கு மாதாந்தம் ஒரு பில்லியனுக்கும் அதிகமானவர்கள் வருகை தருகிறார்கள். மாதாந்தம் 06 பில்லியன் மணித்தியாலங்கள் யூடியூபில் வீடியோக்கள் பார்க்கப்படுகின்றன. இது அண்ணளவாக பூமியில் வாழ்கின்ற ஒவ்வொரு மனிதனினதும் ஒரு மணித்தியாலத்திற்கு சமனாகும். ஒவ்வொரு நிமிடமும் 100 மணித்தியால வீடியோக்கள் பதிவேற்றப்படுகின்றன.

இவ்வாறு, உலகளாவிய ரீதியில் பிரபலமான ஒரு வீடியோ தளத்தை பலரும் பல நடவடிக்கைகளுக்காக பயன்படுத்துகின்றனர். ஆனாலும், இது பாதுகாப்பற்ற ஒரு தளமாகவே கருதப்படுகிறது. நலவுகளை விட பொல்லாப்புகளே இதில் அதிகம் என்ற குற்றச்சாட்டும் உள்ளது. பாதுகாப்பான இணையபாவனை என்பது இதில் சவால் நிறைந்ததாகும்.

இது ஒரு திறந்த தளம் என்பதால் யாரும் எதனையும் பதிவேற்றலாம் என்ற வரையறையற்ற நிலை காணப்படுவதால் இதில் பாதுகாப்பான இணையபாவனை என்பது சாத்தியமற்றது. எனினும், யூடியூப் இதற்கான சிறிய வசதியினை வழங்கியுள்ளது. Safe Search எனப்படும் வசதியே அதுவாகும். இதனை Enable செய்து கொள்கின்றபோது ஓரளவு பாதுகாப்பான இணையபாவனை என்பதை சாத்தியமாக்கிக் கொள்ளலாம்.

### யூடியூப் சனல்

யூடியூபில் நீங்கள் உங்களுக்கு விரும்பியவாறு சனல் ஒன்றை உருவாக்கிக்கொள்ள முடியும். அவ்வாறு உருவாக்கிக் கொள்கின்ற போது நீங்கள் விரும்பியவாறு வீடியோவை பதிவேற்றிக் கொள்ளலாம். இதனால் பலரும் உங்கள் வீடியோவைப் பார்ப்பதற்கும் பிறருடன் பகிர்வதற்கும் சந்தர்ப்பம் ஏற்படும்.

### வீடியோ எடிட்டிங்

நீங்கள் பதிவேற்ற விரும்புகின்ற வீடியோவை பல்வேறு முறைகளில் பதிவேற்றலாம். அதேநேரம் வீடியோவை நீங்கள் எடிட் செய்யவும் முடியும். இந்த வீடியோ எடிட்டிங் வசதி மிகவும் சாதாரண நிலையிலேயே உள்ளது.

இதில் முக்கியமான விடயம் நீங்கள் பதிவேற்றிய வீடியோவை எத்தனை பேர் பார்க்கிறார்கள் போன்ற விபரங்களை அறிந்து கொள்ளலாம். அத்துடன் சமூக ஊடகங்களில் உங்கள் வீடியோவைப் பகிர்ந்து கொள்ளலாம். உங்கள் Channel இல் குறித்த வீடியோவை பதிவேற்றலாம்.

### யூடியூபிலிருந்து வீடியோக்களை டவுண்லோட் செய்ய

இதற்கு ஏராளமான மென்பொருட்களும் இணையதளங்களும் உள்ளன. youtube Downloader, real player downloader போன்ற மென்பொருட்களும் www.savevideodownload.com, catchvideo.net போன்ற இணையதளங்களும் இவ்வாறு உங்களுக்கு விரும்பிய வீடியோவை யூடியூபிலிருந்து பதிவிறக்கம் செய்ய பயன்படுகிறது.

### Livestream

யூடியூபினால் வழங்கப்படும் மற்றுமொரு சேவையாக Livestream உள்ளது. அதாவது, ஓரிடத்தில் நடக்கும் நிகழ்வுகளை கணினியில் நேரடியாகப் பார்க்கும் வசதியாக இது காணப்படுகின்றது. எந்தவொரு நிகழ்வையும் யூடியூபினூடாக நேரடியாக பிறர் பார்க்கக்கூடிய வசதியை இது வழங்குகின்றது.

### யூடியூப் TV

யூடியூபில் புதிதாக அறிமுகப்படுத்தப்பட்டிருக்கும் வசதி இதுவாகும். கட்டணம் அறவிடப்படும் தொலைக்காட்சி சேவையாக இது அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இது தொலைக்காட்சி மற்றும் வீடியோ ரசிகர்களை புதிய உலகத்திற்கு அழைத்துச் செல்லும்.

இது தவிர, இன்னும் ஏராளமான விடயங்களும் வசதிகளும் இந்த யூடியூபில் உள்ளடங்கியுள்ளதுடன் உலகில் முன்னணியில் திகழும் வீடியோ தளமாகவும் இது காணப்படுகிறது.

யூடியூபிற்குப் போட்டியாக யாஹூவும் வீடியோ சேவையை வழங்கியுள்ளது. இது தவிர, Vimeo போன்ற வீடியோ தளங்களும் யூடியூபிற்குப் போட்டியாக உள்ளன.

ஜே.எம். அஸீம் (நளீமி)
www.azeemzain.org

சமூக ஊடகங்கள் (Social Media) பற்றி கற்க ஆர்வமாக உள்ளீர்களா?
உங்கள் தொழில் மற்றும் கல்வியை சமூக ஊடகங்கள் மூலம் முன்னேற்ற விரும்புகிறீர்களா?
அப்படியாயின், Just Media Foundation நடத்தும்
ஒருநாள் சமூக ஊடக செயலமர்வில் கலந்து கொள்ளுங்கள்
தொடர்புகளுக்கு: 0777 871758, 071 939 2121

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரூஸோவின் தத்துவக் கருத்துக்களும் தற்காலக் கல்விமுறையும்


கே.எம். றிபாஸ், இறக்காமம்

தலைசிறந்த இயற்கை வாதியாகவும் சிந்தனைப் புரட்சியாளராகவும் ஜீன் ஜாக் ரூஸோ (1712-1778) ஜெனீவாவில் பிறந்தார். மேலைத்தேய தத்துவவாதிகளில் மிக முக்கியமான ஒருவராகக் கருதப்படும் இவர் தனது தத்துவ கருத்துக்களை அவருடைய சமூக ஒப்பந்தம், எமிலி ஆகிய நூற்களினூடாக முன்வைத்தார். ரூஸோவின் இயற்பண்புவாத கல்விக் கோட்பாடுகளின் சிறப்பியல்புகளை பின்வருமாறு தொகுத்து நோக்கலாம்:

பிள்ளைகள் இயற்கையின் போக்கில் வளர அனுமதிக்கப்பட வேண்டும் அவர்கள் இயற்கையோடு இணைந்து இயற்கையின் நியதிகளின்படி வாழ அனுமதிக்கப்பட வேண்டும் என்றார் ரூஸோ. இவர் மனித வாழ்க்கைக்கு பிரதானமானது கல்வியே என்றதோடு வாழ்க்கைக்கு கல்வியன்று வாழ்க்கையே கல்வியாகுமென வலியுறுத்தினார்.

குழந்தைகளுக்கு கல்வி அளிப்பதை விட கல்வி பெறுவதற்கான நிலைக்கு அவர்களை ஆயத்தப்படுத்த வேண்டும். பிள்ளைகளிடம் பிரச்சினைகளைக் கூறுங்கள் அவர்களே அதற்கான தீர்வுகளைக் காணட்டும் என்றார். இதற்காக, ரூஸோ பிரச்சினையை தீர்க்கும்முறை, விளையாட்டு, அவதானிப்பு, ஆராய்ச்சிமுறை போன்ற கற்பித்தல் முறைகளைச் சமர்ப்பித்தார்.

நினைவாற்றலை விட ஆராய்ச்சி செய்வதினூடாக கல்வியைப் பெற முடியும் என்பதை அழுத்திக் கூறியதோடு, இதற்கான சந்தர்ப்பங்கள் பிள்ளைகளுக்கு வழங்கப்பட வேண்டும் என்பதை வலியுறுத்தி மாணவர் மையக் கல்வியின் அவசியத்தை தெளிவுபடுத்தினார். மேலும், கற்பித்தலின்போது கற்றல் சாதனங்களின் பயன்பாட்டின் இன்றியமையாத் தன்மையை வலியுறுத்தியதோடு, பிள்ளைகளின் விருப்பு, வெறுப்பு மற்றும் திறமைக்கு ஏற்றவாறு கல்வி திட்டமிடப்பட வேண்டும் என்றார் ரூஸோ.



ஜீன் ஜாக் ரூஸோ

கற்றலில் புலன்களின் தொழிற்பாட்டை முதன்மைப்படுத்திய ரூஸோவின் தத்துவக் கருத்தில் கல்விச் செயற்பாடுகள் அனைத்தும் உளவியல் மையப்படுத்தப்பட்டுள்ளதை காணமுடிகின்றது. இயற்கையே எனது இருதயத்தினதும் ஆன்மாவினதும் வழிகாட்டி என்று கூறிய ரூஸோ, பிள்ளைகளின் வயது, வளர்ச்சிப் பருவங்களுக்கு ஏற்ப கல்வித்திட்டமொன்றை வகுத்து கற்பிக்கப்பட வேண்டிய துறைகள் பற்றி விளக்கியுள்ளார்.

**குழந்தைப் பருவம்:**

**(பிறப்பு முதல் 2 வயது வரை)**

இப்பருவத்தில் புதிய அனுபவங்களைப் பெற பெற்றோர் சந்தர்ப்பம் வழங்க வேண்டும். பெற்றோரின் மிகையான கட்டுப்பாடு பொருத்தமற்றது. இப்பருவத்தில் பின்பற்றல் பிரதான கற்கை ஊடகம் என்பதால் நற்பழக்கங்களுக்காக புலன்கள் விருத்தி செய்யப்பட வேண்டும்.

**பிள்ளைப் பருவம்**

**(02 தொடக்கம் 12 வயது வரை)**

இப்பருவத்தில் கண், கால், கை போன்ற புலன்களின் நேரடி அனுபவத்தைப் பெற சந்தர்ப்பம் வழங்கப்பட வேண்டும். இதற்கு விளையாட்டும் செயற்பாடும் அதிகம் தேவை.

**முன் கட்டிளமைப் பருவம்**

**(12 தொடக்கம் 15 வயது வரை)**

இது, அறிவு துரிதமாக விருத்தியடையும் பருவமாகையால் புவியியல் வானசாஸ்திரம் போன்றவற்றைக் கற்க சந்தர்ப்பம் அளிக்க வேண்டும். இப்பருவத்தில் கல்வியை வழங்கக் கூடாது. கல்வியைப் பெற சக்தியை வழங்குதல் அதற்காக, தொழிற்பயிற்சி, நூல்களின் ஆராய்ச்சிக்கு சந்தர்ப்பம் வழங்குதல் வேண்டும்.

**கட்டிளமைப் பருவம்**

**(15 தொடக்கம் 19 வயது வரை)**

சமூக உணர்வையும் சமூத் தொடர்பையும் விருத்தி செய்தல் மற்றும் சுய எண்ணக் கருக்களை விருத்தி செய்தல். இவற்றுக்காக வரலாறு, இலக்கியம், சமூகம் விஞ்ஞானம் போன்றன கற்க சந்தர்ப்பம் வழங்கப்பட வேண்டும்.

**வளர்ந்த பருவம்**

**(20 வயதுக்கு மேல்)**

இப்பருவத்தை அடைந்த பின், இலக்கியம் நாடகங்கள் மூலம் கல்வி கற்று சமூக வியலுக்கு பழக்கப்படுவர். உலகை உரியவாறு விளங்கிக்கொள்ள சுற்றுப்பயணத்தில் ஈடுபட வேண்டும். அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபடலாம் என்றார்.

பிள்ளை வேறு, வளந்தோர் வேறு என்று விளக்கிய ரூஸோ இயற்கை சூழல், மனிதர்கள், பொருட்கள் போன்ற மூன்று ஊடகங்களினூடாகவும் பிள்ளைகள் கல்வியைப் பெறுவதாகக் குறிப்பிட்டுள்ளார்.

பிள்ளைகள் அறிவு பெறும் ஊடகங்களின் ஒன்றாக சூழலினைக் கருதுகின்றார் ரூஸோ. எமது ஆரம்பநெறி கற்கையில் இன்று சுற்றாடல் சார்ந்த செயற்பாடு தனியொரு பாடமாக கற்பிக்கப்படுகின்றமை இவருடைய இயற்பண்புவாதக் கருத்துக்களின் செல்வாக்காகும் என்று கூறலாம்.

மாணவர்கள் நேரடி அனுபவங்களைப் பெற வேண்டும் என்பது ரூஸோவின் கல்வித் தத்துவ கருத்தாகும். தற்கால வகுப்பறைகளில் பிள்ளைகள் பொருட்களை தொட்டுணரக்கூடிய வகையில் கற்பித்தல் இடம் பெற வேண்டும் என்பது கல்வித்திட்டத்தில் வலியுறுத்தப்பட்டுள்ளது. இந்நிலை ரூஸோவின் கருத்துடன் இடைவினை கொண்டுள்ளமையைக் காட்டுகின்றது.

(18ஆம் பக்கம் பார்க்க)

# விழிப்புணர்வூட்டும் மக்கள் அரங்கம் செயற்திட்டம்






ஏ. முஹம்மத் பாயிஸ்

ஒவ்வொரு சமூகத்திலும் அடையாளப்படுத்தப்படாத பல்வேறு பிரச்சினைகள் காணப்படுகின்றன. அப்பிரச்சினைகள் சமூகத்தில் பல்வேறு விளைவுகளை ஏற்படுத்திக் கொண்டே இருக்கும். மக்கள் பிரச்சினைகள் தொடர்பில் தெளிவில்லாமலும் அதற்கான தீர்வுகளை பெற்றுக்கொள்ள முடியாமலும் சிரமங்களை எதிர்கொண்டு வருவதைக் கண்டுகொள்ள முடியும்.

மக்கள் ஒரு பிரச்சினையிலிருந்து மீள முடியாமைக்கு அவர்களுக்குள் பல்வேறு விடயங்கள் செல்வாக்குச் செலுத்துகின்றன. போதியளவு கல்வியறிவின்மை, விழிப்புணர்வின்மை, சமூக அக்கறையின்மை, பிரச்சினைகளையும் அதற்கான மூலங்களையும் கண்டறிய முடியாமை போன்ற பல்வேறு விடயங்களால் ஒரு பிரச்சினையிலிருந்து விடுபட முடியாமலிருக்கிறது.

இதற்கு மக்களை வலுவூட்டுவதற்கான வேலைத்திட்டங்கள் பல தொண்டர் அமைப்புகளினால் கிராம மட்டங்களில் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன. இத்திட்டங்கள் மக்களுக்கு வாழ்வாதார உதவிகளை வழங்குவதாகவும் விழிப்புணர்வூட்டுவதாகவும் அறிவுத்திறன் போன்ற விருத்திகளை ஏற்படுத்துவதாகவும் அமைகின்றன.

சமூக மாற்றத்திற்கான திட்டங்கள் அனைத்தும் வெற்றிபெறுவதில்லை. சில திட்டங்கள் தோல்வியிலும் முடிவடைந்து விடுகின்றன. ஒவ்வொரு காலகட்டத்திலும் சமூகப் பிரச்சினைகளுக்கு ஏற்ப தொண்டர் அமைப்புகளின் செயற்பாட்டுத்திட்டங்கள் மாற்றமடைகின்றன.

இதுபோன்ற ஒரு மாற்றுத்திட்டந்தான் மக்கள் அரங்கம் (Forum Theatre) செயற்திட்டமாகும். மக்கள் அரங்கம் என்பது மக்களை அறிவூட்டுவதற்கும் மிக முக்கியமான சமூகப் பிரச்சினைகளை அடையாளங் கண்டு அதற்கான தீர்வை அவர்களாகவே தேடிக்கொள்ள வழிவகுக்கும் ஒரு வினைத்திறனான முறைமையாகும்.

கிழக்கு மாகாணம் யுத்தம் மற்றும் சுனாமி அனர்த்தங்களினால் வெகுவாகப் பாதிக்கப்பட்ட பிரதேசமாகும். இப்பிரதேசத்தில் பல்லினங்களைச் சேர்ந்த மக்கள் வாழ்கின்றனர். இருப்பினும், இங்கு இன ஐக்கியம், மக்களின் அடிப்படைத் தேவைகள் என்று பல விடயங்கள் கவனத்தில் கொள்ளப்பட வேண்டியுள்ளது. இதனை கருத்திற்கொண்டு இலங்கை அபிவிருத்திக்கான ஊடகவியலாளர் மன்றம் (SDJF) மக்கள் அரங்கம் செயற்திட்டத்தை நடைமுறைப்படுத்தியுள்ளது.

இத்திட்டத்தில் அம்பாறை, மட்டக்களப்பு ஆகிய மாவட்டங்கள் திட்டப் பிரதேசங்களாக உள்ளன. இப்பிரதேசத்திலிருந்து தெரிவு செய்யப்பட்ட மூவினங்களையும் சேர்ந்த 24 பங்குபற்றுநர்களைத் தெரிவுசெய்து அவர்களுக்கு மக்கள் அரங்கம் தொடர்பான பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளன. இதன் மூலம் அவர்கள் வாழும் பிரதேசங்களில் அடையாளம் காணப்பட்ட சமூகப் பிரச்சினைகளைத் தெரிவுசெய்து அவர்கள் மூலம் நாடகங்கள் உருவாக்கப்படுகின்றன. இரு மாவட்டங்களிலும் தலா 10 நாடகங்கள் என மொத்தமாக 20 நாடகங்கள் உருவாக்கப்பட்டு மக்கள் அரங்கத்தில் நடித்துக் காட்டப்படவுள்ளன.

இத்திட்டத்திற்கு தெரிவு செய்யப்பட்ட பங்குபற்றுநர்களுக்கு ஆறு நாட்கள் கொண்ட வதிவிடப் பயிற்சிநெறி வழங்கப்பட்டுள்ளன. இப்பயிற்சிநெறி திருகோணமலை சர்வோதயம் நிலையத்தில் இலங்கை ஊடகவியலாளர் அபிவிருத்தி மன்றத்தின் பணிப்பாளரும் வளவாளருமான எம்.சி. றம்சின் மற்றும் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன முஸ்லிம் சேவை நாடகப் பிரிவு தயாரிப்பாளர் ஏ.எல். ஜபீர் மற்றும் வளவாளர் முனீஸ்வரன் ஆகியோர் பயிற்சிகளை வழங்கியுள்ளனர்.

இப்பயிற்சியின் பின்னர் பங்குபற்றுநர்களிடமிருந்து உருவாக்கப்பட்ட நாடகங்களுள் தெரிவு செய்யப்பட்ட 20 நாடகங்கள் மக்கள் அரங்கத்தில் நடித்துக் காட்டப்படவுள்ளன. இந்நாடகங்கள் பொத்துவில், கல்முனை, காத்தான்குடி, சம்மாந்துறை, நிந்தவூர், ஏராவூர், இறக்காமம், மங்களாகம, செம்மன்னோடை போன்ற தெரிவு செய்யப்பட்ட திட்டப் பிரதேசங்களில் நடித்துக் காட்டப்படவுள்ளன. இந்நாடகங்கள் அரங்கேற்றப்படும் மக்கள் அரங்கம் அடுத்த ஆண்டு பெப்ரவரி மாதமளவில் ஆரம்பிக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.


இம்மக்கள் அரங்கம் செயற்திட்டம் பல நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டு நடைமுறைப்படுத்தப்படுகிறது. அதாவது இன, சமய மற்றும் சமூகப் பிரச்சினைகளை கையாள்தல், இனரீதியான வித்தியாசங்களுக்கு ஏற்புடமையளித்தல், பிரச்சினைகளுக்கு அகிம்சைரீதியாக தீர்வளித்தல்,

(18ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

PUBLIC LIBRARY
JAFFNA





# மன்மோகன் சிங்கின் முடிவு:

# யாருக்குத் தோல்வி?

இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் கடைசி நேரத்தில், கொமன்வெல்த் மாநாட்டில் பங்கேற்காமல் ஒதுங்கிக் கொண்டார். தமிழ்நாட்டில் இருந்து பல வாரங்களுக்கு முன்னரே, கடுமையான எதிர்ப்புகள் கிளம்பியிருந்தாலும் இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் எப்படியும் மாநாட்டில் பங்கேற்பார் என்றே இலங்கை அரசாங்கம் எதிர்பார்த்திருந்தது. புதுடெல்லி செய்தி ஊடகங்களும் கூட, தமிழ்நாட்டின் எதிர்ப்பைத் தந்திரமாக சமாளித்துக் கொண்டு, அவர் கொழும்பு செல்வார் என்றே நம்பின. அவ்வாறே செய்திகளையும் வெளியிட்டன.

ஒருகட்டத்தில், இந்திய மத்திய அரசும் காங்கிரஸ் கட்சித் தலைமையும் இந்த விடயத்தில் தமது பொறுப்பைவிட்டு நழுவிக்கொள்ள முயன்றன. குறிப்பாக, காங்கிரஸ் தலைமை ஏற்கனவே மன் மோகன் சிங் கொழும்பு செல்வதற்கு ஒப்புதல் கொடுத்துவிட்டு, பின்னர் அவரே முடிவு செய்வார் என்று நழுவியது. கொழும்பு செல்ல மன்மோகன் சிங் முற்பட்டிருந்தால், அது அவரது தனிப்பட்ட முடிவு என்று காங்கிரஸ் காலை வாரிவிட்டிருக்கவும் தயங்காது. ஆனால், மன்மோகன் சிங் ஏற்கனவே ஒருமுறை ராகுல் காந்தியின் கையால் குட்டுப்பட்டு அவமானப்பட நேர்ந்த அனுபவத்தினால், இந்தமுறை தந்திரமாக நடந்துகொண்டார். முடிவெடுக்கும் அதிகாரத்தை காங்கிரஸ் உயர்மட்டக் குழுவிடம் அவர் விட்டுவிட, கடைசியில் வேறுவழியின்றி தமிழ்நாட்டின் உணர்வுகளுக்கு மதிப்பளித்து நடந்து கொள்வது போன்று காட்டிக்கொண்டு, பிரதமர் மன்மோகன் சிங் மாநாட்டில் கலந்து கொள்ளமாட்டார் என்று முடிவெடுக்கப்பட்டது.

ஒருபக்கத்தில் தமிழ்நாட்டின் உணர்வுகளுக்கு மதிப்பளித்தே பிரதமர் மன்மோகன் சிங் கொழும்பு செல்லவில்லை என்று தமிழ்நாட்டைச் சேர்ந்த மத்திய அமைச்சர்கள் கூறிக்கொண்டிருக்க; அப்படியில்லை, அவர் தேர்தல் பிரசாரங்களில் ஈடுபடுவதற்காகவே மாநாட்டில் கலந்து கொள்ளவில்லை என்று புதுக்காரணத்தை கூறியுள்ளார் வெளிவிவகார அமைச்சர் சல்மான் குர்ஷித்.

தமிழ்நாட்டின் அழுத்தங்கள் காரணமாகவே இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங், கொமன்வெல்த் மாநாட்டில் பங்கேற்கவில்லை என்றபோதிலும் இதனை மாநாட்டுப் புறக்கணிப்பாக அறிவிக்க இந்திய அரசாங்கம் தயாராக இல்லை. இந்தியப் பிரதமர், மாநாட்டைப் புறக்கணிக்க வேண்டும் என்றே தமிழ்நாட்டில் போராட்டங்கள் நடத்தப்பட்டன. அதுமட்டுமன்றி, இந்தியாவே மாநாட்டைப் புறக்கணிக்க வேண்டும் என்றுதான் கோரப்பட்டது. இந்த இரண்டுமே நடக்கவில்லை. இலங்கை அரசாங்கத்தை திருப்திப்படுத்துவதற்காகவே பிரதமர் மன்மோகன் சிங் மாநாட்டைப் புறக்கணிக்கவில்லை என்று அறிவித்தார் இந்திய வெளிவிவகார அமைச்சர் சல்மான் குர்ஷித்.

ஒரு நிகழ்வில் பங்கேற்காமல் விடுவதுவேறு, அதில் பங்கேற்க விரும்பவில்லை என்று கூறி அழைப்பை நிராகரிப்பதுவேறு. ஜனாதிபதி மஹிந்த ராஜபஷவுக்கு மன்மோகன் சிங் அனுப்பிய கடிதத்தில், மாநாட்டுக்கான அழைப்பை நிராகரிப்பதாகவோ, அதைப் புறக்கணிப்பதாகவோ அல்லது அதற்கான காரணத்தையோ விபரிக்கவில்லை. தனியே, மாநாட்டில் தன்னால் பங்கேற்க முடியவில்லை என்று மட்டும் தெரிவித்துள்ளார்.

இதன் மூலம் தமிழ்நாட்டைத் திருப்திப்படுத்துவதை விட, இலங்கையை திருப்திப்படுத்துவதிலேயே புதுடெல்லி குறியாக இருந்துள்ளது என்பது உறுதியாகிறது. அடுத்து, இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் கொமன்வெல்த் மாநாட்டில் பங்கேற்காதது இலங்கைக்கு வருத்தமான விடயமாகவே இருந்தாலும் அவரது இந்த முடிவு இலங்கையை நெருக்கடிகள் பலவற்றிலிருந்து காப்பாற்றியுள்ளது என்பதையும் கவனிக்க வேண்டும். மன்மோகன் சிங் இந்த முடிவை, சில வாரங்களுக்கு முன்னரே எடுத்திருந்தால் மொறிசியஸ், கனடா போன்று பல நாடுகளின் தலைவர்கள் இந்த மாநாட்டைப் புறக்கணிக்கும் முடிவை எடுத்திருப்பார்கள். அதனால்தான், கடைசிவரை புதுடெல்லி தனது முடிவை அறிவிக்காமல் இழுத்தடித்தது. இதன் மூலம் இலங்கைக்கு அதிகளவு நெருக்கடி கொடுக்காமல் காப்பாற்றியுள்ளது.

பிரதமர் மன்மோகன் சிங், மாநாட்டில் பங்கேற்காவிட்டாலும் அவர் மா நாட்டைப் புறக்கணிப்பதாக அறிவிக்க வில்லை. அதற்குப் பதிலாக, முழு அளவிலான இந்தியக் குழுவை வெளி விவகார அமைச்சர் சல்மான் குர்ஷித் தலைமையில் அனுப்பி வைக்கவுள்ளார்.

ஆக, இந்தியா மாநாட்டைப் புறக்கணிக்கவுமில்லை, இதைவைத்து கொழும்புக்கு அழுத்தம் கொடுக்க முனையவுமில்லை. கொமன்வெல்த் மாநாட்டை இலங்கைக்கு எதிராக அழுத்தம் கொடுக்கும் கருவியாக இந்தியா பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என்று எதிர்பார்த்திருந்தவர்களுக்கு இது ஏமாற்றத்தையே அளித்துள்ளது.

கொமன்வெல்த் மாநாட்டை வைத்து, இலங்கையை வளைப்பதற்கான கால அவகாசத்தை இந்தியா எப்போதோ தவற விட்டுவிட்டது. மன்மோகன் சிங் கொழும்பு வந்திருந்தாலும் கூட, இந்தியாவின் எதிர்பார்ப்புக்குரிய 13 ஆவது திருத்தச்சட்டத்தை நடைமுறைப்படுத்துவது உள்ளிட்ட விவகாரங்களில் பெரிதாக எந்த மாற்றத்தையும் ஏற்படுத்தியிருக்க முடியாது. தனக்கு வழங்கப்பட்ட வாக்குறுதிகளை நிறைவேற்ற வேண்டும் என்று, இந்தியா பலமுறை வலியுறுத்தியும் இலங்கை அரசாங்கம் தனது போக்கில் எந்த மாற்றத்தையும் காட்டவில்லை.

இந்நிலையில், இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் கொமன்வெல்த் மாநாட்டில் பங்கேற்றிருந்தாலும் கூட, இந்தியா எதிர்பார்ப்பதைப் போன்று 13 ஆவது திருத்தச்சட்டத்தை நடைமுறைப்படுத்தும் வாக்குறுதியை நிறைவேற்றச் செய்திருக்க முடியாது. எனவே, வாக்குறுதிகளை நிறைவேற்ற அழுத்தம் கொடுப்பதற்காகவே, தமிழர்களின் நலனை உறுதிசெய்து கொள்வதற்காகவே கொமன்வெல்த் மாநாட்டுக்கு இந்தியப் பிரதமர் கொழும்பு சென்றார் என்ற காரணத்தை புதுடெல்லியால் நீண்டநாளைக்கு கூறிக் கொண்டிருக்க முடியாது.

கொமன்வெல்த் மாநாட்டுக்குச் சென்றாலும் தமிழர் பிரச்சினை விடயத்தில் பெரிதாக எதையும் சாதிக்க முடியாது என்பது இந்தியாவுக்கு தெரியும். இந்நிலையில், மன்மோகன் சிங் மாநாட்டில் பங்கேற்காதது இந்தியாவுக்கு மிகவும் வசதியாகிவிட்டது. இனி, காலம் பூராவும் காங்கிரஸ் கட்சி பிரதமரை கொழும்பு செல்ல விட்டிருந்தால் இலங்கை அரசாங்கத்தை வழிக்கு கொண்டு வந்திருக்க முடியும் என்று காரணம் கூறித் தப்பமுனையும்.

பிரதமர் மன்மோகன் சிங்கினால் அழுத்தம் கொடுக்கும் அளவுக்கு வெளிவிவகார அமைச்சர் சல்மான் குர்ஷித்தினால் இலங்கைக்கு அழுத்தம் கொடுக்க முடியாது. அவர், இந்தியாவினது பிரதிநிதியாக வந்தாலும் இலங்கைக்குத் தலைவலியாக இருக்கமாட்டார். எனவே, 13 ஆவது திருத்தச்சட்டம், இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வு என்று எதைப் பற்றியும் கவலைப்படாமல் இலங்கை அரசாங்கத்தினால் நிம்மதியாக மாநாட்டை நடத்த முடியும். இது இலங்கைக்கு சாதகமான விடயம். இந்தியாவுக்கும் கூட இது பாதிப்பை ஏற்படுத்தப் போவதில்லை.

இன்னொரு விடயம், தமிழ்நாட்டின் எதிர்ப்புகள் எழுந்தபோது பிரதமர் மன்மோகன் சிங் யாழ்ப்பாணம் செல்வதான ஒரு திட்டமும் முன்வைக்கப்பட்டது. அந்தத் திட்டம் செயற்படுத்தப்பட்டிருந்தால் இலங்கைக்கு மிகப்பெரிய நெருக்கடிக்கான வாயிலைத் திறந்து விட்டிருக்கும்.

இலங்கைத் தீவில் மஹிந்த ராஜபக்ஷ அரசாங்கத்துக்கும் அப்பால், உலகின் அங்கீகாரத்தைப் பெற்ற இன்னோர் அரசாங்கம் இருப்பதை அது வெளிச்சம் போட்டுக் காட்டியிருக்கும். தமிழர் தரப்பின் இராஜதந்திர காய்நகர்த்தல்களுக்கு அது வலுச்சேர்ப்பதாகவும் அமைந்திருக்கும். அது சிங்கள அரசியல் சக்திகளுக்கு கண்டிப்பாக எரிச்சலையும் அதிர்ச்சியையும் கொடுத்திருக்கும்.

**கே.சஞ்சயன்**

ஆனால், இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் இலங்கை பயணத்தைக் கைவிட்டுள்ளதால் அத்தகைய வாய்ப்பும் நழுவிப் போயுள்ளது. இந்தவகையில், இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் கொழும்பு வராததையிட்டு இலங்கை அரசாங்கம் பெரிதாக கவலைப்படப் போவதில்லை. ஏனென்றால், அவர் வந்திருந்தால்தான் அதிக சிக்கல்களை சந்தித்திருக்க வேண்டியிருக்கும். ஆக, இந்தியப் பிரதமரின் முடிவு ஏமாற்றத்தைக் கொடுத்ததோ இல்லையோ, இலங்கை அரசாங்கத்தை பல விடயங்களில் நிம்மதியை ஏற்படுத்தியிருக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துருக்கிய நீதிமன்றத்தில் ஹிஜாப் அணிவதற்கான தடைநீக்கம்

துருக்கியில் பெண் வழக்கறிஞர்கள் நீதி மன்றங்களில் ஹிஜாப் அணிய முடியாது என்ற தடையை அண்மையில் துருக்கிய உயர்நீதிமன்றம் நீக்கியுள்ளது. பெண் வழக்கறிஞர்கள் ஹிஜாபுடன் தமது புகைப்படத்தை துருக்கிய வழக்கறிஞர் சங்கத்திடம் வழங்கும் பட்சத்தில் ஹிஜாபை அணிந்து நீதிமன்றத்தில் தோன்றமுடியும் என அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

ஹிஜாப் அணியும் உரிமை அரசியலமைப்பின் உயிரோட்டத்தையோ, மதச்சார்பற்ற ஜனநாயக குடியரசினையோ பாதிக்காது என நீதிமன்றம் தெரிவித்துள்ளது.

வழக்கறிஞர் சங்கத்திற்கு பெண் வழக்கறிஞர் ஒருவர் விடுத்த கோரிக்கையின் பின்பே இம்முடிவு பெறப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

முஸ்லிம்கள் பெரும்பான்மையாக வாழும் துருக்கியில் 1980 ஆம் ஆண்டிற்கு பின்னர் பாடசாலைகள், பல்கலைக்கழகங்கள் மற்றும் பொது இடங்களில் பெண்கள் ஹிஜாப் அணிவதற்கான தடை விதிக்கப்பட்டது.

2008 இல் பிரதமர் தைய்யிப் அர்து



கான் கொண்டுவந்த அரசியலமைப்பு சீர்த்திருத்தம் மூலம் பல்கலைக்கழகங்களில் ஹிஜாப் அணிவதற்கான தடை நீக்கப்பட்டது.

2012 இல் இஸ்லாமியப் பாடசாலைகளில் ஹிஜாப் அணிய அனுமதி வழங்கப்பட்டுள்ளதுடன் கடந்த செப்டெம்பரில் பிரதமர் தைய்யிப் அர்துகான் நீதிபதிகள், வழக்கறிஞர்கள், பொலிஸ் உத்தியோகத்தர்கள் மற்றும் பாதுகாப்பு படையினர் தவிர்ந்தோர் நாட்டின் கல்வி நிலையங்களில் ஹிஜாப் அணிய முடியும் என அறிவித்தார்.

துருக்கி உயர்நீதிமன்றம் வழங்கியுள்ள இப்புதிய அனுமதி துருக்கியில் ஹிஜாபிற்கு கிடைக்கும் பெரிய வெற்றியாகக் கருதப்படுகின்றது.

## சர்வதேசம்

தொகுப்பு: அலா அஹமட்

# அரபாத் நஞ்சூட்டி கொலை செய்யப்பட்டுள்ளார்

## அல் ஜெஸீரா ஆவணப்படம்

பலஸ்தீன மக்களின் விடுதலை இயக்க தலைவரான யாசீர் அரபாத் நஞ்சூட்டப்பட்டே கொலை செய்யப்பட்டார் என்ற ஆவணத்தொகுப்பினை அண்மையில் Killi ng Arafath என்ற தலைப்பில் அல்ஜெஸீரா தொலைக்காட்சி சேவை ஒளிப்பரபியுள்ளது.

2004 ஆம் ஆண்டு இஸ்ரேலின் பலஸ்தீன முற்றுகையின்போது நோய்வாய்ப்பட்டிருந்த அரபாத், பிரான்ஸ் மருத்துவமனையில் தனது 75 வது வயதில் மரணமடைந்தார். அவரது மனைவியின் வேண்டுகோளின் பிரகாரம் பிரேத பரிசோதனைக்கு உட்படுத்தப்படாமல் அடக்கம் செய்யப்பட்டார்.

2006 இல் இவர் கொலை செய்யப்பட்டிருக்கலாம் என்ற யூகம் எழுந்தது. இதன்காரணமாக 2010 இல் இவரின் உடற்பாகங்கள் தோண்டியெடுக்கப்பட்டு ரஷ்யா, பிரான்ஸ் மற்றும் சுவிட்சர்லாந்து நிபுணர்களால் தனித்தனியே பிரேத பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன.

இதன் முடிவாக அவர் பொலெனியம்



எனும் விஷத்தின் மூலம் கொலை செய்யப்பட்டார் என சுவிட்ஸர்லாந்து லூசானா பல்கழைக்கழக கதிர்வீச்சு நிபுணர்கள் தெரிவித்துள்ளனர். இது தொடர்பாக அரபாத்தின் மனைவி கூறுகையில்: அவர் விஷம்வைத்து கொல்லப்பட்டமைக்கு அறிவியல்பூர்வமான ஆதாரங்கள் உள்ளன. இஸ்ரேலுடனான சமாதான பேச்சுவார்த்தையை நிறுத்துமாறு பலஸ்தீன தரப்பினரிடம் அப்போது வேண்டுகோள் விடுத்துக்கொண்டிருந்தார்.

இவ்விடயத்தினை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்திடம் எடுத்துச் செல்லவிருப்பதாக பலஸ்தீன அரச அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

# பெண் செய்தி தொடர்பாளரை ஹமாஸ் நியமிப்பு

சர்வதேச ஊடகங்களுடனான தொடர்பாடலுக்காக Isra- al- modallal என்ற பெண் செய்தித் தொடர்பாளரை அண்மையில் ஹமாஸ் அமைப்பு நியமித்துள்ளது.

23 வயதான இவர் 5 வருடங்கள் பிரிட்டனில் வாழ்ந்தவர். ஐக்கிய ராச்சியத்தின் Grange Technology College லும் இஸ்லாமிய பல்கலைக்கழகத்தில் ஊடகத்துறையிலும் கல்வி கற்றுள்ளார். சரளமாக ஆங்கிலம் பேசுமிவர், உள்ளூர் தொலைக்காட்சி நிறுவனம் ஒன்றில் ஆங்கில செய்தி நிருபராக கடமையாற்றியுள்ளார்.

நான் ஹமாஸை சேர்ந்தவளல்ல; பலஸ்தீனை நேசிக்கும் ஒரு செயற்பாட்டாளர் என அவர் தெரிவித்துள்ளார். மேலும் இவர் நாடுகளுடன் ஒரு தனித்துவமான, வித்தி



யாசமான மொழியிலேயே பேச்சுவார்த்தைகளை மேற்கொள்வதன் மூலம் காஸாவின் பிரச்சினையை உலகறியச் செய்யலாம் என அவதானிகள் தெரிவித்துள்ளனர்.

# முர்ஸிக்கு ஆதரவளித்தார் என்ற குற்றச்சாட்டில் உதைப்பந்தாட்ட வீரர் இடைநீக்கம்

எகிப்தில் பதவி கவிழ்க்கப்பட்ட முன்னாள் ஜனாதிபதி கலாநிதி முர்ஸிக்கு ஆதரவு தெரிவித்து தனது நான்கு விரல்களையும் காட்டினார் என்று குற்றம் சாட்டப்பட்டு எகிப்தின் அல்அஹ்லி கழக உதைப்பந்தாட்ட வீரர் அஹமட் அப்துல் சாஹர் கழகத்திலிருந்து இடை நீக்கப்பட்டுள்ளார்.

28 வயதான இவர் அண்மையில் கெய்ரோவில் நடைபெற்ற ஆபிரிக்க சம்பியன்ஸ் லீக் உதைப்பந்தாட்டப் போட்டியில் தென்னாபிரிக்காவின் Orlando Pirates அணிக்கெதிராக கோள் ஒன்றைப் போட்ட பின் 'றாபியா' எனப்படும் தனது 4 விரல்களையும் காட்டி முர்ஸிக்கு ஆதரவு தெரிவித்தார் என்ற குற்றச்சாட்டின் காரணமாகவே இவ்வாறு இடை நிறுத்தப்பட்டுள்ளார். இப்போட்டியில் அல்அஹ்லி கழகம் 3:1 என்ற அடிப் படையில் வெற்றிபெற்றது.

இத்தடை காரணமாக எதிர்வரும்



மாதம் மொறோகோவில் நடைபெறவுள்ள Fifa Club World Cup இலிருந்தும் அவர் நிறுத்தப்பட வாய்ப்புள்ளதாகத் தெரியவருகிறது.

நான் அரசியல் காரணத்திற்காக அவ்வாறு காட்டவில்லை. மரணித்த எகிப்திய மக்களை ஞாபகமூட்டவே அவ்வாறு காட்டினேன் என அப்துல் ஸாஹர் தெரிவித்தார். இருப்பினும், இவருக்கெதிராக கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என விளையாட்டு அமைச்சர் தெரிவித்துள்ளார்.

# முடிவின்றிக் கலைந்த ஈரானின் அணுசக்திப் பேச்சுவார்த்தை

அண்மையில் ஈரானின் அணுசக்தி தொடர்பாக சுவிட்சர்லாந்தின் ஜெனிவாவில் நடைபெற்ற பேச்சுவார்த்தை எவ்வித மான முடிவுகளும் எட்டப்படாமல் முடிவடைந்துள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஈரான் அணு ஆயுதங்களை உற்பத்தி செய்து வருவதாக அமெரிக்கா, இஸ்ரேல் உட்பட மேற்கு நாடுகள் குற்றஞ்சாட்டி ஈரானுக்கு பொருளாதார தடைகளை விதித்திருந்தன. அத்தடையை நீக்கும் பொருட்டு ஈரானிடமிருந்து அணுவாயுதம் தொடர்பான சிறந்த விளக்கம் கிடைக்கப்படுமாயின் அத்தடைகள் நீக்கப்படும் என்ற அடிப்படையில் அமெரிக்கா, ரஷ்யா, இங்கிலாந்து, சீனா, பிரான்ஸ் மற்றும் ஜேர்மன் நாட்டுப் பிரதிநிதிகளுக்கும் ஈரானின் பிரதிநிதிகளுக்குமிடையே பேச்சுவார்த்தை இடம்பெற்றது.

அணுவாயுதம் தொடர்பாக இருதரப்புக்குமிடையில் உடன்பாடு எட்டப்படாததால் பேச்சவார்த்தை தோல்வியடைந்துள்ளதாக தெரியவருகிறது. ஈரான் தனது கையிலுள்ள யுரேனியத்தை குறைப்பதற்கும் அணு பரிசோதனையை நிறுத்துவதற்கும் ஒப்புக்கொள்ளவில்லை என ஈரான் மீது குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

இப்பேச்சுவார்த்தையின் பின்னர் ஈரான் மீது புதிய பொருளாதாரத் தடைகளை விதிக்குமாறு அமெரிக்க அரசுக்கு பாராளுமன்ற உறுப்பினர்கள் அழுத்தம் தெரிவித்து வருகின்றனர்.

# பிலிபைன்ஸை தாக்கிய ஹையான் சூறாவளி: ஆயிரக்கணக்கானோர் உயிரிழப்பு



ஹையான், புயல்களில் 5 வது பிரிவைச் சேர்ந்த மிக கொடூரமான புயல் என அமெரிக்க நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.

மணிக்கு 300 கி.மீ. க்கும் அதிகமான வேகத்தில் இப்புயல் தாக்கியதுடன் பலத்த மழை மற்றும் வெள்ளப்பெருக்கு போன்றவற்றால் மக்கள் கடும் சிரமங்களை எதிர்நோக்கினர். வீடுகள் இடிந்ததனாலும் மின்சாரம் மற்றும் தொடர்பாடல்கள் துண்டிக்கப்பட்டமையாலும் நிலைமை மேலும் மோசமடைந்தது.

அத்தியவசியத் தேவைகளான உணவு, உடை, மருத்துவம் மற்றும் குடிநீர் போன்றவற்றிற்கு தட்டுப் பாடுகள் நிலவிவருகிறன.

உணவுத் தட்டுப்பாடு காரணமாக கடைகள் பல சூறையாடப்பட்டுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இப்புயலுடன் உயரமான அலைகள் கடற்கரையிலிருந்து 1 கி.மீ. தொலைவிலுள்ள அனைத்து ஊர்களையும் அடித்துச் சென்றுள்ளன. மத்திய பிலிபைன்ஸ் பகுதியிலுள்ள லெதா மாகாணத்தில் 80 சதவீதம் சேதமடைந்துள்ளன.

பிலிப்பைன்ஸில் அண்மையில் தாக்கிய ஹையான் சூறாவளியில் குறைந்த பட்சம் 12 ஆயிரத்துக்கும் அதிகமானோர் இறந்திருப்பதாகவும் பலர் காணாமல் போயுள்ளதாகவும் இவ் அனர்தத்தால் பிலிபைன்ஸின் 41 மாகாணத்திலுள்ள 2 மில்லியனிற்கும் அதிகமானோர் பாதிக்கப்பட்டிருப்பதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

தற்போது மீட்பு பணிகள் விரைவு படுத்தப்பட்டிருப்பதுடன் இறந்த உடல்களால் தொற்று நோய் பரவும் அபாயமும் ஏற்பட்டுள்ளது. பல்வேறு நாடுகளைச் சேர்ந்த மனிதாபினமான பணியாளர்கள் மீட்புப் பணிகளில் ஈடுபட்டுள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்னை விசாரிக்க நீ யார்?

றது என அறிந்துகொள்ள முடியாதளவுக்கு தனிமைப்படுத்தப்பட்டிருந்த அவரின் வாக்குமூலம் எப்படி இருக்கப்போகிறது என்ற ஏகப்பட்ட எதிர்ப்பார்ப்பு.

மறுபுறத்தில் இராணுவப் புரட்சியின் சூத்திரதாரி ஜெனரல் அப்துல் பத்தாஹ் ஸீஸியை ஜனாதிபதியாக்குக! ஜனாதிபதியாக்குக! என இராணுவத்தின் துப்பாக்கிரவைகளுக்குப் பயந்து எகிப்திய லிபரல்களும் நாஸரிஸ்டுக்களும் கிறிஸ்தவர்களும் வீதியாய் கத்தித்திரிந்து கொண்டிருக்கின்ற தருணமது. போதாக்குறைக்கு சஊதி மன்னர் அடுத்த ஜனாதிபதி ஸீஸியை தான் வாழ்த்துவதாக வாழ்த்துச் செய்தி அனுப்ப தயாராக இருக்கும் நேரமது.

ஜனாதிபதி முர்ஸியுடன் சென்ற வருடம் முழுவதும் பணியாற்றிய சகபாடிகள் அனை

## நீதிமன்றத்தில் முர்ஸி


நேரம் சரியாக காலை பத்து மணி. முர்ஸியுடன் விசாரிக்கப்பட இருந்த ஏனைய 12 நபர்களும் குற்றவாளிக்குரிய வெள்ளையாடையுடன் குற்றவாளிக் கூண்டில் முர்ஸிக்காக காத்திருந்தனர். நீதிமன்றக் கட்டிடம் 26000 இராணுவ துருப்புக்களாலும் இஸ்லாமியவாதிகளுக்கு எதிராக சாட்சி சொல்வதற்கு வருகை தந்திருந்த வழக்கறிஞர்களாலும் நிரம்பி வழிந்து கொண்டிருந்தது. கடுமையாக இராணுவ பாதுகாப்புடன் முர்ஸி நீதிமன்றக் கட்டிடத் தொகுதிக்குள் பிரவேசித்தார். அவர் வெள்ளை நிற வாகனமொன்றில் வந்திறங்கிய பாணி முழு உலகையுமே ஒரு கணம் அதிர வைத்தது. அக்காட்சியைப் படம் பிடித்த அல்அராபியா பத்திரிகையின் படப்

செய்யுங்கள்! உங்களது நீதிமன்றம் தெளிவாக இராணுவப் புரட்சிக்கு ஆதரவாக நிற்கிறது. நான் எகிப்தின் நீதித்துறை பக்கசார்பின்றி இருக்க வேண்டும் என விருப்புபவன். நீதித்துறை அதிகாரிகளை மதிப்பவன். ஆனால், இப்படி பக்கசார்பாக நடக்கும் உங்களது நீதிமன்றம் போலியானது என்றார். நீதிபதி அஹ்மத் ஸப்ரிக்கு வழக்கை பிற்போடுவதனைத் தவிர வேறு எதனையும் செய்ய முடியவில்லை. மீண்டும் வழக்கை ஜனவரி 8 ஆம் திகதிக்கு பிற்போடுவதாக அஹ்மத் ஸப்ரி உத்தரவிட்டார். நீதிமன்றத்திலிருந்து திரும்பும்போது ஜனாதிபதி முர்ஸி தன்னைச் சூழ இருந்த இராணுவ அதிகாரிகளை நோக்கி, நீங்கள் அநீதிக்கு சார்பாக நிற்கிறீர்கள். எகிப்திய மக்கள் உங்களை வெறுக்க முன்னர் திருந்திக் கொள்ளுங்கள் என உரக்கக் கூறினார்.

# நீதிபதியை குற்றவாளி விசாரித்த முதல் சந்தர்ப்பம்

சகி பவுஸ் (நளீமி)

**கடந்த** நவம்பர் 6 ஆம் திகதி எகிப்திய ஜனாதிபதி கலாநிதி முஹம்மத் முர்ஸியின் நீதிமன்ற விசாரணை நாள். அவர் மீது இராணுவ அரசாங்கம் கொலைக் குற்றச்சாட்டை சுமத்தி வழக்கை பதிவு செய்திருந்தது. அதனால், முழு உலகத்தின் மீடியாக்களும் கைரோவில் அமைந்துள்ள நீதிமன்றக் கட்டிடத் தொகுதியை நோக்கி விரைந்தன. மூன்று மாதங்கள் உலகத்தில் யாருமே அறியாத வண்ணம் இராணுவத்தால் மறைத்து வைக்கப்பட்டிருந்த முஹம்மத் முர்ஸி நீதிமன்றத்தில் என்ன சொல்லப் போகிறார்? தற்போது அவர் குற்றவாளி. 3 மாதங்கள் உலகில் என்ன நடக்கின்வரும் கடும் சிறையில் அடைக்கப்பட்டிருக்கின்றனர். மூன்று மாதங்களின் பின் உலகத்தை காணும் ஜனாதிபதி முர்ஸி எப்படியிருப்பார்? அதுவும் உலகில் அவர் காணும் முதல் காட்சி அற்ப அளவும் இஸ்லாமியவாதிகள் மீது கரிசனை காட்டாத இராணுவ நீதிமன்றம்! அன்றைய விசாரணையை தலைமை தாங்கும் நீதிபதி அஹ்மத் ஸப்ரி முர்ஸியை விசாரிப்பதற்கு ஒரு கிழமைக்கு முன்னர் தான் முபாரக்கின் அரசில் பிரதமராக இருந்த அஹ்மத் சபீக் என்ற கொள்ளைக் காரனை குற்றமற்றவர் என தீர்ப்புவேறு அளித்திருந்தார்.



பிடிப்பாளர்: குற்றவாளிக் கூண்டிற்கு செல்பவர் போலன்றி, ஒரு நாட்டு ஜனாதிபதி இன்னொரு நாட்டின் ஜனாதிபதியை சந்திப்பதற்காக எவ்வாறு ஜனாதிபதி மாளிகைக்கு முன்னால் வாகனத்திலிருந்து இறங்கி தைரியமாகவும் உறுதியுடனும் செல்வாரோ, அதுபோன்று முர்ஸி இராணுவ வாகனத்திலிருந்து இறங்கி நீதிமன்றக் கட்டிடத் தொகுதிக்குள் பிரவேசித்தார். அவர் குற்றவாளிக் கூண்டிற்கு ஏறிய பாணியை பார்க்கும்போது மாநாடொன்றில் உரையாற்றுவதற்காக ஏறுகிறாரோ என எண்ணத் தோன்றியது என்கிறார். இத்தனைக்கும் அப்படப்பிடிப்பாளர் முர்ஸிக்கு எதிரான அணியைச் சோந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

ஏனைய குற்றவாளிகளைப் போன்று வெள்ளையாடை அணிந்து வருமாறு முன்னாள் ஜனாதிபதி முர்ஸியை ஏற்கனவே நீதிமன்ற விசாரணைக் குழு வேண்டிக்கொண்டது. அவர் அதனை மறுத்துவிட்டார். மாற்றமாக தனது கோட்டின் பொத்தான்களை சரிசெய்து கொண்டே தனது ஆதரவாளர்களையும் தன்னோடு விசாரணைக்காக நிறுத்தப்பட்டிருந்தவர்களையும் வாழ்த்தியவாறு நீதிபதி அஹ்மத் சப்ரியின் கேள்விகளுக்கு பதில் சொல்ல முர்ஸி தயாரானார். நீதிபதி அஹ்மத் ஸப்ரி குற்றவாளிக் கூண்டில் நிறுத்தப்பட்டிருக்கும் ஒவ்வொரு நபரினதும் பெயரையும் சொல்லிக் கொண்டு வந்து, 12 வதாக முஹம்மத் முர்ஸி என்றதும் கலாநிதி முர்ஸி நீதிபதியை நோக்கி, நான் எகிப்தின் ஜனாதிபதி முஹம்மத் முர்ஸி என உரத்துச் சொன்னார். அதற்கு நீதிபதி சப்ரி, அது முடியாது. அது ஆகாது என பதிலளித்தார். அதற்குப் பதிலளித்த கலாநிதி முஹம்மத் முர்ஸி, நான் எகிப்தின் சட்டபூர்வ ஜனாதிபதி முர்ஸி. நீரோ போலியானவர். உமது தீர்ப்பும் போலியானது. இந்த விசாரணை சபையே அப்பட்டமானது. என்னை விசாரிக்க நீர் யார்? எனச் சொன்னபோது, அவ்வார்த்தைகளின் எதிரொலியால் நீதிமன்றமே அதிர்ந்தது. வந்திருந்த ஊடகவியலாளர்கள் நடுங்கி நின்றனர். நிதிபதி அஹ்மத் சப்ரி வாயடைத்துப் போனார்.

பின்னர், நீதிபதி அஹ்மத் ஸப்ரி முர்ஸியை நோக்கி, உங்களுக்கு வழக்கறிஞர்கள் வேண்டுமா? என கேட்டபோது, எனக்கு உங்களோடு பேசுவதற்கு சில அம்சங்கள் இருக்கின்றன. நீதிபதி அஹ்மத் ஸப்ரியை நோக்கி, நீதிபதியாரே, நீங்கள் என்னை விசாரணை செய்வதற்கு, இங்கொன்றும் நான் விருப்பத்தில் வரவில்லை. நான் எகிப்தின் ஜனாதிபதி. நீங்கள் என்னை விசாரணை செய்ய வேண்டுமானால் அதற்கு யாப்பில் ஒரு முறை இருக்கிறது. உங்களுக்கு தெரியாதா? எகிப்தில் நடந்து கொண்டிருப்பது தெளிவான இராணுவப் புரட்சி. அதனை அரங்கேற்றியவர்களை முதலில் விசாரணை

இவ்வாறு வெறும் சில நிமிடங்களே நடந்த கலாநிதி முர்ஸியின் விசாரணை இராணுவத்திற்கு பேரிடியாக விழுந்தது. நீதிமன்றக் காட்சிகளைப் பற்றி இங்கிலாந்தின் 'த இன்டிபென்டன்' பத்திரிகை, 'வரலாற்றில் நீதிபதியை குற்றவாளி விசாரித்த முதல் சந்தர்ப்பம்' என எழுதியிருந்தது. இன்னொரு பத்திரிகையான டெய்லி டெலிகிராப், 'வழமையாக நீதிபதிதான் நீதிமன்றத்தை இயக்குவார். ஆனால், குற்றவாளி நீதிமன்றத்தை இயக்கி நீதிபதியையே அதிரவைத்த முதல் அனுபவம்' என பிரசுரித்திருந்தது.

## ஏன் முர்ஸியை இராணுவம் விசாரித்தது?


ஜனாதிபதி முர்ஸியை விசாரணை செய்வதன் மூலம் இராணுவ அரசு பல அம்சங்களை அடைந்து கொள்வதற்கு முற்பட்டது. அவற்றில் முதலாவது அம்சம், முர்ஸியை விசாரணை செய்வதினூடாக, நடைபெற்ற இராணுவப் புரட்சி ஒரு மக்கள் புரட்சியே என இராணுவம் சாயம்பூசப் பார்த்தது. அதாவது, முர்ஸியை விசாரணைக்கு கொண்டு வந்தால், அவர் குற்றவாளியாக காண்பிக்கப்படுவார். இராணுவத்தினரின் குற்றச்சாட்டுக்களை கட்டுப்படுத்த முடியாமல் நீதிமன்றத்தில் தனிமைப்படுத்தப்படுவார். எனவே, இராணுவம் முர்ஸியை எவ்வித நியாயமுமின்றி தடுத்து வைத்திருக்கிறது என்ற சர்வதேசத்தின் அழுத்தத்தை குறைக்க முடியும்.

இரண்டாவது அம்சம், இராணுவப் புரட்சியை எதிர்த்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடும் மக்களின் வேகத்தை குறைக்க முடியும் என்ற இராணுவத்தின் நம்பிக்கையாகும். அதாவது, முர்ஸியே நீதிமன்றத்தில் விசாரிக்கப்படுகிறார். எனவே கலாநிதி முர்ஸி மீண்டும் ஜனாதிபதியாக வரவேண்டும் என்ற ஆர்ப்பாட்டக்காரர்கள் எதிர்பார்ப்பு வெறும் பகற்கனவு என நம்பச் செய்வது. இதனால், அவர்கள் தங்களது ஆர்ப்பாட்டத்தை குறைத்துக்கொள்வர்.

மூன்றாவதாக, இராணுவப் புரட்சியின் பின்னரான எகிப்து பயங்கர பொருளாதாரப் பிரச்சினையை எதிர்கொள்கிறது. நாட்டின் வறுமை, வேலையின்மை, பணவீக்கம், உல்லாசப் பயணத்துறை, வெளிநாட்டு வர்த்தகம் போன்றன படுமோசமான நிலையை நோக்கி நகர்ந்து கொண்டிருக்கின்றன. எங்களால் எகிப்தை மீட்க முடியாது என்ற விடயம் அப்துல் பத்தாஹ் ஸீஸிக்கு நன்றாகத் தெரியும். எனவே, நாட்டு மக்களை உண்மையான பிரச்சினைகளை விட்டும் திசை திருப்புவதற்காகவே முர்ஸின் விசாரணை இடம்பெற்றது.

(18ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# பரிணாம வளர்ச்சிக் கோட்பாடு:

> இவ்வார சிந்தனைக்கு
>
> எங்கு கருத்துக்கள் மோதுகின்றனவோ அங்கு சுதந்திரம் ஒலிக்கிறது
>
> -அட்லெய் ஸ்டீவென்ஸன்-


# ஆராய்ச்சியாளர்களின் கருத்துக்களை டார்வின் திருடினாரா?

பரிணாம வளர்ச்சி குறித்து தனது கோட்பாட்டை உருவாக்குவதற்கு ஆராய்ச்சியாளரொருவரின் கருத்துக்களை சார்ள்ஸ் டார்வின் களவாடியிருப்பதாக வரலாற்றாசிரியர்கள் குற்றஞ்சாட்டுகின்றனர். சக ஆராய்ச்சியாளரான 'அல்பிரட் ருஸல் வலெஸின்' உயிரின ஆராய்ச்சி கோட்பாடுகளைக் கொண்ட கடிதத்திலுள்ள விடயங்கள், 1855 ஜூலையில் தனது பரிணாம வளர்ச்சிக் கோட்பாட்டை உலகுக்கு அறிவிப்பதற்கு டார்வினுக்கு உதவியிருக்கலாமென ஆராய்ச்சியாளர்கள் கருதுகின்றனர்.

ஒரு கட்டுரையாகத் தனது கருத்துக்களை எழுதியிருந்த வலெஸ், அதனை பூகோளவியல் ஆராய்ச்சியாளர் சார்ள்ஸ் லைல்லிடம் கொடுக்குமாறு 1858இல் டார்வினுக்கு அனுப்பியிருந்ததாகவும் ஆனால், தனது கருத்துக்களில் திருத்தங்களை மேற்கொள்வதற்காக இரு கிழமைகள் இக்கடிதத்தை தன் வசம் வைத்திருந்த டார்வின், இக்கடிதம் கிடைத்த திகதி தொடர்பில் பொய் கூறியதாகவும் ஆராய்ச்சியாளர்கள் தெரிவிக்கின்றனர். அறிவியலின் வரலாற்றில் மிகப் பெரிய புரட்சிகளில் ஒன்றாகக் கருதப்படும் டார்வினின் பரிணாம வளர்ச்சிக் கோட்பாட்டின் முதலாவது வெளியீடு, 1858 இல் வெளிவர ஆரம்பித்ததையடுத்து வலெஸின் கட்டுரை பிரசுரமானதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

1858 மார்ச்சில் வலெஸினால் மற்றொரு நண்பருக்கு எழுதப்பட்ட கடிதமொன்று ஆராய்ச்சயாளரொருவரினால் கண்டுபடிக்கப்பட்டதைத் தொடர்ந்து, 1972 இல் இது குறித்த சர்ச்சைகள் உருவாயின. சிங்கப்பூர் மற்றும் லண்டனின் அஞ்சல் குறியீடுகளைக் கொண்டுள்ள இக்கடிதத்தின் குறியீடுகள் ஜூன் 03, 1858 இல் லண்டனை வந்தடைந்துள்ளதை வெளிப்படுத்தியுள்ளது. இது வலெஸின் கட்டுரை தனக்கு கிடைத்ததாக டார்வின் கூறிய திகதிக்கு இரு கிழமைகள் முந்தியதாகும்.

இந்நிலையில் வலெஸினால் தனது இரு நண்பர்களுக்கும் எழுதப்பட்ட இரு கடிதங்களும் ஒரே மார்க்கத்தினூடாக லண்டனை வந்தடைந்த நிலையில், மற்றைய கடிதம் கிடைக்கப்பெற்றும் இரு கிழமைகள் வரையில் டார்வினுக்கு இக்கடிதம் கிடைக்காமல் போனது எப்படி? என்பதிலேயே விஞ்ஞானிகள் குழம்பிப் போயுள்ளனர். இதுவே, இக்கடிதத்திலிருந்த கருத்துக்களை டார்வின் திருடியிருக்கலாமென்ற குற்றச்சாட்டு, டார்வினின் புகழுக்கு களங்கத்தை ஏற்படுத்தும் வகையிலான பலவித ஊகங்களுக்கும் வழிவகுத்துள்ளது.



இக்கடிதத்தை வலெஸ் எப்போது அனுப்பினார் என்பதை நிரூபிக்கும் வகையிலான சமகால ஆதாரங்கள் எதுவும் இல்லாததால் எதனையும் உறுதிபடக் கூற முடியாதென்பது விஞ்ஞானிகளின் வாதமாகும். இக்கடிதம் எப்போது டார்வினின் கரங்களை வந்தடைந்தது? என்பதற்கான தீவிர ஆராய்ச்சிகளில் இறங்கியுள்ள ஆராய்ச்சியாளர்கள் இக்கடிதம் பயணித்த கப்பலின் பாதைகளை ஆராயும் நடவடிக்கைகளில் இறங்கியுள்ளனர்.

இந்தோனேஷியாவில் வாழ்ந்துவந்த தருணத்தில் உயிரினக் கோட்பாடு குறித்த கண்டுபிடிப்பொன்றுக்கு வலெஸ் உரிமை கோரியிருந்ததாகவும் வரலாற்றாசிரியர்கள் தெரிவிக்கின்றனர்.

இந்நிலையில், 154 வருடங்கள் பழமை வாய்ந்த இக்கடிதம் டார்வினின் கரங்களை வந்தடைந்த சரியான திகதியைக் கண்டுபிடிக்கும் முயற்சிகளில் டார்வினின் மீது திருட்டுக் குற்றம் சுமத்துபவர்களும் அதற்கு எதிரானவர்களும் தீவிரமாக இறங்கியுள்ளனர்.

எஸ்.எல். உஸ்மான் அகீல், இறக்காமம்.

# விஞ்ஞான வளர்ச்சியில் லத்தீன் மொழி

இன்று விஞ்ஞானம் மற்றும் தொழிநுட்பம் போன்றவற்றைக் கற்பதனால் ஆங்கிலம் மிகவும் அவசியமாகவுள்ளது. காரணம் பெரும்பாலான விஞ்ஞான வழிகாட்டல்கள் ஆங்கில மொழியில் அமைந்துள்ளன என்பதனாலாகும். ஆனால், ஒரு காலத்தில் விஞ்ஞான கண்டுபிடிப்புகளின் மூல மொழியாக லத்தீன்மொழியே காணப்பட்டது என்றால் மிகையாகாது.

ஆரம்பகாலத்தில் லத்தீன் மொழிதான் தத்துவ ஆராய்ச்சியாளர்கள் அதிகமாக உபயோகித்த மொழி. இன்றைய ஆங்கிலம் 1617 ஆம் நூற்றாண்டில் மிகவும் வளர்ந்திருந்தாலும் அவ்வளவாக உபயோகப்படுத்தப்படவில்லை. உதாரணத்திற்கு, நியூட்டன் ஓர் ஆங்கிலேயர். அன்றைய துவக்க நிலை விஞ்ஞானத்தின்மேல் கொண்ட ஆர்வத்தால், லத்தீன் மொழியை முழுமையாக கற்றுக்கொண்டார். அவருடைய பல ஆராய்ச்சிக் கட்டுரைகள் மற்றும் கணக்குகள் லத்தீன் மொழியிலேயே இருந்தன. ஆங்கிலம் படித்தால்தான் விஞ்ஞானம் கற்கமுடியும் என்று சொல்பவர்களுக்கு, நியூட்டனின் வாழ்க்கை பற்றி தெரிந்திருக்க நியாயமில்லை!

அதேநேரம் அன்று லத்தீன் மேலைச்சிந்தனை, துறைகள் எல்லாவற்றுக்கும் பொது மொழியாக விளங்கியது. பன்மொழிக் கூட்டமாக அன்றும் இன்றும் விளங்கும் ஐரோப்பியர் நடுவேயும் அறிவுத்துறைகளில் கல்வி கற்கவும் ஆய்வுகள் நடத்திக் கிட்டிய முடிவுகளைப் பகிர்ந்துகொள்ளவும் பொதுவாக சிந்தனைப் பரிமாற்றத்துக்கொரு நல்ல பாதையாகவும் லத்தின் விளங்கியது. இதற்கு இன்னொரு காரணம் ஐரோப்பிய வரலாற்றுப் பாதை. ரோம சாம்ராஜ்யத்தின் அரசு மொழியாக, ஆட்சி மொழியாக, அரசால் போஷிக்கப்பட்ட பல கலைகளின் புழங்கு மொழியாக லத்தீன் விளங்கியதோடு அன்று மேலை உலகில் பெரும் சக்தியாக இயங்கிய ரோமன் கத்தோலிக்கக் கிருஸ்தவத்தின் புழங்கு மொழியாகவும் இருந்தது.

அன்று அரசுகளிலும் அரசியலிலும் சமூகங்களைக் கட்டுப்படுத்துவதிலும் மக்களிடையே நிலவிய மத நம்பிக்கைகளை ஒழுங்குக்குள் வைப்பதிலும் லத்தீன் மொழியே மைய மொழி. ஏனெனில், கத்தோலிக்க மத அமைப்பு பன்னாடுகளிலும் ஆட்சி மதமாக விளங்கியது.

இதே காரணங்கள் இன்றைய ஆங்கில மொழிக்கு இல்லையென்றாலும் சிலகாலம் முன்புவரை உலகில் பெரும் சாம்ராஜ்ய சக்தியாக விளங்கியது பிரிட்டிஷ் ஆட்சி. பல கண்டங்களில் பல நாடுகளை ஆண்ட பிரிட்டிஷ் அரசின் ஆட்சி மொழி ஆங்கிலம். இன்று உலகின் பெரும் சந்தை மொழியாகவும் ஆய்வுத்துறைகளுக்குப் புழங்கு மொழியாகவும் ஊடகங்களில் பெரும் பகுதியை ஆளும் மொழியாகவும் விளங்கும் ஆங்கிலம், உலகின் பெரும் சக்தியான அமெரிக்காவின் ஆட்சி மொழியும் கூட. தவிர, உலக கல்வித் தளத்திலும் ஆய்வுத்தளத்திலும் அமெரிக்கப் பல்கலைகள் பிரதான இடத்தில் இருப்பதாலும் ஆங்கிலம் அறிவுத் துறைகளில் முக்கிய மொழியாக நிலவுகிறது.

அந்தளவில் அன்றைய லத்தீன் இருந்தயிடத்தில் இன்று ஆங்கிலமுள்ளது. என்றாலும் லத்தீன் மொழியை ஆங்கிலம் பிடித்துக் கொண்டதைப்போல வேறெந்த மொழியும் ஆங்கிலத்தின் இடத்தை பிடித்துக்கொள்ள தற்போதைக்கு வழியில்லை. ஆனால், பல நாடுகளின் பொருளாதார சக்தி கூடி அந்நாடுகள் மேலெழுந்து கல்வி, சிந்தனைத் துறையிலும் அந்நாடுகளின் பங்கு கூடும்போது அம்மொழிகள் மேலெழுந்து ஆய்வுத்துறைகளில் மாற்றுப் புழங்கு மொழியாகும் என்று நாம் எதிர்பார்க்கலாம்.

# துணுக்குச் செய்திகள்


தொகுப்பு: எஸ்.எம். அர்ஷத்தீன்
இலங்கை வயம்ப பல்கலைக்கழகம்




வழமையாக குளிர் காலத்தில் சூரிய ஒளியின்றி இருண்டு கிடக்கும் நோர்வேயின் நகர்களில் ஒன்றான யூகானுக்கு மூன்று இராட்சத கண்ணாடிகள் மூலம் முதற்தடவையாக இந்த ஆண்டு ஒளி கிடைத்துள்ளது. ஓர் ஆழமான பள்ளத்தாக்கில் அமைந்திருக்கும் இந்த நகருக்கு, அதனைச் சூழ்ந்துள்ள மூன்று மலைகளால் குளிர் காலத்தில் 6 மாதங்களுக்கு சூரிய ஒளி கிடைக்காது. அந்த மலைகள் சூரிய ஒளியை அந்த நகருக்கு கிடைக்காமல் மறைத்துவிடும். ஆகவே, இந்த நகருக்கு இராட்சத கண்ணாடிகளை பயன்படுத்தி இந்தக் காலத்தில் ஒளி வழங்க வேண்டும் என்ற யோசனை 100 ஆண்டுகளுக்கு முன்னதாக முன்வைக்கப்பட்டது. ஆனால், அதற்கான தொழிநுட்பம் 2003 இல்தான் கண்டுபிடிக்கப்பட்டது.



இந்திய சுதந்திர போராட்ட காலத்தில் சிறையில் இருந்தபோது மகாத்மா காந்தியினால் பயன்படுத்தப்பட்ட கை நெசவு ராட்டினம் பிரிட்டனில் 1.8 லட்சம் அமெரிக்க டொலர்களுக்கு (1.11 கோடி இந்திய ரூபாய்கள்) ஏலம் போனது. இந்த ராட்டினமே காந்தியின் சுதேசி இயக்கக் குறியீடாகவும் மிகவும் உன்னதமான பொக்கிஷமாகவும் அனைவராலும் பார்க்கப்பட்டது. 1930 களின் முற்பகுதியில் பிரிட்டிஷ் ஆட்சிக்கு எதிரான தனது போராட்டத்துக்காக பூனா சிறையில் வைக்கப்பட்டபோது, தனது உடைகளை நெய்வதற்காக காந்தி இந்தக் கைராட்டினத்தை பயன்படுத்தினார்.



செவ்வாய் கிரகத்தை நோக்கிய விண்வெளிப் பயணத்தை இந்தியா துவக்கியது. இந்தியாவில் தயாரிக்கப்பட்ட பி. எஸ். எல். வி. ராக்கெட், மங்கள்யான் என்று அழைக்கப்படும் செவ்வாய் கிரகத்தை ஆராயும் கலன் ஸ்ரீ ஹரிகோட்டாவில் இருந்து விண்ணில் ஏவப்பட்டது. பி. எஸ். எல். வி. ராக்கெட் மங்கள்யான் கலத்தை புவியின் நீள் வட்டப் பாதைக்கு எடுத்துச் சென்றுள்ளது. இரு வாரங்களில் இந்த கலனின் வட்டப்பாதை படிப்படியாக உயர்த்தப்படும். வரும் டிசெம்பர் 1 ஆம் திகதியளவில் இந்தக் கலன் புவி ஈர்ப்பு விசையை உடைத்து வெளியேறி செவ்வாய் நோக்கிய தனது நீண்ட பயணத்தை துவக்கும்.




ரஷ்யாவில் இடம்பெறவுள்ள சோச்சி குளிர்கால ஒலிம்பிக் போட்டிகளுக்கான சுடரை விண்வெளிக்கு கொண்டு செல்லும் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இந்த சுடரைத் தாங்கிய சொயூஸ் விண்கலம் சர்வதேச விண்வெளி நிலையத்தை நோக்கி ஏவப்பட்டுள்ளது. ரஷ்யாவில் நடைபெறவுள்ள அடுத்த ஒலிம்பிக் போட்டிகளின் ஒரு கட்டமாக இந்த சுடர் விண்வெளிக்கு கொண்டு செல்லப்படுகின்றது. வரலாற்றில் முதல் முறையாக விண்ணுக்கு கொண்டு செல்லப்படும் ஒலிம்பிக் சுடரை சர்வதேச விண்வெளி நிலையத்திலுள்ள ரஷ்ய வீரர்கள் வரவேற்கவுள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'வால் முளைத்த சூரியன்'

## சிறுவர் சித்திரமும் உளவியலும்



சித்திரம் வரைவது எனக்குப் பிடித்தமான விடயம். சிறுவர் ஓவியங்கள், அழகியலில் மட்டுமல்லாது சிறுவர் உளவியலிலும் முக்கியம் பெறுகின்றன. குழந்தைகள் போலவே குழந்தைகளின் சித்திரங்களும் வேறோர் உலகம் சார்ந்தவை.

சித்திரங்களினூடாக சிறுவர்கள் தம்மையும் தம் மன எழுச்சிகளையும் மற்றும் இரகசியமாக பத்திரப்படுத்தி வைத்திருக்கும் உணர்வுகளையும் வெளிப்படுத்துகிறார்கள்.

சித்திரம் வரையும் சின்னக் கரங்களை கவனித்துப் பாருங்கள். அவை உண்மையில் அவர்களின் மெல்லிய உள்ளத்தை வெளிப்படுத்தும் ஊடகங்கள்.

சிறுவர் சித்திரங்களூடாக அவர்களது உளவியல் தேவைகளை, நிர்ப்பந்தங்களை மட்டுமல்லாது அன்றாட வாழ்வில் அவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளையும் கூட அறிந்துகொள்ள முடியும்.

இப்படித்தான் இருக்கவேண்டும் என்று ஓவியங்களுக்கு வரையறைகள் கிடையாது.

ஆசிரியை வரையும் படத்தைப் பார்த்து வரையவும் வர்ணந்தீட்டவும் பழகும் சிறுவர்கள் தங்கள் தனித்தன்மையையும் ஆக்கத் திறனையும் இழக்கிறார்கள். மட்டுமல்லாது, அவர்களது மனத்தின் கண்ணாடியாக வல்லாது ஆசிரியையை கைவண்ணத்தின் இன்னொரு வெளிப்பாடாக மட்டுமே அவர்கள் வரைய ஆரம்பிக்கிறார்கள்.

நாங்கள் பெற்றோராக இருந்தாலும் சரி அல்லது ஆசிரியர்களாக இருந்தாலும் சரி சிறுவர் சித்திரத்தை அடித்துத் திருத்தும் உரிமையோ, அதிகாரமோ நமக்கில்லை.

நாமெல்லாம் பச்சை வர்ணம் என்றும் சிவப்பு என்றும் இலகுவாக சொல்லிவிடுகிறோம். ஆனால், அந்தந்த நிறங்களில்தான் எத்துனை வகை. இதற்கு இந்த நிறம்தான் என்று யாரும் சொல்ல முடியாது.

குழந்தையின் உலகில் யானை நீல நிறத்திலிருக்கலாம், பூனைக்கு நான்கு கண்கள் இருக்கலாம், சூரியனுக்கு வால் முளைத்திருக்கலாம்.

புரிந்து கொள்ளுங்கள். உங்கள் குழந்தை அசல் கற்பனையும் தனித்துவமான சிந்தனையும் கொண்டிருக்க வேண்டுமா அல்லது நகலாக இன்னொன்றைப் பார்த்துப் பிரதி பண்ணக்கூடிய இயல்புடன் வேண்டுமா? நீங்களே தீர்மானித்துக் கொள்ளுங்கள்.

**சில குறிப்புக்கள்**

- கையைப் பிடித்து வரைய வைப்பதை கட்டாயமாக தவிர்த்துக் கொள்ளுங்கள்
- குழந்தையாகவே சுதந்திரமாக நிறங்களைத் தெரிவு செய்யட்டும்.
- வித்தியாசமான அளவுகளில் வரையும் தாள்களை வழங்குங்கள்.
- பென்ஸிலால் வரைந்து நிறந்தீட்டுவதை விட வர்ணங்களை நேரடியாக எடுத்து கீறுவதற்கு ஊக்கமளியுங்கள்.
- சித்திரத்தைப் பூரணப்படுத்துமாறு கட்டாயப்படுத்தாதீர்கள். முடிவை காண்பதை விட அந்த செயலில் மகிழ்ச்சிகரமாக ஈடுபடுவதை உறுதிப்படுத்துவதே நோக்கமாக இருக்கவேண்டும்.
- வரைவதற்கு தாள்களுக்கு மேலதிகமாக பலகை, துணி, அகன்ற கற்கள் போன்ற சாதனங்களை வழங்குங்கள், கற்பனையும் நுணுக்கமும் வளரும்.
- ஒரு படத்தைக் காட்டி அல்லது இப்படித்தான் வரைய வேண்டும் என்று திருத்தி வரையவைப்பதன் மூலம் குழந்தையின் கற்பனைத்திறனை கொன்று புதைக்கிறீர்கள் என்பதை நினைவில் கொள்ளுங்கள்.
- சிறுவர்கள் வரைவதற்கு கிரோயோன்ஸ் எனப்படும் சோக் வர்ணம் மிக உகந்தது. மேலதிகமாக வோட்டர் கலர் எனப்படும் நீர்வர்ணங்கள், இயற்கைச் சூழலிலுள்ள வர்ணங்கள் மற்றும் வீட்டில் தயாரித்த வர்ணங்களை வழங்கலாம்.
- சிறுவர் சித்திரங்களை வாசிக்க கற்றுக் கொள்ளுங்கள். அவர்கள் பயன்படுத்தும் நிறங்கள் அவர்களின் உணர்வுகளை வெளிக்காட்டுகின்றவை. உதாரணமாக, குழந்தைகள் அவர்களுக்குப் பிடித்தமானவர்களை அல்லது அவர்களது வாழ்க்கையில் முக்கியமானவர்களை பெரிதாகவும் அதிக அலங்காரத்தோடும் வரைவார்கள்.
- குழந்தைகளை வித்தியாசமான இடங்களுக்கு அழைத்துச் செல்வதும் சூழலை சேர்ந்து ரசிப்பதும் கற்பனா உணர்வைத் தூண்டும்.
- குழந்தையை நிறைவாகப் பாராட்டுங்கள். சித்திரம் மிக அழகாக இருக்கிறது என்று சிலாகியுங்கள். மற்றக் குழந்தைகளின் சித்திரங்களுடன் ஒப்பிடுவதும் திருத்தியமைப்பதும் கண்டிப்பாகத் தவிர்க்கப்பட வேண்டும்.




தயாரிப்பு: சமீலா யூசுப் அலி

# தொலைந்த டயறியும் தொலையாத ஞாபகங்களும்



டெல்லியிலிருந்து பெங்களூருக்கு கிட்டத்தட்ட 37 மணிநேரம் ரயில் பயணம். அந்தப் பயணத்தில் எனது நாட்குறிப்பு தொலைந்துவிட்டது.

நாடு செல்லும் குதூகலிப்போடு விமான நிலையம் நோக்கிய பயணத்தின்போது தான் டயறியைத் தொலைத்ததை உணர்ந்தேன். மீண்டும் செல்லவும் முடியாது; சென்றாலும் தொலைந்த டயறி கிடைக்குமா என்பது சந்தேகம்.

ஜனவரி ஆரம்பத்தில் கூடுதலாகவும் பெப்ரவரியில் ஒரு சில தாள்களும் மார்ச்சுக்குப் பிறகு மல்லிகைச்சாமான் லிஸ்ட் டெழுதும் டயறி என்னுடையதல்ல.

விடாது டயறி எழுதும் பழக்கம் பத்து வயதிலிருந்தே என்னைத் தொடர்கிறது. அது என் தந்தை வழிச் சீதனம் என நினைக்கிறேன். நாட்குறிப்பு எழுதாமல் உறங்கச் சென்ற நாட்களை விரல் கொண்டு எண்ணிடலாம். பழைய டயறிகளைப் பார்க்கும் போது சிரிப்பு, துக்கம், ஏமாற்றம் போன்ற நவரச உணர்வுகளும் ஆட்கொள்ளும். டயறிகளில் சின்னச் சின்னதாய் நிறைய குறியீட்டுப் படங்களுமுண்டு. சமயங்களில் பல வரிகள் சொல்லாததை ஒரு குறியீடு அல்லது படம் சொல்லிவிடும்.

**டயறிகள் பாலங்கள்**

கண்ணுக்குப் புலப்படாத இறந்த காலத்தையும் அது சார்ந்த நினைவுகளையும் நிகழ் காலத்துடன் இணைக்கும் வல்லமை அவற்றுக்குண்டு.

கையோடு வைத்திருந்த டயறி காணாமற்போய்விட்டது.

கூகிள் தேடலிலும் இணையத்தில் பல குழுமங்களிலும் இழந்த அந்த டயறி கிடைக்காதா? என்றொரு எதிர்பார்ப்பில் தேடினேன். பல குறுஞ்செய்திகள் வைத்தேன். இந்தியாவின் ராஜ்தானி எக்ஸ்பிரஸ் ரயிலின் இணையபக்கத்தில் கூட வேண்டுகோள் விடுத்தேன்.

மாதம் ஒன்றாகிவிட்டது.

இந்த வருடம் பல முக்கிய நிகழ்வுகள் மட்டுமல்லாது, இந்தியப் பயணத்தில் கண்டதும் கேட்டதும் உணர்ந்ததுமென பல பதிவுகள் ஈரம் காயாத நிலையில் அந்த டயறியில்தான் எழுதிவைத்தேன்.

இன்னொரு குறிப்பேட்டை எடுத்து ஞாபகத்தில் உள்ளவற்றைக் குறித்து வருகிறேன்.

ஆனாலும் இந்தியாவின் எங்கோவோர் மூலையில் என் டயறி அனாதையாய் கிடக்குமோ? என்பதை நினைக்கும்போது உண்மையில் வலி தருகிறது.

அந்த டயறி குப்பைகளோடு குப்பையாய் வீசப்பட்டிருக்கலாம்.

தாள்கள் கிழிக்கப்பட்டு கடலைச் சுருளாய், சுண்டல் சுருளாய் நிறம் மாறியிருக்கலாம்.

அந்த டயறியின் விலை, கூடினால் 500 ரூபாய் இருக்கலாம். ஆனால், அது சுமந்திருக்கும் ஞாபகங்களுக்கு விலைசொல்ல எனக்குத் தெரியாது.

இத்தனை துக்கங்களுக்கு மத்தியில் இறைவனுக்கு நன்றி சொல்கிறேன். மூளை எனும் அற்புதமான டயறியையும் அதில் பதிந்தவற்றை அப்படியே மீளவாசிப்பதற்கான நினைவாற்றலையும் படைத்த வல்லமையாளன் அவனே.

அந்த டயறி தொலைந்து போனால்...? மேலும் ஒரு கணம் சிந்திக்கிறேன்.

சமீலா யூசுப் அலி

# பாலர் பாடசாலைக்கான வழிகாட்டி நூல்கள்

கடந்த இரு தசாப்தங்களாக ஆரம்ப வகுப்புக்கான கலைத்திட்டத்தில் பாரிய மாற்றங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. வர்ணமயமான பாட நூல்கள், செயற்பாட்டுக்கான வழிவகைகள், பாடத்துக்கான தனியான வழிகாட்டல்கள் என்பன வெளிப்படையான மாற்றங்களாக உள்ளன. இவற்றை விட ஆரம்ப வகுப்புகளில் கணிதம் கற்பிக்கும் முறையில்கூட மாற்றங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

இவற்றுக்கெல்லாம் ஈடுகொடுக்கும் வண்ணம், நவீனமுறையில் கணிதம் கற்போம் மற்றும் நவீன முறையில் தமிழ்மொழி கற்போம் ஆகிய இரு வழிகாட்டி நூல்கள் தயாரிக்கப்பட்டுள்ளன. சிறுவர் விரும்பிச் செயற்படும் வகையிலான செயற்பாடுகளும் வர்ணத்துடன் அமைந்த உருக்களுடனும் மாணவர்களைக் கவரும் தன்மையில் அமைந்துள்ளன. இது மாணவர்களுக்கும் ஆசிரியருக்கும் மட்டுமன்றி, வழிகாட்டவிளையும் பெற்றோருக்கும் மனமகிழ்ச்சியைத் தரும் ஒரு விடயமாகும்.

'நவீன முறையில் கணிதம் கற்போம்' என்ற செயற்பாட்டு வழிகாட்டி நூலின் ஆசிரியர் மௌலவியா ஹிதாயா இப்ராஹீம் அவர்கள் எட்டு வருடங்களுக்கு மேலாக பாலர் பாடசாலையொன்றை நடத்தி அனுபவம் பெற்றவர். சிறுவர், சிறுமியரின் மனப்போக்குகளையும் எண்ணங்கள், தேவைகளையும் நன்கு உணர்ந்தவர். இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் முன்பள்ளிக் கல்வி நிகழ்ச்சித்திட்ட தராதரப் பத்திர வகுப்பில் பயிற்சி பெற்றவர்.

தொடர்புகளுக்கு: 0771998165

ரிஹானா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## மனோ கணேசனின்...

(9ஆம் பக்கத் தொடர்)

இ.தொ.கா. வெறுப்பை மட்டும் உமிழ்ந்து வாக்குகளைப் பெறலாம் என்ற உத்தியைப் பின்பற்றி வந்த மின்னல் ரங்காவின் பிரஜைகள் முன்னணி படுதோல்வி அடைந்திருக்கிறது. மனோ கணேசனின் வாகனமான ஐ.தே.க. மிகுந்த பலவீனமடைந்திருக்கிறது. தமிழ் மக்கள் நலன்களுக்கு எதிரான விஷயங்கள் கிளப்பப்படும்போது மனோ கணேசன் என்ன சொல்கிறார் என்று பார்ப்பதை விட, தமிழர்களுக்கு ஆதரவான சிங்களத் தலைமைகள் என்ன சொல்கின்றன என்பதை அறிவதில் தமிழ் மக்கள் ஆர்வம் காட்டுகின்றனர். இப்படிப் பல மாற்றங்கள்.

இந்தப் பின்னணியிலேயே மேல்மாகாண சபைத் தேர்தல் நடைபெறவுள்ளது. அனேகமாக அடுத்த வருடம் மார்ச் மாதமளவில் நடைபெறலாம்.

இத்தேர்தலில் தாமும் போட்டியிடப் போவதாக தமிழ்த் தேசிய கூட்டமைப்பு தெரிவித்துள்ளது. நீண்ட காலத்தின் பின்னர், மத்திய மாகாணத்தில் கிடைத்த வெற்றி உற்சாகத்தில், தாமும் போட்டியிடப் போவதாக இ.தொ.கா. வும் அறிவித்துள்ளது.

இந்த அறிவிப்பால் கலங்கிப் போயிருக்கிறார் மனோ கணேசன். ஏனெனில், கூட்டமைப்பு போட்டியிட்டால், மேல் மாகாண வாழ் வடக்கு, கிழக்கு தமிழ் வாக்காளர்கள் அக்கட்சி வேட்பாளர்களுக்கே வாக்களிப்பார்கள். மேல் மாகாண வாழ் தமிழர்களில் கணிசமானோர் இ.தொ.கா. வேட்பாளர்களுக்கும் ம.ம.மு. அல்லது, தொழிலாளர் தேசிய சங்க வேட்பாளர்களுக்கும் (அக்கட்சிகள் போட்டியிடுமானால்) வாக்களிப்பார்கள். இதனால் பாதிக்கப்படப்போவது,

இத்தனை வருடங்களாக மேல் மாகாணத்தில் தனிக்காட்டு ராஜாவாக இருந்த மனோ கணேசன் அல்லவா?

இதனால்தான் புலம்புகிறார் மனோ கணேசன், என் அடிமடியிலேயே கை வைக்கிறீர்களே என்று. இதற்கு பதிலளித்திருக்கின்ற சம்பந்தனும் முத்து சிவலிங்கமும் உங்களை வீழ்த்த வேண்டும் என்ற எண்ணம் எங்களுக்கில்லை. இது தொடர்பாக நாம் பேசிப்பார்க்கலாமே என்று குறிப்பிட்டுள்ளனர். சம்பந்தனை விடுங்கள். ஆறுமுகன் தொண்டமான் இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி மனோ கணேசனை தன் வழிக்குக் கொண்டுவர முயலுவார் என எதிர்பார்க்கலாம்.

## பாதைமாறிய...

(19ஆம் பக்கத் தொடர்)

போதைக்கு அடிமையாகி வீதிவழியே செல்வோருக்கு இடைஞ்சல் விளைவிக்கும் நிலையில்தான் பலமுறை நான் காண நேரிட்டன. இவ்வாறாக காணப்பட்டவர்தான் இன்று தொப்பி சகிதம் கார்ட்போர்ட் சேகரிக்கும் தொழிலில் ஈடுபடுகிறார். இந்த மாற்றத்திற்கு என்ன காரணமாக இருக்கும் என்ற ஆவலில் அவரிடம் பேச்சு கொடுக்கும் முகமாக நாளையை எதிர்ப்பார்த்திருந்தேன்.

மறுநாள் வரவே நான் சேகரித்து வைத்திருந்த கார்ட்போர்ட்களை அவரிடம் கொடுத்தபடி பேச்சுக் கொடுத்தேன். அவரும் சலிப்பில்லாது தனது நிலைபற்றி விபரித்தார். போதையில் மூழ்கிப்போயிருந்த அவரை ஓர் இஸ்லாமிய இயக்கத்தை சார்ந்த சிலர் செயற்திட்டமொன்றில் இணைத்து வழிகாட்டினராம். செயற்திட்டத்தில், தங்கியிருந்த காலப்பகுதியில் தனக்கும் தனது குடும்பத்துக்கும் தேவையான செலவுகளை அவர்களாலேயே மேற்கொள்ளப்பட்டதாம்.

பல விடயங்கள் பயிற்றுவிக்கப்பட்டு, போதையை மறக்கச்செய்யவும், அதிலிருந்து மீள்வதற்குரிய பயிற்சிகளும் வழங்கப்பட்டதாம். இவைகள்தான் மாற்ற நிலைக்குக் காரணம்.

எனது உள்ளம் இவரின் உன்னதமான மாற்றத்தைக் கண்டு மெய்சிலிர்த்தது. இவரின் மாற்றத்திற்கு உதவிபுரிந்த அந்நல்ல உள்ளங்களுக்காகவும் பிரார்த்தித்தது.

இன்று பலர் காலச்சூழலில் வழிதவறி வாழ்க்கையை இழந்துவிடுகின்றனர். இது அவர்களது ஈருலக வாழ்க்கையையும் சீரழித்து வருகின்றது. இவ்வாறான வழி தவறலிலிருந்து மக்களை நேர்வழிப்படுத்தும் முயற்சிகள் நடைபெற வேண்டும். அவ்வாறான பணிகள் மூலந்தான் வழிகேட்டிலிருந்து மக்களை நேர்வழிப்படுத்த முடியும். இது போன்ற சமூகப்பணியானது மிகவும் மகத்தானது. இப்பணியின் பெறுமானத்தை ஹதீஸ் இவ்வாறு சொல்கிறது.

"உன்னைக் கொண்டு அல்லாஹ் ஒருவனுக்கு வழிகாட்டுவதென்பது உலகமும் அதிலிருக்கும் அனைத்தும் உமக்கு கிடைப்பதை விட அது சிறந்ததாகும்."

மாற்றங்கள் எவ்வாறெல்லாம் சுற்றிவருகின்றன. இன்று உழைப்பு நேரம் தவிர, தனது பால்ய நண்பர்களை போதையிலிருந்து மீட்கும் நடவடிக்கையாக அவரது பயணம் அமையும்போது ஒரு கல் சிற்பமாகிறது. கரடு முரடான பாதை செப்பனிடப்படுகிறது.



## என்னை விசாரிக்க நீ...

(15ஆம் பக்கத் தொடர்)

மேற்குறித்த விடயங்களில் எது சரியாக இருந்தாலும், இராணுவத்தின் கனவுகள் எதுவும் நிறைவேறவில்லை என்பது மட்டும் உண்மை. முதலாவது காரணம், முர்ஸி நீதிமன்றத்தில் நீதிபதியை நோக்கி காரசாரமாக பேசியமை உட்பட, தான் இன்னும் நாட்டின் ஜனாதிபதியே என்ற நிலைப்பாட்டை தெரிவித்தமை ஆர்ப்பாட்டக்காரர்களை இன்னும் உத்வேகப்படுத்தியுள்ளது. இரண்டாவது, சர்வதேசத்தின் அழுத்தங்கள் முன்பிருந்ததை விட பல மடங்கு அதிகரித்துள்ளன. முர்ஸி மீதான விசாரணையின்போது, தனியார் தொலைக்காட்சிகள் எதனையும் நீதிமன்றத்தினுள் இராணுவம் அனுமதிக்காமை, அவருக்காக வாதாடும் வழக்கறிஞர்களை சந்திக்க விடாமை போன்றவற்றை ஆதாரம் காட்டி, சர்வதேச மனித உரிமைக் குழுக்கள் அரசை கடுமையாக விமர்சித்தவண்ணமுள்ளன.

இறுதியாக, எகிப்தின் இராணுவ அரசாங்கம் தனது நிலையைத் தக்கவைத்துக் கொள்வதற்காக போராடும் காட்சிகளைப் பார்த்துவிட்டு மத்திய கிழக்கு அரசியல் விற்பன்னரான ரொபட் பிக்ஸ்: எகிப்திய இராணுவம் தன்னை சுத்தப்படுத்திக் கொள்வதற்காக எதிர்பார்த்திருந்த அடுத்த ஆயுதமும் பரிபோய்விட்டது என்கிறார்.



(12ஆம் பக்கத் தொடர்)

## விழிப்புணர்வூட்டும் மக்கள்....

சமய சகிப்புத்தன்மை, சமயம், இனம் சார் பண்மைத்துவம் போன்றவைகளை ஏற்படுத்தும் பொருட்டு மக்கள் அரங்கம் செயற்திட்டம் இலங்கை அபிவிருத்திக்கான ஊடகவியலாளர் மன்றத்தினால் அமுல்படுத்தப்படுகின்றது.

இம்மக்கள் அரங்கம் மக்களின் பிரச்சினைகளை அவர்களாக இனங்கண்டு தீர்வினைத் தேடிக் கொள்வதற்கும் அதனைக் கலைத்துறையினூடாக வெளிக் கொணர்வதற்குமான ஒரு முயற்சியாகும். இதனூடாக புதிய இளம் தலைமுறையினரிலிருந்து சமூக மாற்றத்திற்காக பங்களிப்பு செய்யும் நாடக எழுத்தாளர்கள், நாடகக் கலைஞர்கள் உருவாக்கப்படுகிறார்கள். இத்திட்டத்தில் பிரதேசத்திலுள்ள கலைஞர்களும் பங்கெடுத்துக் கொள்வதற்கான வாய்ப்பும் வழங்கப்படவுள்ளது. இவ்வகையான செயற்திட்டங்கள் மக்கள் தமது பிரச்சினைகளை சமூகத்தின் முன்கொண்டு வந்து தீர்வினைப்பெற வலுவூட்ட வழிகோலுமாக இருந்தால், இது சிறந்த திட்டமாக மாறும் என்பதில் ஐயமில்லை.




## CHOGM விழா ...

(5ஆம் பக்கத் தொடர்)

1976 ஆம் ஆண்டில் நடைபெற்ற அணிசேரா நாடுகளின் உச்சி மாநாட்டின் பின், இலங்கையில் நடைபெறும் சர்வதேச நிகழ்வு என்ற வகையிலும் அடுத்த இரண்டாண்டுகளுக்கு தலைமைத்துவம் கிடைக்கிறது என்ற வகையிலும் இது இலங்கைக்கு முக்கியமானது என்பதில் சந்தேகமில்லை. பெருந்தொகையான பணம் செலவிடப்படல், வீணடிப்பு, அதன் தாக்கத்தை அடுத்த பத்தாண்டுகளிலும் ஈடுசெய்ய முடியாமற்போகும் என்ற விமர்சனங்களுக்கு மத்தியிலும்கூட, தலைமைப் பதவியை இலங்கையின் நன்மதிப்பைக் கட்டியெழுப்ப எவ்வாறு பயன்படுத்த வேண்டும் என்று சிந்திப்பதே பொருத்தமானது.

தலைமைத்துவத்தை ஏற்பதன் மூலம் இலங்கையும் அதன் ஜனாதிபதியும் பொதுநலவாய மேடையில் ஊடக வலயமைப்புகள் பிரவேசிக்கும் மொத்த ஊடக உலகும் இலங்கையை நோக்கியதாக மையப்படுத்தப்படும். பொதுநலவாய நாடுகளின் கவனத்தை ஈர்க்கும் நாடாக அடுத்த இரண்டு வருடங்களிலும் இலங்கை திகழும். பொதுநலவாயத்தில் மட்டுமன்றி, ஏனைய சர்வதேச வலயமைப்புகளின் கவனமும் ஜனாதிபதி மீது குவிக்கப்படும். அந்த அவதானிப்புகளின்போது நாடுகளும் அவற்றின் மக்களும் அமைப்புகளும் எதனை எதிர்பார்ப்பார்கள்? பொதுநலவாயத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட கட்டுப்பாடுகள், கோட்பாடுகள், மர்புகளை மதிக்கும் ஒரு நாடாகவும் ஒரு தலைமைத்துவமாகவும் இருக்க வேண்டும் என்றுதான் எதிர்பார்ப்பார்கள். பொதுநலவாயத்தின் நலன்கள், நன்மதிப்பு பாதுகாக்கப்படும் ஒரு நாடாக இலங்கை இருக்க வேண்டும் என்று எதிர்பார்க்கப்படலாம்.

பொதுநலவாய மரபுகளுக்கு இசைவாக இருப்பதென்பது அதன் அடிப்படைகளான ஜனநாயகம், மனித உரிமைகள், கருத்து வெளியீட்டுச் சுதந்திரம், அதிகாரப் பரவலாக்கம், சட்டத்தின் ஆட்சி, சுதந்திரமான நீதித்துறை, நல்லாட்சி, சகிப்புத்தன்மை, இன நல்லுறவு உட்பட்ட நாகரிக உலகின் நல்லாட்சி இயல்புகள் ஆகும். பொதுநலவாயத்தின் வேறு சில நாடுகளும் இந்தத் தரத்திலில்லை. ஆனால், அவை தலைமைத்துவத்துக்கு வரவில்லை. இலங்கை உண்மையில் இந்தத் தர நிர்ணயத்தில் எங்கே இருக்கிறது என்பதைப் பார்க்கவேண்டும். இலங்கை யுத்த காலத்தில் இருந்த நிலையிலிருந்து பௌதிக ரீதியாக மீண்டுள்ளதை மாநாட்டின் மூலம் நிரூபித்தாலும் ஜனநாயக நல்லாட்சிப் பண்புகள் இருப்பதை அடுத்த இரண்டாண்டுகளுக்கு தலைமைத்துவத்தினால் மேலும் நிரூபிக்க முடியுமாக இருந்தால் அதுவே CHOGM தந்த வெற்றியாக அமையும். இதுவரை எந்த நிலையில் இருந்தாலும் மனம் வைத்தால் மாறுவது ஒன்றும் சிரமமாக இருக்காது.

தமக்கென்றே ஜனநாயகப் பண்புகளின்றித் திகழும் கட்சிகள் எதேச்சதிகாரங்களை வைத்துக் கொண்டு ஜனநாயகம் பேசும் அரசியற் கட்சி தலைமைகள் போலன்றி, உள்நாட்டில் நல்லாட்சிப் பண்புகள் உறுதிப்படுத்தப்படும் நிலை நிரூபிக்கப்பட வேண்டும். பொதுநலவாய மாநாட்டின் நிமித்தம் சில முன்னேற்றமான நடவடிக்கைகளை இலங்கை மேற்கொண்டது. திருகோணமலை மாணவர்கள் கொலை வழக்கின் சந்தேக நபர் கைது செய்யப்பட்டமை, வடமாகாண தேர்தல் நடத்தியமை, குர்ரம் ஷேக்கின் வழக்கு விசாரணையை ஆரம்பித்தமை, காணாமற் போனோரைத் தேடும் ஆணைக்குழு நியமனம் போன்றவற்றை இந்த வகையில் குறிப்பிடலாம்.

இவை என்ன நோக்கத்தில் எடுக்கப்பட்டாலும் உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் மெச்சப்படுவதாகவேயுள்ளன. இதுபோன்ற நடவடிக்கைகள் தொடராதபோது பாரிய செலவுகளுடன் நடத்தப்படும் CHOGM விழா சோகத்தில் முடியவும் கூடும்.



## ரூஸோவின் தத்துவ...

(12ஆம் பக்கத் தொடர்)

மாணவர் மையக் கல்வி பற்றிய கருத்தை ரூஸோ முன்வைத்தார். இன்று எமது கல்விமுறை மாணவர் மையம் அல்லது தேர்ச்சி மைய கல்விமுறையாகக் காணப்படுவது குறிப்பிடத்தக்கதாகும். மேலும், மாணவர்களை தேடியறிய விடவேண்டும். பிரச்சினைகளைத் தீர்க்க தயார்படுத்த வேண்டும் என்று கூறிய ரூஸோவின் கருத்து, இன்று வகுப்பறைகளில் இடம்பெறும் 5E (கட்டுருவாக்க) முறை கற்பித்தலில் இடம்பெறுவதை அவதானிக்கலாம்.

இன்றைய வகுப்பறைக் கற்பித்தல்கள் செயற்பாடுகளுடன் கூடிய கற்பித்தல், விளையாட்டுடன் கூடிய கற்பித்தல்களாகக் காணப்படுகின்றன. இவ்வாறான கற்பித்தல் முறைகளையே ரூஸோவும் வலியுறுத்தினார். இன்னும் தற்கால வகுப்பறைகளில் கற்பித்தல் சாதனங்களின் பயன்பாடு தவிர்க்க முடியாத ஒன்றாக வலியுறுத்தப்படுகின்றது. இதுவும் ரூஸோவினால் முன்வைக்கப்பட்ட தத்துவக் கருத்துக்களில் ஒன்றாகும்.

பிள்ளைகள் கற்க வேண்டும் என ரூஸோ கூறிய வரலாறு, இலக்கியம், விஞ்ஞானம் மற்றும் புவியியல் போன்ற பாடங்கள் தற்கால கலைத்திட்டத்தில் உள்ளடக்கப்பட்டு கற்பிக்கப்படுவதனையும் காணக்கூடியதாகவுள்ளது.


இக்கருத்துக்களை தொகுத்து நோக்கும்போது தற்கால கல்விமுறையில் ரூஸோவின் தத்துவக் கருத்துக்களின் செல்வாக்கு மிகக் கூடுதலாகக் காணப்படுகின்றது. எனவே, நவீன குழந்தை கல்விச் செயற்பாடுகளின் நுழைவாயில்களில் ரூஸோ நிற்கிறார் எனலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நபிகளாரின் சுன்னாவும் சட்டவாக்கமும்

மூலம்: கலாநிதி யூசுப் அல்கர்ளாவி
மொழியாக்கம்: அஷ்ஷெய்க் எம்.எப். ஸைனுல் ஹுஸைன் (நளீமி)

கலாநிதி யூஸுப் அல்கர்ளாவி அவர்கள் எழுதிய "அஸ்ஸுன்னா மஸ்தரன் லில் மஃரிபா வல் ஹழாரா" (அறிவுக்கும் நாகரிகத்திற்குமான அடிப்படை என்ற வகையில் சுன்னா) என்ற நூலின் மொழி பெயர்ப்புத் தொடர்



(தொடர் 26)

எனவே, நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களுக்குப் பின்னர் வந்த நீதமான தலைவர்களுக்கும் பொதுநலனை கருத்திற்கொண்டு குதிரைகளுக்கான ஸகாத் விடயத்தில் அதனை மக்களுக்கு கடமையாக்குவதா? அல்லது விதிவிலக்களிப்பதா? என்ற தீர்மானத்தை எடுக்க முடியும்.

குதிரை வளர்ப்பு சில நாடுகளில் செல்வ விருத்திக்கும் உழைப்புக்குமான வழியாகவும் ஒட்டகத்தை விட குதிரை அதன் உரிமையாளர்களுக்கு முக்கியமான பெருஞ் செல்வமாகவும் அதிக வருமானத்தை ஈட்டித்தரக் கூடியதாகவுமிருந்தால், செல்வந்தர்கள் மத்தியில் பாகுபாடு காட்டாது அனைவரிடமும் ஸகாத் அறவிடுவதற்காக வேண்டி அந்நாட்டு தலைவர்கள் குதிரை உரிமையாளர்கள் மீதும் ஸகாத்தை விதியாக்குவது கடமையாகும். நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் குதிரைகளுக்கு ஸகாத் அறவிடாது விதிவிலக்களித்திருந்த போதிலும் உமர் (ரழியல்லாஹு அன்ஹு) குதிரைகளுக்கு ஸகாத் அறவிட்டதை ஏற்றுக்கொள்ளும் அங்கீகரிக்கத்தக்க விளக்கம் இதுவேயாகும்.

நாட்டின் தலைவர் என்ற வகையிலுமே நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் இறைச்சியை சேமிக்க வேண்டாம் என்ற தடையுத்தரவைப் பிறப்பித்தார்கள்.

நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் கூறியதாக சலமா பின் அல் அக்வஃ அறிவிப்பதை இமாம் புகாரி பின்வருமாறு பதிவு செய்துள்ளார்:

"உங்களில் யாராவது உழ்ஹிய்யா கொடுத்தால் அவர் அதில் எதனையும் மூன்று நாட்களுக்கு மேல் தனது வீட்டில் மீதப்படுத்தி வைத்துக்கொள்ள வேண்டாம்"

அடுத்த வருடம் வந்தபோது, "அல்லாஹ்வின் தூதரே கடந்த ஆண்டு செய்தது போலவே இவ்வருடமும் நாங்கள் செய்யட்டுமா?" என நபித்தோழர்கள் வினவினர். அதற்கு அல்லாஹ்வின் தூதர் அவர்கள்:

"உண்ணுங்கள், உணவளியுங்கள் எஞ்சியதை சேமித்தும் வையுங்கள். பசிபட்டினியால் வாடிய மக்களுக்கு நீங்கள் உதவ வேண்டும் என்பதற்காகவே கடந்த வருடம் நான் அப்படிக் கூறினேன்"

இன்னும் சில ஹதீஸ்களில் மக்கள் குழுவொன்று வெளியூரிலிருந்து வந்திருந்த காரணத்திற்காகவே உழ்ஹிய்யா இறைச்சியை சேமிப்பதை விட்டும் உங்களைத் தடுத்தேன் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த ஹதீஸிலிருந்தும் இதற்கு முந்தைய ஹதீஸிலிருந்தும் நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் எக்காரணத்திற்காக உழ்ஹிய்யா இறைச்சி சேமிக்கப்படுவதை தடுத்தார்கள் என்பதை எங்களால் தெளிவாக விளங்கிக்கொள்ள முடியுமாகவுள்ளது. எதிர்பாராது ஏற்பட்ட அவசர நிலைமைக்கு பரிகாரம் காணவே நபியவர்கள் அத்தடை உத்தரவை வெளியிட்டார்கள். காரணம் நீங்கும்போது அதற்காக பிறப்பிக்கப்பட்ட சட்டமும் நீங்கும். உழ்ஹிய்யா இறைச்சியை சேமிப்பதை அனுமதித்து ஹதீஸ் தெளிவாகவே வந்துள்ளது.

"உழ்ஹிய்யா இறைச்சியை சேமிப்பதை விட்டும் உங்களை நான் தடுத்திருந்தேன். இப்பொழுது நீங்கள் அதனை சாப்பிடுங்கள் பிறருக்கும் கொடுங்கள், சேமித்தும் வையுங்கள்"

இந்த அனுமதி முந்தைய தடையுத்தரவை நஸ்க் செய்தது என அதிகமான சட்ட அறிஞர்கள் எண்ணிக் கொண்டுள்ளனர். ஆனால், அவ்வாறன்று. அது நஸ்க் பிரிவினுள் அடங்கமாட்டாது என்பதே உறுதி செய்யப்பட்ட உண்மையாகும்.

### அதிகமான விவகாரங்களுக்கு 'நஸ்க்' என்று கூறுவதிலிருந்து தவிர்ந்துகொள்ளல்

ஆதாரங்கள் ஒன்றுக்கொன்று முரண்படும்போது, முரண்பாட்டைத் தவிர்ப்பதற்காக அதிகமான அறிஞர்கள் 'நஸ்க்கை'-(முன்னர் வந்த சட்டமொன்று பின்னர் வந்த சட்டமொன்றினால் மாற்றப்படுதல்-) அடைக்கலமாகக் கொண்டுள்ளனர். நல்லறிஞர்களின் விளக்கத்தினடியாக அமைந்த நாம், சென்ற இதழில்-குறிப்பிட்ட இக்கண்ணோட்டம் எடுத்ததற்கெல்லாம் 'நஸ்க்' என்று சொல்வதிலிருந்து எம்மைப் பாதுகாக்கக் கூடியதாகவுள்ளது.

ஆனால், எழுமானங்களை வைத்துக் கொண்டு நஸ்க்கை உறுதிசெய்ய முடியாது. ஒன்றுக்கொன்று முரண்பாடாகவுள்ள இரண்டு ஹதீஸ்களிலும் எது காலத்தால் முந்தியது, எது பிந்தியது? என்பதை அறிந்தால் மாத்திரமே பிந்திய ஹதீஸின் சட்டத்தால் முந்திய ஹதீஸின் சட்டம் மாற்றப்பட்டது என்று தீர்ப்பு வழங்க முடியும்.

'நஸ்க்' என்று கூறப்பட்ட அதிகமான ஹதீஸ்கள் நஸ்க் அல்ல என்பதே வாஸ்தவமாகும். உண்மையில் முரண்பாடாக வந்துள்ள இரண்டு ஹதீஸ்களும் சந்தர்ப்ப சூழ்நிலைகளை கருத்திற்கொண்டு நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களினால் நாட்டுத் தலைவர் என்ற வகையில் இரு வேறுபட்ட சந்தர்ப்பங்களில் கூறப்பட்ட தீர்ப்புகளாகும். காரணங்கள் மாறும்போது அவற்றினடியாகப் பிறந்த சட்டங்களும் மாறும்.

உழ்ஹிய்யா இறைச்சியை சேமித்துவைக்க வேண்டாம் என நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் தடுத்ததையும் பின்னர் சேமிப்பதற்கு அனுமதி அளித்ததையும் சில இமாம்கள் இக்கண்ணோட்டத்திலேயே நோக்குகின்றனர். பின்னர் வந்த அனுமதியை அவர்கள் 'நஸ்க்' என்று கூறவில்லை. இதனை நான் 'ஷரீஅத்துல் இஸ்லாம்' என்ற எனது புத்தகத்தில் தெளிவுபடுத்தியுள்ளேன். மதீனா மக்கள் பசிபட்டினியில் உழன்று, இறைச்சியின்பால் தேவையுடையவர்களாக இருந்த நிலையில் வறியவர்களான விருந்தினர்கள் அவர்களிடம் வந்திருந்தபோதே ஹஜ்ஜுப் பெருநாள் தினத்திலிருந்து மூன்று நாட்களுக்கு மேல் உழ்ஹிய்யா இறைச்சியை சேமித்துவைக்க வேண்டாம் என நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் தடுத்தார்கள். முஸ்லிம் சமூகத்தின் தலைவர் என்ற வகையிலும் இது குறித்து இமாம் குர்துபி அவரது தப்ஸீரில் விளக்கியுள்ளார்:

"காரணம் நீங்கியதால், சட்டம் நீக்கப்பட்ட வகையினுள்ளேயே அது அடங்கும். நஸ்க் என்ற வகையில் அதன் சட்டம் மாற்றப்படவில்லை. நஸ்க் மூலம் சட்டம் மாற்றப்படுவதற்கும் காரணம் நீங்கியதற்காக சட்டம் நீக்கப்பட்டதற்கும் இடையில் வேறுபாடுண்டு. நஸ்க் மூலம் மாற்றப்பட்ட சட்டத்தைப் பொறுத்தவரை அதைக்கொண்டு ஒருபோதும் தீர்ப்பளிக்க முடியாது. ஆனால், காரணம் நீங்கியதற்காக நீக்கப்பட்ட சட்டத்தைப் பொறுத்தவரை காரணம் மீண்டும் மீளுமாயின் சட்டத்தையும் மீள நடைமுறைப்படுத்த முடியும். உழ்ஹிய்யா காலப்பிரிவில் வறிய மக்கள் ஓர் ஊருக்கு வருகைதந்து, அவ்வூர் மக்களும் உழ்ஹிய்யா மூலமே விருந்தினர்களின் தேவையை பூர்த்தி செய்யுமளவுக்கு ஏழைகளாகயிருந்தால் ரஸூல் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் செய்ததுபோல மூன்று நாட்களுக்கு மேல் அவ்வூர் மக்கள் உழ்ஹிய்யா இறைச்சியை சேமித்து வைக்கக் கூடாது என்ற தடையுத்தரவை பிறப்பிக்கலாம்"

(துப்ஸீருல் குர்துபி பாகம்12, பக்கம் 47, 48)

# பாதைமாறிய பயணம்

எம்.ஏ.பீ. வசீம் அக்ரம், புத்தளம்

தம்பி, பழய காட்போர்ட் இருக்கா, இருந்தால் தாங்க தம்பி என்ற குரல் கேட்டு திரும்பி பார்க்கிறேன். ஒரு நடுத்தர வயது மதிக்கத்தக்க ஒரு மனிதர் தலையில் தொப்பி சகிதம் என்னெதிரே நிற்கிறார்.

நானும் வீசுவதற்காக வைத்திருந்த கழிவுப் பொருட்களை கிளறி அங்கே. காணப்பட்ட ஓரிரு கார்ட்போர்ட்களை எடுத்துக் கொடுத்துவிட்டு, நாளை வாருங்கள் சேமித்து தருகிறேன் எனக் கூற எனக்கு நன்றி கூறி எடுத்துக் கொண்டு புறப்படுகிறார்.

அவர் போன பின்னர்தான் எனக்கு இவரை எங்கேயோ பார்த்த ஞாபகம் வந்தது. இதற்கிடையில் வாடிக்கையாளர் வரவே வியாபார நடவடிக்கையில் மூழ்கிறேன்.

எனது வியாபார நடவடிக்கைகள் கொஞ்சம் ஓய்வுக்குவரவே நான் திரும்பவும் அவரை ஞாபகப்படுத்த முனைகிறேன். இப்போது அவர் என் மனக்கண்ணெதிரே தோன்றுகிறார். அவர் முன்பு ஒரு போதைப்பொருள் பாவனையாளர்.

அவரை பலமுறை என் கடைத்தெருவிலும் ஏனைய நகர் புறங்களிலும் கண்டுள்ளேன். எந்நேரமும் சதா குடிபோதையிலேயே காலத்தை கழித்துக்கொண்டிருந்தவர். அவரா இந்த மாற்றத்தோடு, எப்படி? என்றவாறெல்லாம் என் மனம் சிந்தித்தது. அவரைப்பற்றி அவரின் நெருங்கிய உறவுகளிடம் விசாரித்தபோது சில விடயங்கள் அறியக்கிடைத்தன.

அவர் ஒரு மீனவக் குடும்பத்தில் பிறந்தவர். குடும்பத்தில் ஒரே ஆண்பிள்ளை என்பதால் கொஞ்சம் அதிகமான செல்லத்தோடு வளர்க்கப்பட்டார். வீட்டில் ஏதேனும் கஷ்டம் என்றாலும் அவர் விரும்பியவை செய்து கொடுக்கப்பட்டன.

காலவோட்டத்தால் வாலிபப்பருவத்தை அடைந்த அவர், பாடசாலையில் பாடங்களில் சிறந்த பெறுபேறுகளையும் ஆசிரியர்களிடம் நல்ல மாணவன் என்ற பெறுபேற்றையும் பெற்றிருந்தார்.

இவருக்கென்று ஒரு நண்பர் கூட்டம். எங்கு சென்றாலும் நண்பர் கூட்டத்தினரோடே செல்வது வழக்கம். இந்நிலையில் தான் போதைப்பொருள் விற்கும் ஒரு குழு இவர்களோடு சங்கமித்தது. கொஞ்சம் கொஞ்சமாக இவர்களோடு நண்பர்களாகவும் இணைந்து கொண்டது அக்குழு.

மெது மெதுவாக ஓரிரு போதைப் பொருளை அறி[illegible]பத்தில் முற்று முழுதாக நிராகரித்தவர்கள் காலப்போக்கில் அவர்களின் ஆசை வார்த்தைகளுக்கு, ஆர்வக்கோளாறுகளுக்கு அடிமைப்பட்டு பயன்படுத்த தொடங்கினர். கடைசியில் பன்றியோடு சேர்ந்த கன்றும் மலம் தின்னும் கதையானது.

படிப்படியாக போதைப்பொருள் பாவனைக்கு அடிப்பணியவே அக்குழுவும் இவர்களுக்கு போதைப்பொருளை விற்பனை செய்ய ஆரம்பித்தது. தந்தை செலவுக்கு கொடுக்கும் பணம் போதாமையால் வீட்டில் கைவைக்கத் தொடங்கினார்.

வீட்டில் ஒவ்வொரு பொருட்களாக களவாடப்பட்டு போதைப்பொருளுக்காக செலவு செய்யப்பட்டது. இது, தனது வீடு என்ற நிலையிலிருந்து பக்கத்து வீடு, தெரு வீடு என படிப்படியாக ஊர் முழுவதும் திருடப்பட்டு போதைப் பொருளுக்காக செலவிடவும். நிலைமை முற்றி சிறை வாசம் செல்ல வேண்டிய நிலையுமேற்பட்டது. சில காலங்களுக்கு பிறகு சிறையிலிருந்து மீள்வருகை. திருமணம் செய்து வைத்தால் திருந்திவிடுவான் என்றவாறு வீட்டில் முடிவெடுக் கப்படுகிறது.

அயலவர்கள், தெரிந்தவர்கள் மூலம் பெண்பார்க்கும் படலம் ஆரம்பமாகிறது. தூரப்பிரதேசத்தை சேர்ந்த பெண்ணொருவரை திருமணம் பேசி முடித்து வைக்கிறார்கள். இரண்டு மாதங்கள் வாழ்க்கை சுமுகமாக நகர்கிறது.

தொழில், மீன் பிடிக்க கடலுக்கு செல்வதும் வருவதுமாக நகர்கிறது. வாழ்கைச் சக்கரம் இவ்வாறு சுழன்றுச் செல்லும் போதுதான் பழய குருடி கதவைத் திறடி என்றாற்போல் மீண்டும் போதைப்பொருள் பாவனை ஆரம்பமாகிறது.

இரவுநேரம் கடலுக்குச் செல்லும் சமயம் போதையரக்கன் மறுபடியும் கண்திறக்கிறான். இரவுநேர தனிமை என்பதால் அது இலகுவாக்கப்படுகிறது. வேதாளம் முருங்கை மரம் ஏறுகிறது.

நிலைமை இப்படியே தொடர்கிறது. குடும்பத்தை நடத்த போதிய வருவாயில்லாததால் மனைவி வீட்டுவேலைக்குப் போகிறாள். கணவன் செய்யும் தவறுக்கு மனைவி, பிள்ளைகள் என்ன பாவம் செய்வர். அவர்களுக்கும் வயிற்றுப்பசி இருக்கிறது.

(18ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சத்தான மதிய உணவு

நாம் நமது அன்றாட உணவுப் பழக்க வழக்கத்தை சரியாக வைத்திருந்தாலே ஆரோக்கியமான வாழ்க்கையை வாழமுடியும். அதைக் குறிக்கும் வகையில்தான் உணவே மருந்து என்று நம் மூதாதையர் குறிப்பிட்டிருந்தனர்.

அதிலும் குறிப்பாக, மதிய உணவை நாம் நல்ல முறையில் அமைத்துக்கொள்ள வேண்டும். குழந்தைகளுக்கும் சிறந்த மதிய உணவை செய்துகொடுக்க வேண்டும்.

ஏனென்றால், காலையில் பாடசாலைக்கும் அலுவலகத்துக்கும் செல்லும் அவசரத்தில் சமைத்த அல்லது ரொட்டி, பிஸ்கட் போன்ற எதையாவது ஒன்றை வேகமாக சாப்பிட்டுவிட்டு சென்று விடுகிறோம். சிலர் நேரம் இன்மையால் காலை உணவை முற்றிலுமாக தவிர்த்தே விடுகின்றனர். இது மிகவும் தவறு. காலை உணவை கட்டாயம் சாப்பிட வேண்டும். அதுதான் ஆரோக்கியத்துக்கு ஏற்றது.

காலையில் வெறும் பிஸ்கட், ரொட்டி ஜாம் சாப்பிடுபவர்கள் அதனை கொஞ்சம் மாற்றி, பிரட் சான்ட்விச் போன்றவற்றை சாப்பிட முயற்சி செய்யலாம். அதில், குடைமிளகாய், தக்காளி, வெள்ளரி, வெண்ணெய் போன்றவற்றை சேர்ப்பதால் மிகச் சிறந்த காலை உணவை கொடுக்க முடியும்.

அதேபோன்று, இரவில் சாப்பிட்டுவிட்டு உடனே உறங்கச் சென்று விடுகிறோம். எனவே, அந்த நேரத்தில் சத்தான உணவுகளை சாப்பிட முடியாமல் போகிறது.


இதனால், மதிய உணவைத்தான் மிக முக்கியத்துவம் கொடுத்து நல்ல முறையில் அமைத்துக்கொள்ள வேண்டியது அவசியமாகிறது.

அதாவது, ஒரு மதிய உணவில் பழங்கள், காய்கறிகள், தானியங்கள், பருப்பு வகைகள், பால் பொருட்கள் நிறைந்திருக்கலாம். இது சீரான உடல்வாகுடன் இருப்பவர்களுக்கு மட்டுமே பொருந்தும்.

அதிக உடல் பருமன் கொண்டவர்கள் இதில் பால் பொருட்களை தவிர்த்துவிடலாம்.

சோற்றுடன், காய்கறிகள், அவித்த கடலை போன்றவற்றை சாப்பிடலாம். சில சமயங்களில் தயிர் பச்சடி செய்து அதில் கரட், வெங்காயம், வெள்ளரி என பிடித்த காய்கறிகளை சேர்த்துக் கொள்ளலாம். சோற்றுக்கு குழம்பு வைக்கும்போது கூடுதலாக மோர் அல்லது தயிரையும் இணைத்துக் கொள்ளலாம்.

அசைவ உணவு சாப்பிடுவோர் மதிய வேளையில் ஒரு முட்டையை உணவில் சேர்த்துக் கொள்ளலாம். குழந்தைகளுக்கும் அது பிடித்தமான உணவாகவும் சத்தானதாகவும் அமையும்.




காய்கறிகளை சமைக்க நேரமே இல்லை என்று கூறுபவர்கள் கூட, வெறும் காய்கறிகளை நறுக்கி உப்பு போட்டு அவித்து, அதில் மிளகுத்தூள் தூவியும் சாப்பிடலாம்.

காய்கறிகளை பச்சையாக சாப்பிடுங்கள் என்று சிலர் கூறுவர். ஆனால், இப்போது காய்கறிகளை விளைவிக்க போடும் உரங்கள் காரணமாக காய்கறிகளை நன்கு கழுவி, சமைத்து சாப்பிடுவதே சிறந்தது.

# அப்பிளை வைக்காதே!

உருளைக்கிழங்குக்கு பக்கத்தில் அப்பிளை வைக்கக்கூடாது. ஏன் தெரியுமா? ஆப்பிள் எத்திலின் வாயுவை வெளியிடுகிறது.

இந்த வாயு உருளைக்கிழங்கின் சுவையைக் கெடுத்துவிடும். மேலும் அந்த வாயுவினால் அதிக நாட்கள் வரை கெட்டுப்போகாமல் இருக்கும் தன்மையையும் உருளைக்கிழங்கு இழந்துவிடுகிறது. அதுமட்டுமல்ல, உருளைக்கிழங்கின் பக்கத்தில் அப்பிளை வைத்தால் அப்பிளின் சுவையும் தன்மையும் கெட்டுப்போகும்.



# ஆரோக்கிய தேசம்

தொகுப்பு: எஸ். பாயிஸா அலி

மாவனல்லை எம்.வய்.எப். சியாமா மெய்யியல் உளவியல் துறை பேராதனைப் பல்கலைக்கழகம்

## சமூக உளவியல்

தொடர் 17

நம்முடைய சிந்தனை, நினைவுகள், நாம் நினைத்துச் செயற்படக்கூடிய அனைத்திற்கும் மூளையே காரணமாக இருந்து செயல்படுகிறது. மனித மூளையின் செயல்களில் தாக்கங்களை உண்டுபண்ணும் காரணிகளை நாம் இனங்கண்டு கொண்டால் ஞாபகமறதி, சிந்திக்கும் திறன் குன்றிய நிலை, சோம்பேறித்தனம் என்பனவற்றை நிவர்த்தி செய்து கொள்ளலாம்.

இவற்றின் முக்கிய காரணிகளாக கருதப்படுபவை தகுந்த போசாக்கின்மை, மூளை நரம்புகளில் ஏற்படும் சிதைவு, உற்சாகமின்மை, உடற்பயிற்சியின்மை என்பனவாகும். இவற்றிற்கான காரணங்களைக் கண்டறிந்து அவற்றிற்கேற்ற தகுந்த பரிகாரம் செய்வதன் மூலம் ஞாபக சக்தியையும் சிந்திக்கும் திறனையும் வளர்த்துக்கொள்ள முடியும்.

# ஞாபகமும் மறதியும்

இவற்றுடன் ஆர்வமின்மை, முயற்சி யின்மை, தாழ்வு மனப்பான்மை, எதிர்மறை எண்ணம், பயம், அதிர்ச்சி, மனச்சோர்வு, துக்கம், வெறுப்பு போன்ற உணர்ச்சி மற்றும் மனபாதிப்புகள், மன ஒருமையின்மை, கவனக்குறைவு, தப்பிக்கும் மனோபாவம், கடந்தகாலச் சிந்தனைகளில் அல்லது எதிர்காலக் கனவுகளில் மூழ்குதல். புகை, மது, போதைப் பழக்கங்கள், உடல்நலக் குறைபாடுகள், உடல்நோய்கள் (குறிப்பாக, தொற்றாத வகை நோய்கள் வலிப்பு, இரத்தசோகை, உயர், குறை தைரொய்ட் சுரப்பு, மாதவிடாய் நிற்கும் கால ஹோர் மோன் பிரச்சினைகள்) என்பன மனிதனின் சிந்திக்கும் திறனை அதிகம் பாதிக்கின்றன.

நாம் படிக்கும் தகவல்களை முறைப்படி தொகுக்காவிட்டால் தேவையானபோது வெளியே எடுப்பதும் கடினம்.

மனிதர்களுக்கு நினைவாற்றல் குறைந்து வருவதற்கு மிக முக்கிய காரணம் கவலைகளே. இரத்த ஓட்டம் குறையும் நோயால் நேரடியாகவோ, மறைமுக மாகவோ மூளைக்கு சரியானபடி இரத்தம் கிடைக்காததும் முக்கிய காரணமாகும். மூளை சோர்ந்துவிடாமல் கவனித்துக் கொண்டால் நினைவாற்றல் நன்றாக இருக்கும். எமது மனதை எந்தளவுக்கு ஒருமுகப்படுத்த முடியுமோ அந்தளவுக்கு எமது ஞாபகசக்தியையும் அதிகரிக்க முடியும்.

**நினைவாற்றலின் வகை**

**01. குறுகியகால நினைவாற்றல்**

எமது மூளையில் அத்தனை தகவல்களும் தொடர்ந்து சேமித்து வைக்கப்படுவதில்லை. அவசியமான காலத்திற்கு மட்டுமே அந்த தகவல்கள் மூளையில் சேமித்து வைக்கப்படுகின்றன. பணி முடிந்ததும் அந்த தகவல்கள் மறக்கப்பட்டுவிடுகின்றன. இது குறுகியகால நினைவாற்றல் எனப்படும்.

**02. நீண்டகால நினைவாற்றல்**

எம்முடைய மனதை மிகவும் கவர்ந்தவை அல்லது பாதித்தவை மீண்டும், மீண்டும் சொல்லிப் பார்த்தவை, நாம் செய்யும் தொழிலுக்கு தேவையானவை எமது மூளையில் நீண்டகால நினைவுகளாக பதிந்துவிடுகின்றன.

எமது மூளை பல செய்திகளையும் தகவல்களையும் சேமித்து வைத்துள்ளது. அவற்றுடன் புதிய தகவல்களையும் சேர்த்து பாதுகாக்கிறது. பல ஆண்டுகளாக அந்த தகவல்கள் வெளிக்கொணரப் படாமல் போனால் சேமிக்கப்பட்டுள்ள தகவல்களுக்கிடையில் அவை புதைந்து போகின்றன.

நீண்டகால நினைவுகளில் இருந்து தகவல்களை மீட்டெடுப்பதற்கு மூளை சிலவேளை சிரமப்படுவது அதனாலேயாகும். நீண்டகாலத்தின் பின்னர் நாம் சந்திக்கும் நபரின் அல்லது சிறுவயது நண்பரின் பெயர் ஞாபகத்துக்கு வராமலிருப்பதை (ஆனால் அவரின் பெயர் நுணி நாக்கில் இருப்பது) இதற்கு உதாரணமாக குறிப்பிடலாம்.

**நினைவாற்றல் நன்றாக இருப்பதற்கு தேவையான மனோநிலை**

**01. தன்நம்பிக்கை**

நினைவாற்றல் தொடர்பில் எமக்கு தன்நம்பிக்கை அவசியமாகும். நினை வாற்றல் என்பது மூளையின் திறமை யாகும். இதனை பயிற்சியாலும் முயற்சி யாலும் வளர்த்துக்கொள்ள முடியும். என்ற தன்நம்பிக்கை அவசியமாகும்.

**02. ஆர்வம்**

ஒரு விடயம் தொடர்பான ஆர்வமும் அவ்விடயம் தொடர்பில் ஞாபகசக்தி ஏற்பட காரணமாக அமையும்.

**03. செயல் ஊக்கம்**

தேவையை, அவசியத்தை நன்றாக உணர்ந்த விஷயங்கள் நன்றாக பதியும்.

**04. விழிப்புணர்வு**

மனம் விழிப்பு நிலையில் இருந்தால் எமது கவனமும் ஒருமைப்பாடும் மிகச் சிறந்ததாக இருக்கும். இதற்கு யோகாசனம், தியானம், சமய வழிபாடுகள் துணைபுரியும்.

**05. புரிந்துகொள்ளல்**

புரிந்துகொண்ட விடயங்கள் மனதில் பதியும்

**06. உடல் ஆரோக்கியம்**

அதிகாலை நேரத்தில் வெறும் வயிற்றில் பதினைந்து கருஞ்சீரக விதை களை மென்று தின்றுவருதல் வேண்டும்.

தூதுவளை, கீரையை, குழம்பு மற்றும் பொரியல் செய்து வாரத்துக்கு ஒருதடவை சாப்பிட்டுவந்தால் மூளைக்கு வலிமை கிடைக்கும்.

பசுமையான வில்வ இலையை அரைத்து சாறெடுத்து குடித்துவந்தால் ஞாபகமறதி நீங்கி நினைவாற்றல் அதிகரிக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாட்டுப்புறவியல்

ஏ.எம்.எம். ஸியாத் - இறக்காமம்

கிழக்குத் தென்கோடி

(சென்ற இதழின் தொடர்)

## நாட்டார் பாடல்கள்

நாட்டாரியலில் பிரதான இடம் வகிக்கும் அம்சமாக பாடல்கள்/ கவிகள் காணப்படுகின்றன. மனித வாழ்க்கைக் கட்டங்கள் முழுவதையும் பிரதிபலிக்கும் வண்ணம் இவை காணப்படுவதே இதற்கு காரணமாகும். மனிதன் இவ்வுலகில் காலடிவைத்தது முதல் மரணமடையும் வரையான எல்லா நிலைகளுக்கும் கவிகள் ஊற்றெடுத்துப் பாய்ந்தன.

நாட்டார் பாடல்களை, வாய்மொழிப் பாட்டு, ஏடறியாய் பாடல், கிராமத்துப் பாடல், நாட்டுப் பாடல், நாட்டுக்கவி, நாட்டுப்புறப் பாடல், எழுதாப் பாடல் எனப் பல்வேறு பெயர்களாலும் அழைக்கப்பட்டபோதும் நாட்டாரியலை ஆராய்வோர், 'நாட்டார் பாடல்' என்ற தொடரையே கையாள்வதைக் காணமுடிகின்றது.

நாட்டார் பாடல்களை மனித மனத்தினின்றும் வெளிப்படும் உணர்ச்சிப் பிரவாகமாகக் கொள்ளலாம். நாளாந்தம் பேசும் பேச்சுத் தொடர்களும் உவமைகளும் செப்பனிடப்படா மொழிவடிவங்களும் ஓசை நயமும் வெளிப்படும் உணர்ச்சிக்கு வலுச்சேர்க்கின்றன.

கிராமத்து மக்கள் என்றாலே, இயற்கையோடு ஒன்றியவர்கள் என்றுதான் பொருள்கொள்ள வேண்டும். இயற்கையின் ஈடுபாடும் இயல்பான அறிவும் அனுபவப் பேறுகளும் நாட்டார் பாடல்களை வெளித்தள்ளின எனலாம்.

எங்கோவோர் மூலையில் ஒருவன் பாடிய பாடல் வாய்மொழி வாய்மொழியாகப் பரம்பரை பரம்பரையாக கொண்டுவரப்பட்டு இவ்வியல் வளர்ந்து வந்துள்ளது. பரம்பரை ரீதியான வாய்மாறுகைகள் பாடல்களில் கூட்டல் குறைப்புகளைச் செய்தபோதும் அதன் உண்மை ஓசை வடிவம் குன்றிவிடாத வகையில் அது காணப்படுவது சிறப்பம்சமாகும். இதற்கு ஒரு சிறிய உதாரணத்தைப் பார்ப்போம்.

முறைக்கார மச்சான் ஒருவரை திருமணம் செய்ய விரும்பியிருக்கும்போது, அந்த முறைக்கார மச்சானோ வேறொரு பெண்ணை விரும்பியதைக் கேள்வியுற்று மாமன் மகளொருத்தி (மச்சி முறைக்காரி) இப்படிப்பாடுகிறாள்.

*ஓடையில போற தண்ணி*

*தும்பிவிழும்*

*தூசிவிழும்*

*ஊட்டுக்கு வாங்க மச்சான்*

*நல்லதண்ணி நாதாரன்.*

இப்பாடலில் இடம்பெறும் நல்லதண்ணி என்ற தொடருக்குப் பதிலாக 'குளுந்த தண்ணி' என்னும் தொடரைப் பயன்படுத்தி சிலர் பாடுகின்றனர். ஆனால், ஓசை ஒரே விதமாகவே காணப்படுகின்றது. நாட்டார் பாடல்களைப் பலரும் பலவிதமாக வகைமை செய்துள்ளனர். அவர்களின் தேடல்களுக்குட்பட்ட பாடல்களை வைத்து இவ்வகைமைகள் இடம்பெற்றுள்ளன என கருதமுடியும்.

இதுபோன்றே தென்கிழக்குப் பகுதி முஸ்லிம்களால் வழங்கப்படும் பாடல்களையும் பின்வருமாறு வகைமை செய்யலாம்:

இறைநம்பிக்கைப் பாடல்கள் / ஏகத்துவப் பாடல்கள்

தலாட்டுப் பாடல்கள்

விளையாட்டுப் பாடல்கள்

தொழிற்பாடல்கள்

காதல் பாடல்கள்

வாதுப் பாடல்கள்

நையாண்டிப் பாடல்கள்

பொல்லடிப் பாடல்கள்

வேறு பாடல்கள்

### இறைநம்பிக்கை பாடல்கள் / ஏகத்துவ பாடல்கள்

இறைவன் ஏகன், அவனுக்கு நிகர் அவனே. என்றே கோட்பாடும் நம்பிக்கையும் கொண்ட முஸ்லிம்களின் வாய்வழிப் பாடல்களில் இறைநம்பிக்கை வெளிப்பாடுகள் இடம்பெறுவது அபூர்வமான விடயமன்று.

இங்கே ஐந்தாறு பெண்பிள்ளைகளைப் பெற்ற பெண்ணொருத்தி தனது கணவனை இழந்த நிலையில், தனது குமர் பிள்ளைகளின் எதிர்காலம் பற்றி இறைவனிடம் முறையிட்டு நிற்கும் அழகையும் அவளது நம்பிக்கையையும் வெளிப்படுத்துகின்ற நாட்டுப் பாடலொன்றைப் பார்ப்போம்:

அல்லாஹூ என்று

அனுதினம் நானிருந்து

பதறி அழுதன் மக்காள் - ஒங்கட

பங்குகள நான் தேடி

நல்லடியார்களை இறைவன் சோதித்துப் பார்ப்பதும் அதில் அவர்கள் வெற்றிகொள்ளும் விதமும் அதற்காக இறைவன் வழங்கிய பரிசுகளும் பற்றி வரலாறுகள் ஊடாக அறிகின்றோம். அதேபோன்று, ஒரு பெண்ணிற்கு திருமணம் கைகூடி சில சமயங்களில் அது நிறைவேறாமலே போவதுமுண்டு. இது இறைவனின் சோதனை என அவள் ஏற்றுக்கொள்ளும் மாண்பினையும் பக்குவத்தையும் மற்றொரு பாடல் புலப்படுத்தி நிற்கின்றது.

*ஆதி பெரியவனே*

*எங்கள் ஆளும் ரகுமானே*

*சோதினகாரா*

*பொருந்தினண்டா ஒண்ட சோதனைய.*

திருமண பந்தத்தின் விளைவுகளில் ஒன்று குழந்தை. திருமணமான பெண்கள் குழந்தைப் பாக்கியத்தை எதிர்பார்ப்பதும் தனது தாய்மையை வெளிப்படுத்தவும் விரும்புவது மனித இயல்பே. ஆனால், இந்தப் பெண்ணிற்கு அது வெறும் கனவாகவே ஆகிவிடுகிறது. இறைவனை நோக்கி அவளது கைகள் உவர்கின்றன. அவளது நாவில் சூழலுடன் இயைந்த வார்த்தைகள் உந்திக் கிளம்பி வருகின்றன.

# புரூணையில் சில நாட்கள்...

தொடர்-14



——பஷீர் அலி
kinniyabasheerali@gmail.com

கெபாவா துலி யாங் மஹா முலியா பாதுகா சேரி பாகிந்தா சுல்தான் ஹாஜி ஹஸ்ஸனல் பொல்கியா அல் முயிஜாதீன் வதாவுல்லா இப்னி அல்மார்ஹம் சுல்தான் ஒமர் அலி சைய்புதீன் சாஅதுல் காய்ரி வாத்தியன் ஜிசிபி, ஜிசிஎம்ஜி (கொஞ்சம் மூச்சு வாங்கிக்குங்க)

என்னடா இது மந்திரித்து ஊதிவிட்டு மூச்சுவாங்க சொல்கிறார் என்று பார்க்கிறீர்களா? இது புரூணை சுல்தான் ஹஸ்ஸனல் பொல்கியாவின் முழுப் பெயருங்க!

1946 ஜூலை 15 ஆம் திகதி பண்டார் செரி பகவான் பிரதேசத்தில் சுல்தான் ஒமர் அலி ஸைபுடீனுக்கு மூத்த மகனாகப் பிறந்தவர்தான் ஹஸனல் பொல்கியா. தந்தையின் மரணத்தை அடுத்து, 1968 ஆகஸ்ட் முதலாம் திகதி புரூணையின் 30 ஆவது சுல்தானாக ஹஸ்ஸனல் பொல்கியா சத்தியப் பிரமாணம் செய்துகொண்டார்.

மலேசிய கோலாலம்பூர் விக்டோரியா கலா நிலையத்தில் தனது ஆரம்பக்கல்வியைத் தொடர்ந்தார் சுல்தான் பொல்கியா. பின்னர், 1967 இல் புரூணை சந்துரிஸ்ட் ரோயல் இராணுவ பாடசாலையில் உயர் கல்விக்காக இணைந்துகொண்ட அவர், பட்டப்படிப்பை பூர்த்தி செய்யும் சில மாதங்களுக்கு முன்னரே அங்கிருந்து வெளியேறினார்.

இங்கிலாந்து ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகம் உட்பட ரஷ்யா, ஸ்கொட்லாந்து, தாய்லாந்து, இந்தோனேசியா, சிங்கப்பூர், லண்டன் உள்ளிட்ட நாடுகளின் புகழ்பெற்ற பல பல்கலைக்கழகங்கள் கௌரவ கலாநிதிப் பட்டங்களை வழங்கியுள்ளன.

மூன்று திருமணங்கள் முடித்துள்ள சுல்தான் பொல்கியா தற்போது, முதல் மனைவியுடன் மாத்திரமே வாழ்கிறார். அனாக் ஸலீஹா (Anak Saleha) என்ற முதல் மனைவி மூலம் அவருக்கு ஆறு பிள்ளைகள் உள்ளனர்.

ரோயல் புரூணை விமானத்தில் சிப்பந்தியாகக் கடமையாற்றிய ஹாஜா மரியம் என்பவரை இரண்டாவது மனைவியாகத் திருமணம் செய்துகொண்ட சுல்தானுக்கு, அவர் மூலம் நான்கு பிள்ளைகள் கிடைத்தனர். பின்னர் இவரை 2003 இல் விவாகரத்து செய்தார்.



அதன்பின் 2005 இல் மலேசிய தொலைக்காட்சி நிறுவனமொன்றில் தயாரிப்பாளராகக் கடமையாற்றும் 33 வயது இளம் யுவதியான அஸ்ரினாஸ் மஸ்ஹர் ஹாகிம் என்ற பெண்ணை மூன்றாவது மனைவியாகக் கரம்பிடித்தார். இவரையும் கடந்த 2010 இல் விவாகரத்து செய்துவிட்டார். (புரூணைக்காரர்களுக்கு ஊடகவியலாளர்கள் என்றாலே ஓர் அச்சம். அதற்கான காரணத்தை பின்னர் சொல்கிறேன் என்று ஏற்கனவே கூறியிருந்தேன் நினைவிருக்கிறதா? ஓர் ஊடகவியலாளராக புரூணைக்குள் நுழைந்து மன்னரையே கவிழ்த்துவிட்டால் அச்சம் இருக்காதா என்ன?) அவர் மூலம் இரண்டு குழந்தைகள் உள்ளனர். அமீரா என்ற அவரது கடைசி மகளுக்கு இப்போது 4 1/2 வயது.

புரூணை சுல்தானிடம் 15 பில்லியன் யூரோ சொத்துள்ளது. ஒரு காலத்தில் 20 பில்லியனுக்கும் அதிக சொத்துடன் உலகிலேயே முதல் பணக்காரராக இருந்தார் சுல்தான்.

அவர் எப்படி செல்வச் செழிப்பில் மிதக்கிறார் என்பதை உங்களுக்கு தெரியப்படுத்த ஒருசில உதாரணங்களை மட்டும் சொல்கிறேன்.

2 லட்சம் சதுர அடி பரப்பளவான சுல்தானின் அரண்மனையில் 1788 அறைகள் இருக்கின்றன. பெரும்பாலான அறைகளில் தங்கத்தால் இழைக்கப்பட்ட சுவர் மறைப்புகள் தொங்குகின்றன. 257 குளியலறைகள்; அந்தக் குளியலறைகளில் தங்கக் குழாய்கள் பொருத்தப்பட்டுள்ளன. (இப்போதைக்கு அந்த மாளிகை பற்றி இவ்வளவு போதும், சுல்தானின் மாளிகைக்கு அழைத்துச் சென்று சாப்பாடே போடுகிறேன் சற்றுப் பொறுங்கள்)

சுல்தானிடம் மொத்தம் 3,000 - 5,000 கார்கள் உள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது. அவரிடம் உலகில் மிக அரிதான 500 ரோல்ஸ் ரோய்ஸ் கார்கள் உள்ளதாக கின்னஸ் புத்தகம் பதிவு செய்துள்ளது. அதில் முழுக்க வெள்ளித்தகடுகளால் செய்யப்பட்ட கார்களும் உள்ளன.

சுல்தான் தனது தனிப் பயன்பாட்டுக்காக தங்கத்தால் இழைக்கப்பட்ட போயிங் 747-400 விமானம் ஒன்றையும் ஆறு சிறு விமானங்களையும் இரண்டு ஹெலிகொப்டர்களையும் வைத்திருக்கிறார். போயிங் விமானத்தில் 400 பேர் பயணம் செய்ய முடியும். அந்த விமானம் முழுக்க நட்சத்திர விடுதியின் அனைத்து வசதிகளையும் கொண்டிருக்கின்றன என்றால் பார்த்துக் கொள்ளுங்கள். இந்த பறக்கும் தங்க மாளிகை பெரும்பாலும் சும்மாதான் இருக்கும். சுல்தான் எங்காவது நாடு கடந்து சென்றால் மாத்திரமே எழுந்து பறக்கும். நீங்கள் புரூணை விமான நிலையத்தில் போய் இறங்கியதும் அந்த விமானத்தைக் கண்டுகொள்ளலாம்.

இன்னொரு ரகசியம் தெரிமா உங்களுக்கு...?

தொடரும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முறையீடு

லைற்ஹவுஸிற்கு சற்றுத் தொலைவில் தோணிகள் அலைக்குள் ஆடின. கரை தட்டும் அலைகளுக்கும் மனிதாபிமானம் இருக்கவில்லை கால்களை நனைக்காமல் மீளவும் திரும்புகின்றன. புதைமணலில் சனங்கள் முளைத்தன. தென்னங்காலைக்குள் ஆங்காங்கே மீன்வாடிகள். மீன்கள் சிதைத்த வலைகளை பின்னிக் கொண்டிருந்தனர் சிலர். தோணியைச் சுற்றி தண்டயல்மார் வட்டக்களரி போட்டனர். சிறுவர்கள் பருவங்கடக்காத இளநீர்க் குலைகளை உறிஞ்சிக் கொண்டிருந்தனர். பிள்ளைகள் கூத்தாடும் களமாய்க் கிடந்தது கடல்.

மாயவலைத் தோணியைக் கடலுக்குள் தள்ளுவதற்காக தீப்பந்தத்தை கொழுத்திக் கொண்டிருந்தான் ஹிதாயத். தாய்வலையைச் சிலர் இழுத்துத் திரிந்தனர். கடற்கரைக்குச் சற்று கண்தெரியும் தூரந்தான் காவலரண். அது இப்போது இயங்குவதில்லை. முட்கம்பிகள் சுருண்டு கருகின. புற்கள் தன்பாட்டிற்குச் சடைந்து காவலரண் வளவினை ஆக்கிரமித்தன. சல்லடை போட்டுத் துளைத்த சுவர்கள் வரலாற்றைச் சொல்லிக்கொண்டன. குடியிருப்புக்கள் தனிமையைத் தந்தன. இடைக்கிடை மீன்வாடிக்குள் தண்டயல்மார் மணலில் எறியப்பட்ட கருவாடுகளுக்கு காவலிருந்தனர். அகன்ற பீப்பாவிற்குள் மீன்களையிட்டு உப்பை நிரப்பிக் கொண்டிருந்தனர். இரவில் தீப்பந்தம் செருகி கடலுக்குச் சென்றவர்கள் கரை தட்டினர். பிடிக்கப்பட்ட மீன்களோடு ஹிதாயத்தின் தோணியும் ஒதுங்கியது. ஆழிக்கடலும் பொச்சிப்போய்விட்டது. முன்பெல்லாம் வலைக்குள் மீன்பாட்டம் துள்ள சுமக்க முடியாத மீன்களை காசாக்கிய காலம். பாறூக்கின் சர்பத் கடை அப்போது வர்ணங்களால் ஜொலிக்கும் தாகம் தணிந்த பொழுதுகள். இப்போது வெறுங்கையோடு முணுமுணுத்தான். கண்ணீர் உப்பாகி கடலையும் மிஞ்சியது.

அடம்பன் கொடியும் சப்பாத்தி முற்களும் இக்கடல் வெளியை ஆட்கொண்டன. அதன் வேர்களின் சின்னச் சின்ன பொந்துகளுக்குள் எலிகள் உரிமை கொண்டாடி பயமுறுத்தியதும் இராவணன் மீசைக் கொடி பாதங்களுக்குள் சிக்கி மண்கோபுரம் உடைத்து சிரித்ததும் ஞாபகம். காவலரண் முன்புறம் அரசமரம் கிளைபரப்பி நிழல் தந்தது. புன்சிரிப்புடன் முகப்பிரகாசம் கொள்ள புத்தர் சம்மாரம் கோரியிருந்தார் . வரண்டு கிடந்தது நிலம். சில ஈனக் கொடுமைகள் நொடிக்கு நொடி உச்சங் கொண்டன. முடக்கு மரங்களாய் பிரயோசனமற்று சிலர் முளைத்தனர், அச்சம் உறைந்து கசிந்தது. இறையில்லங்களில் வரங்கேட்பதற்கு அஞ்சினர். ஆள்வெறி கொதிகொண்டது. எல்லா சாமங்களையும் நகர்த்துவதற்கு கடுந்துயராயிற்று.



எஜமானர்களின் கரம் ஓங்கியிருந்தது. ஆனாலும் அப்பாவி மானுடர்கள் தங்கள் அஹிம்சையில் சற்றும் தளரவில்லை. அநீதங்களால் வழிந்து கொண்டிருந்தது பூமி.

தொப்பியும் நெற்றியில் பதிக்கப்பட்ட தொழுகைத் தடமும் எங்கள் வரலாற்றுக் கோடுகள், பிறைக்கொடி சுமந்த மானுடர்கள். மண்ணை முத்தமிடுவதற்கு வழிவிடுங்கள். இருகரங்ளையும் வானுக்கு உயர்த்தியபடி திரண்டனர்.

நா தழுதழுத்த ஈனக் குரலில் வியர்வையில் குளித்து முண்டியடித்தனர். நீதி தேவனை நிலைநிறுத்துங்கள், கண்களைக் கட்டியிருக்கும் கறுப்புப் போர்வை விலக்கி நீதி தாருங்கள். கோஷத்தால் புத்தரின் முகம் துயரடைந்தது. புருவங்களை உயர்த்தி அவதானிக்கத் தொடங்கினார் புத்தர்.

சிறுசுகளை கக்கத்தில் இறுக்கியபடி தாய்க்குலம் சோர்வுற்றது. பெண்குலத்தின் குரலில் பரிதாபமிருந்தது. நாம் ஆதமுடைய மக்கள். நாங்கள் பாதங்களில் சுவர்க்கம் சுமப்பவர்கள். மானத்தோடு ஈமானியச் சக்கரத்தை உருட்டுபவர்கள். இறைவா! எம்மைத் தீண்டும் உள்ளங்களுக்கு வழிகாட்டு... பெண்களின் முறையீடுகளாள் உள்ளம் உருக்கியது.

"என்ன ஹிதாயத், மீன் படலையா...?"

"இல்ல, கொஞ்சம் கறிப்பாட்டிற்கு அணஞ்சிது. இப்பதான் பங்குபோட்டுட்டு வாறன். இண்டைக்கும் தோணி தள்ளல்ல. இந்தச் சனங்கள் பரிதாபமா இருக்கக்குள்ள எப்புடி கடலுக்க போற? அல்லாட மாளிகை போறத்துக்கே கஷ்டமாயிருக்கு. எத்தன வழிமறிப்புகள்"

என்றவாறு ஹிதாயத் நிறை மதியத்தைக் கடந்து உப்புப் படர்ந்த மேனியுடன் சென்று கொண்டிருந்தான். மயிர்க்கணை சிலிர்த்த மீன்வாடிக்குள் நகர்ந்தபடி என் பாதங்கள்...

சிகரத்தின் விளிம்பில் அமர்ந்துகொண்டு தன் மகிமை பற்றி அழைத்தார் புத்தர். சமாதானப் புறாக்களை பறக்கவிட்டார். அதனைப் பிடித்து சிலர் கூண்டிலடைத்தனர். பிரபஞ்சத்தை நினைத்து நொந்துகொண்டார்.

புத்தரைச் சுற்றிய மாந்தர்கள் முழங்காலில் அமர்ந்து கொண்டிருந்தனர். நிசப்தம் குடிகொண்டது. நெற்றிப்பொட்டும் குங்குமத்தோடும் இன்னும் சிலர் ஒப்புவிப்பதற்காக குழுமினர். வாயால் சொல்லவும் எஞ்சியவைகளை ஓலைகளில் செதுக்கிக்கொண்டும் அமர்ந்தனர். புத்தரின் உயரம் மறையுமளவிற்கு முறைப்பாட்டு ஓலைகள் உயர்ந்தன. விசாரிப்புகள் மிதந்தன. தங்களுக்கு நீதி கிடைக்கும் என மகிழ்ந்த மானுடர்களுக்கு புத்தரின் புன்முறுவல் ஆறுதலைத் தந்தது. நெருக்கீட்டு வெக்கையால் மீளமுடியாமல் சிலர் கண்களைக் கசக்கிக் கொண்டிருந்தனர்.

யாருமற்ற தனித் தீவில் விடப்பட்ட பிரமையால் வேற்றுக் கிரகத்திலிருந்து இறங்கி பூமியில் குடிகொள்ளும் விஷ ஜந்துகளைப்போல சில மனிதர்கள் குமுறித் திரிந்தனர். அவர்களிடம் நியாயம் இருக்கவில்லை. பூதங்களைப்போல சிலர் ஜாலம் புரிந்தனர். பேய்களின் ராச்சியமாக வசப்பட்டது சிலருக்கு.

முறையீடுகள் பல வடிவங்களாய் வியாபித்து நீண்டன. ஆர்ப்பரித்து இன்னும் குமுறிக் கொண்டிருந்தது கடல்வாய். எமது மடிக்குள்தான் எல்லாம் நிறையவேண்டும். ஏழு வானம், அகன்ற பெருநிலம் எமக்கே சொந்தம். ஒரு புல் பூண்டுகூட எமக்குத் தெரியாமல் எப்படி முளைப்பது? தொண்டை கிழியக் கூவினர். அப்பாவிகள் முதுகு துவண்டனர். எண்ணிலடங்காத முறையீடுகளை வாசித்துக் களைப்புற்ற புத்தர், சற்றுக் கணம் ஓய்வுநிலைக்காக தன் பாதங்களை நீட்டியபடி தலையில் கைவைத்து 'சமண' நிலையில் உறங்கத் தொடங்கினார். ஆனாலும் அநீதியின் குரல்கள் அவரை உறங்கவிடவில்லை. காவலரணின் பக்கமாயிருந்தும் அவரின் காதுகளை உசுப்பத் தொடங்கியது பேரிரைச்சல். பொழுதுகளை கோஷங்கள் விழுங்கிக் கொண்டிருந்தன. எல்லாமே புதுமையைத் தந்தன. கரைவலைத் தோணியை நம்பியிருப்பவர்கள் உலாவித் திரிந்தனர். அடிவானம் தொடும் கடலில் மீன்களின் வரவை பார்த்த வண்ணமிருந்தனர் சிலர். தமக்கான கருணைக்கண் செத்துக் கொண்டிருப்பதாக கூறி மக்கள் கையறு நிலையிலிருந்தனர். மண்ணை ஆண்ட எங்கள் தாத்தாக்கள் பாதம்பதித்து மறைந்த வாசம் இன்னும் அகலவில்லை. கோடான கோடி மேய்ச்சல் நிலங்களும் எமதானது. போடிமார்கள் அரப்பணத்தில் வளர்த்துவிட்டுச் சென்ற வாரிசுகள் நாங்கள். எங்கள் சொண்டுகளைக் கூவவிடாமல் ஏன் நசுக்குகிறீர்கள்? பொக்கைவாய்க்குள் முணுமுணுத்தனர் மூத்தம்மாக்கள்.

இருப்பு பற்றியும் மண்ணின் மகிமை பற்றியும் பாடினர். முதுசங்களின் சொத்து நாங்கள். ஆதிமானிடர்கள் நாங்கள்.

**-மருதமுனை விஜிலி-**

"எங்கள் தாத்தாவுக்கு யானைகள் இருந்தன. அவர்களின் பேரக் குழந்தைகள் நாங்கள்" என்ற நுஃமானின் 'தாத்தாமாரும் பேரர்களும்' நெடுங்கவிதைகளை தங்கள் வாசகங்களாக மாண்மியம் துலங்க பேசினர். உணர்வுகள் எனது தலைக்குள் விறைப்பாகி வார்த்தைகள் மௌனித்தன. வழமைப்போல கிறவல் தெருவினைக் கடந்து கடற்கரைக்கு சென்று கொண்டிருந்தேன். கரையில் ஒழித்து விளையாடும் சிறு நண்டுகளை பூக்கன் நெட்டியால் நண்பர்களுடன் புடை சூழ அடித்துக் கொண்டிருந்தான் ஹிதாயத். ■

## நிகழ் காலம்

சகோதர ஊடகவியலாளர் நாஸிக் மஜீத் இரண்டாவது குழந்தையையும் பிரசவித்துள்ளமை கண்டு மகிழச்சியடையாமல் இருக்க முடியாது. 'வெப்சைட்' ஆல் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள உலகில் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்ட பத்திரிகை சஞ்சிகைகளே இழுத்து மூடப்படும் அபாயத்தை எதிர்நோக்கியிருப்பதாக பேசப்படும் இச்சந்தர்ப்பத்தில்தான், நாஸிக் மஜீதை ஆசிரியராகக் கொண்டு வெளிவரும் 'நிகழ் காலம்' இரண்டாவது சஞ்சிகையும் வெளிவந்திருக்கின்றது.

கிண்ணியா பிரதேசத்திலுள்ள முக்கிய எழுத்தாளுமைகள் சிலரின் பங்களிப்புடன் நிகழ் காலம் வெளிவந்தாலும் ஒரு பிரதேச சஞ்சிகை என்ற வட்டத்துக்குள் சுருங்கிவிடாமல் தேசிய சஞ்சிகையாகவே இரண்டாவது இதழையும் வெற்றிகரமாக வெளியிட்டிருக்கிறார்கள். 44 பக்கங்களில் கலை, இலக்கிய, சமூகவியல் சார் உள்ளடக்கங்களை கச்சிதமாய் சொல்லியிருக்கிறார்கள்.

நேர்த்திமிகு வடிவமைப்பு, தளக்கோலம் என்ற ஒவ்வொரு விடயத்திலும் பார்த்துப் பார்த்து நேரத்தை செலவழித்து வெற்றியும் கண்டிருக்கிறார்கள், வெளியீட்டார்.

எழுத்துலகில் எதிர்கால நிச்சயத்தன்மையை பறைசாற்றி நிற்கும் 'நிகழ் காலம்' நிச்சயம் இன விரிசலின் இறந்தகால வடுக்களைத் துடைத்தெறியும் பாரிய பணியை செய்யும் என எதிர்பார்ப்போம்.

நிகழ் காலத்துக்கு நல்லதொரு எதிர்காலம் உள்ளது!

நிகழ் காலம்

காலாண்டு சஞ்சிகை

விலை ரூபா : 40.00

தொடர்புகள் :

The Editor
Nihal kalam
No. 23/18 Nijamiya Road,
Kinniya- 05
0777672383




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஒரு ஃபீனிக்ஸாய்

என் இரத்த நாளங்கள் துடிக்கிறன
எகிப்திய சகோதரனே!
உன் ஈமானிய பலத்துக்கு முன்
ஸீஸியின் இராணுவப் பலம் ?

நீ நிற்பது துப்பாக்கி முனைகளுக்கு முன்
உன் ஆத்மாவே
சுவைக்கிறது
இறைதிருப்தியையும் சுவனத்தையும்!

ஆளுமை மனிதர்
முர்ஸியை
இழந்த
எகிப்தியே மண்ணே!

உன் எதிர்கால கனவுகளையும்
வரலாற்றை
ஸீஸியின் இராணுவம்
கசக்கிய பூவாக்கியதோ?

தளராதே!
உன் சகோதரப் பலம்
ஒரு ஃபீனிக்ஸாய்
உன்னை மீட்டெடுக்கும்!

-ஸஹீரா அப்துல் மஜீத்-
இஸ்லாஹிய்யா வளாகம்

# மனிதன்தானே நானும் நீயும்


சும்மா நானும் சொல்லவில்ல
சோகம் விட்டுப் போகவில்ல
கல்லுக்குள்ளிருக்கும் தேரைபோல
கவலையெல்லாம் மனசுக்குள்ள

அக்கம் பக்கம் ஆளிருந்தா
அச்சம்விட்டுப் போய்விடுமா
அஞ்சு பத்து இல்லையென்னா
நொந்து மனம் வீழ்ந்திடுமா?

இன்று என்பது இன்றேதானே
நாளை என்பது நாளைதானே
நாளை ஒரு நாள் இன்றாய் மாறும்
இன்று அன்று நன்றாய் ஆகும்

பந்தம் விட்டுப் போனாயென்ன
சொந்தம் நூறு நாளை சேரும்
மண்ணில் வாழும் காலம்யாவும்
மனிதன்தானே நானும் நீயும்!

-கிராமத்தான் கலீபா-
பொத்துவில்



# பூவும் வண்டும்

ஒரு வனாந்தரத்தில்
பூவொன்றின்
மனம் கனக்கிறது
பற்றைக் காடுகளெல்லாம்
பற்றியெரிகிறது

வண்டுகளோ
கம்பீரமாய் மேய்ந்தாடுகிறது
பூக்களோ
வாசம் வீசி
காலம் கடத்தி
கருகிச் சாகுறது.

பூக்கள்
மென்மையாய்ப் பிறந்தது
குற்றமா,
வண்டுகள்
வன்மம் செய்வதுதான்
அதன் ஈடேற்றமா...?

பூவில் தேனருந்த
வண்டுக்கெதற்கு
கைக்கூலி
பூ மென்மையாய்
பிறத்தல்தான் குற்றமா?

- ஏ. முஹம்மத் பாஹிஸ் -



# உயிர்மொழி

# ஒரு கொள்கை

இயற்கையின் பதிவேடுகள் மாத்திரம்
உண்மை கூறுவது – என்
காதுகளில் ஒலிக்கிறது...

நிதர்சனங்களை அரங்கேற்ற
நாழிகைகள் கேட்கிறேன்
உண்மைகளை உரைக்க
யதார்த்தவாதிகளைத் தேடுகிறேன்
நீதிக்காக வாதாடும்
உள்ளங்களைக் கேட்கிறேன்
மனிதர்களோடு மனிதம் பேசும்
நேசங்களை யாசிக்கிறேன்
என்தேடல் முற்றுப்பெற்றாலும்
இதயம்

கொள்கையிழக்கத்
தயாரில்லை!




பாத்திமா பர்ஜீஸ் ஆதம்லெப்பை
அக்கரைப்பற்று

# ஆவணம்

பட்சிகளின் பாடலை
ரசிக்காத மனிதரில்லை
புரியாத மொழிகூட
புல்லரித்துப் பாய்கிறது

இறைவனின் அத்தாட்சியில்
இசைகூட ஆவணம்தான்!

அருவியின் கிறல்கள்
கடலோர கீதங்கள்
கலந்திருந்த தென்றலின்
தெவிட்டாத மெட்டொன்று
காதோரம் விழுந்ததில்
லயித்திருந்து மெய்மறந்தேன்



இறைவனின் அத்தாட்சியில்
இதுகூட ஆவணம்தான்!

இரவு தேசத்தை இரசித்துப்
பார்த்தேன்
அடையாள அணிவகுப்பில்
அலங்கார விளக்குகள்
அவற்றோடு தூரத்தில்
மின்மினிப் பூச்சிகள்

விட்டில் சப்தமும்
கூடு தேடும் குருவிகளும்
அழியாத ஆவணத்தின்
அடையாளச் சின்னங்கள்!

மீரா. எம். அஸ்ஹர்
இறக்காமம்

ஆரம்



# மண்ணே உனைக் கண்டேன்

காத்திருந்த கனவுகள் கைகூட
பட்டாம் பூச்சியாய் சிறகடித்து
கற்பனைகள், எதிர்பார்ப்புகள் சுமந்து
பிறந்த மண் நோக்கிப் பயணிக்கிறேன்
தந்தையின் தோள்சாய்ந்து
90 இன் பாதையாத்திரையின் பின்
இது என் முதல் பயணம்

பயணம் தொடர்கிறது,
பாதை நீள்கிறது
ஏக்கமாய் எதிர்ப்பார்ப்புடன்
கேட்கிறேன்
உம்மா! இன்னும் எவ்வளவு தூரம்
இன்னும் இரண்டே மணிநேரம்
"யாழ்பாணம்"
கண்ணில்பட்ட பதாகை வாசகம்
உள்ளத்தில் குதூகலம் செய்கிறது

செல்துளைத்த கட்டிடங்களும்
நீண்டு நிமிர்ந்த பனைகளும்
வெண்மை கலந்த குருத்துமண்ணும்
அத்திவாரம் மிஞ்சாத வளவுகளும்
வலுபிறழாத் தமிழ் மணமும்
பாரம்பரியக் கலையம்சங்களும்
என்னுடன் ஏதேதோ பேசுகின்றன...

அதோ!
22 ஏக்கர் நிலத்தில் யாழ்கோட்டை
பிரமாண்டமாய் காட்சிதருகிறது
துரையப்பா விளையாட்டரங்கம் தாண்டி
அறிவுக் கருவூலமாம்
யாழ் பொதுசன நூலகம் - தான்
எரிக்கப்பட்டாலும் கம்பீரமாய்
எழுந்துநிற்கிறது ... என் ...

அறிவியல் மேதைகளையும்
அணியணியாய் வீரர்களையும்
அள்ளித்தந்த
யாழ் ஒஸ்மானியக் கல்லூரி
ஓய்ந்துபோன கனிமரமாகிய பின்
மீண்டும் துளிர்விட ஆரம்பித்துள்ளது
மிக, மிக மெதுவாகவே

இறைநாமம் ஓங்கியொலித்திட்ட
கலைப் பாரம்பரியங்களுடன் கூடிய
அழகுமிகு பள்ளிவாசல்கள்
சேதங்கள் பல சுமந்து
சோபையிழந்து தவிக்கிறது
புற்புதர்களுடன் சிலந்திவலைகளுடனும்

இது சின்ன கதீஜா;
இங்குதான் நான் கற்றேன்
இது மாமா கற்ற ஒஸ்மானியா...
இது நாங்கள் விளையாடிய மைதானம்...
இது ஸ்கூல் செல்லும் குறுக்குவழி...
இளசுகள் எமக்காய்
விளக்கங்கள் நீள்கின்றன

சோகம் சுமந்த நினைவுப் பரிமாறல்களில்
என்னால் முழுமையாய்
லயிக்க முடியவில்லை
என்றாலும் அவர்களின் உணர்வுகளை
சிறிதேனும் புரிந்திட விளைகிறேன்
ஏனெனில், ஒரு வருடந்தான்
வாழ்ந்தாலும்
நானும் அம்மண்ணின் சொந்தமாயிற்றே!

சத்தியமாய்ச் சொல்கிறேன்
என் மனதில் வரைந்துவைத்த
என் தாய் மண் இதுவல்ல
போருக்குப் பின்னும்
புதுத்தெம்புடன் எழுந்துநிற்கும்
வளம்மிகுந்த
பூமியென நினைத்திருக்கவில்லை

என் மனதில் மெல்லியதாய்
ஓர் ஒளிக்கீற்று
மின்னல் வேகத்தில் தோன்றியது
தாயிகள் களம் குதித்து
இஸ்லாத்தின் அருள் மணக்க
இதுவே
மீண்டும் ஒரு மதீனாவானால்....?

-றமீஸா-

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

QD/28/NEWS/2013

## தனியார் உயர்கல்வி கருத்துக்கணிப்பில்

# 1வது இடத்தை பெற்றுள்ள

# BCAS Campus..

பிரபல வர்த்தக சஞ்சிகையான **LMD**இனால் இலங்கையின் உயர்கல்வி நிறுவனங்கள் தொடர்பாக அண்மையில் நடாத்தப்பட்ட கருத்துக்கணிப்பின்படி தனியார் உயர்கல்வி நிறுவனங்களுள் **1வது** இடத்தை **BCAS Campus** பெற்றிருக்கிறது. இந்த கருத்துக்கணிப்பு **LMD** சஞ்சிகைக்காக **TNS Lanka** என்ற நிறுவனத்தினால், தனியார் மற்றும் அரச சார்பு உயர்கல்வி நிறுவனங்களுக்கு மத்தியில் நடாத்தப்பட்டது.

43 உயர்கல்வி நிறுவனங்களுக்கு மத்தியில் நடாத்தப்பட்ட இந்த ஆய்வில் **BCAS Campus** 4வது இடத்தை பெற்றிருக்கும் அதே வேளை முதல் 3 இடங்களை அரச சார்பு நிறுவனங்களே பெற்றிருக்கின்றன. அந்த வகையில் தனியார்துறை உயர்கல்வி நிறுவனங்களுக்கு மத்தியில் **முதலாவது** இடத்தை **BCAS Campus** பெற்றிருக்கின்றது. உயர்கல்வி நிறுவனம் ஒன்றை தெரிவு செய்கின்ற போது மாணவர்கள் கண்டிப்பாக கவனிக்க வேண்டிய 18 வகையான அம்சங்களின் அடிப்படையிலேயே குறித்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

உயர்கல்வி நிறுவனம் ஒன்றின் நற்பெயரும் சர்வதேச அங்கீகாரமும், கற்றல் வசதிகள், இலகுவான கட்டண அமைப்புகள், தகுதிவாய்ந்த விரிவுரையாளர் குளாம், வெளிக்கள நடவடிக்கை, கற்றல் வளாகச்சூழல், புலமைப்பரிசில்கள், சித்தியடைதல் வீதம் மற்றும் பாடநெறி முடிவில் கிடைக்கும் தொழில்வாய்ப்புகள் உள்ளிட்ட 18 அம்சங்களை அடிப்படையில் தமது தெரிவுகளை மேற்கொள்ளுமாறு இந்த ஆய்வில் கலந்து கொண்ட மாணவர்களிடமும் பெற்றோர்களிடமும் கோரப்பட்டிருந்தது. அவர்கள் வழங்கிய கருத்துக்களின் அடிப்படையிலேயே இந்த தரப்படுத்தல் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது.

**பெருமைக்குரிய இந்த அடைவானது இலங்கையில் தனியார் உயர்கல்வித் துறையில் BCAS Campus கொண்டுள்ள தன்நிகரில்லா சிறப்புக்கும் நம்பகத் தன்மைக்கும் மற்றுமொரு சான்றாகும்.**

**BCAS CAMPUS**
BRITISH COLLEGE OF APPLIED STUDIES

Marketing & Admissions:
32, Dharmarama Road, Colombo 06, Sri Lanka.
Hotline : 011 2559255

| | |
|---|---|
| **City Campus** | 256/2, Galle Road, Colombo 6, Sri Lanka. T: 011 2364458 |
| **Dehiwala Campus** | 106/1, Galle Road, Dehiwala, Sri Lanka. T: 011 2735977 |
| **Kandy Campus** | 344, Peradeniya Road, Kandy, Sri Lanka. T: 081 2224731 |
| **Batti Campus** | 294, 1/4, Trinco Road, Batticaloa, Sri Lanka. T: 065 2228451 |
| **Wayamba Campus** | 103, Dambulla Road, Kurunegala, Sri Lanka. T: 037 2233339 |
| **Jaffna Campus** | 16, Point Pedro Road, Jaffna, Sri Lanka. T: 021 2219910 |
| **Qatar Centre** | No: 36, Al-Ain St, Hilal, Doha-Qatar. T: +974 44366572 |
| **Study Abroad** | 28, Dharmarama Road, Colombo 6, Srilanka. T: 011 2585764 |

www.MacroAdz.com

**BCAS CAMPUS**
BRITISH COLLEGE OF APPLIED STUDIES

*Ranked Among the* **Top 5**

**No.1** Among the Private Institutions

**UK's BTEC HNDs...**
- Computing
- Systems Developement
- Telecom Engineering
- Biomedical Science
- Law
- Quantity Surveying
- Civil Engineering
- Business Management
- Marketing
- HR Management

**UK Top-Up Degrees...**
- BSc (Hons) in Quantity Surveying
- LLB (Hons) in Law
- BA (Hons) in Business Management

**MBA**

www.bcas.lk

ISO 9001 : 2008 CERTIFIED | 14 Years of Trust & Excellence in Higher Education | edexcel | LONDON SOUTH BANK UNIVERSITY | UNIVERSITY OF WOLVERHAMPTON



# தெமடகொட மற்றும் கண்டி கிளைகளில்
## பெண்களின் எதிர்கால சவால்களுக்கு முகம் கொடுப்பதற்கு

**06 மாத கால பாடத்திட்டங்களுக்கு 10 சான்றிதழ்கள் வழங்கப்படும்.**

உடனே பதிவுகளை மேற்கொள்பவர்களுக்கு
**சிக்சாக் தையல் இயந்திரம் வழங்கப்படும்**

- ☑ ஆங்கிலம் திறமையாக கதைப்பதற்கு பயிற்சிகள் வழங்கப்படும்.
- ☑ தேவையான பாடத்திற்கான கனணி பயிற்சிகள் வழங்கப்படும்.
- ☑ குக்கரி / பேஷ்றி / பேக்கரி வகைகள் பயிற்சிகள் வழங்கப்படும்.
- ☑ கேக் தயாரித்தல் மற்றும் வடிவமைத்தலுக்கான விஷேட பயிற்சிகள்.
- ☑ மொண்டசூரி டீச்சர் டிரைனிங்.
- ☑ அழகியற்கலை / சிகை அலங்காரம்.
- ☑ மணப்பெண் அலங்காரம்.
- ☑ தையல் கலை நவீன முறையிலான வேலைகள்.
- ☑ மணவறை அலங்காரம்/மலர் அலங்காரம்
- ☑ திருமண இதழ் அமைத்தல் / நக வ்டிவலங்காரம்



**Apply Now!**

உடனே பதிவுகளை மேற்கொள்பவர்களுக்கு
**20% கழிவுக் கட்டணத்தில்**

**இலவசமாக**



- ★ ஹிப்ழ் முறைப்படி குர்ஆன் ஓதுதல் பயிற்சி
- ★ நிய்யத்துக்கள் மனனம் செய்தல்
- ★ பயான், ஹதீஸ், திக்ர் மஜ்லிஸ்கள் நடைபெறும்.
- ★ இன்மை மறுமை வாழ்வுக்கான நல்ல விடயங்கள்
- ★ திருமணத்திற்காகக் காத்திருக்கும் பெண்களுக்கு சிறந்த குடும்பப் பெண்ணாக திகழ்வதற்கான பயிற்சிகள்.
- ★ நபி(ஸல்) அவர்களின் மனைவியர்கள் வாழ்ந்த முறைகள் பற்றிய விளக்கம்
- ★ இன்றைய காலத்தில் சினிமா, பேஷ்புக், செல்போன், இன்டநெட், ஈமெயில் நாசகார சக்திகளிலிருந்து எப்படிப் பெண்களைப் பாதுகாப்பது பற்றிய விளக்கம்.
- ★ பெண்களின் உடை, நடை, பாவனைகளைப் பற்றிய விளக்கங்கள்
- ★ தினசரி வாழ்வுக்குத் தேவையான முக்கிய விடயங்கள் பற்றிய பயிற்சிகள்

**தூரப்பிரதேசத்திலிருந்து வருபவர்களுக்கு இலவச தங்குமிட வசதிகள் மற்றும் 3 வேளை உணவும் வழங்கப்படும்.**

**HOTLINE - 0711601040**



- ➔ விரைவில் கூடிய சம்பளத்திற்கான தொழில் வாய்ப்பினை பெற்றுக்கொள்வதற்கான பயிற்சிகள்.
- ➔ வீட்டிலிருந்தவாறே கைநிறைய சம்பாதிப்பதற்கான பயிற்சிகள்.
- ➔ தமக்கென்று சொந்தமான தொழில் நிறுவனம் அமைப்பதற்கான தகமையை ஏற்படுத்தல்
- ➔ வெளிநாடுகளுக்கு செல்லவிருப்பவர்களுக்கான தகைமைப் பெற்றுக் கொள்வதற்கும் அங்கு சென்று உழைப்பதற்கும் வீசா பெற்றுக்கொள்வதற்கான பயிற்சிப் பாடத்திட்டமும் நடைபெறும்.
- ➔ குடும்பப் தேவைக்கும் குடும்ப கௌரவத்திற்கும்
- ➔ எதிர்கால சவால்களை மேற்கொள்வதற்கும் மிகப்பொருத்தமான பாடத்திட்டப் பயிற்சிகள்

இப்பொழுது அனுமதிகள் நடைபெறுகின்றன உடனே, பதிவுகளை மேற்கொள்பவர்களுக்கும்
மேற்குறிப்பிட்ட எல்லாப் பாடங்களையும் மேற்கொள்பவர்களுக்கும்
இலவசமாக ரைவிங் பயிற்சியும் ரைவிங் லைசனும் பெற்றுக்கொடுக்கப்படும்
(பெண் சாரதியுடன் பெண் பாதுகவலர் வசதியும் வழங்கப்படும்)

**LONDON College of Islamic Ladies Centre**
No. 176, Kolonnawa Road, Dematagoda.
Hotline - 0774 833444 / 0114 384462

**Kandy**
0711 601050
0775 492944
0779 323131

Nugegoda - 0711 601060 / Dehiwala - 0712 357412 / Bambalapitiya - 0112 552877

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Printed at IPC PRINTING PRESS, 23, De Vaas Lane, Grandpass, Colombo 14.